www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් மே.30-ஜூன் 05,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 311

## பின் தளம் விரிக்கும் போர் உத்தி

## அம்மையாரின் அறிவிப்பும் நேர் எதிரான நிலவரமும்



## வன்னியில் மாணவர்களுக்கு தொல்லையா?





## படையப்பா வில்லிக்கு நள்ளிரவில் அதிர்ச்சி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நிதி எங்கே போகிறது?

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

யாழ் குடாநாட்டுக்கான
மின் விநியோக நிதியில்
60 கோடி ரூபா
தெற்கிற்கு மாற்றப்பட்டுள்ளது!
இது யாழ் குடாநாட்டுக்கு
ஒதுக்கப்பட்ட நிதியில்
60 வீதமாகும்!

இதனை ரெலோ முதல்வரும்
வல்வை நகர சபைத் தலைவருமான
சிவாஜிலிங்கம்
அம்பலமாக்கியுள்ளார்.

அதற்காக அவரைப்
பாராட்டியே ஆகவேண்டும்!

இந்த நிதி மட்டுமல்ல
யாழ் குடாநாட்டுக்கு
ஒதுக்கப்படுவதாக
ஆரவாரமாக அறிவிக்கப்பட்ட
வேறு பல நிதிகளும்
மீளப் பெறப்பட்டுள்ளன!

இந்த நிதி ஒதுக்கீடுகள்
பற்றி பெரிதாக
செய்திகள் வெளியானபோதே
முரசு எச்சரித்திருந்தது!

ஆரவாரங்கள் போதாது
என்று, சில
தமிழ்க் குழுக்களும்
பக்க வாத்தியம் இசைத்திருந்தன!

தாம் கேட்டுக் கொண்டதால்
குடாநாட்டுக்கு
நிதி ஒதுக்கீடு கொட்டுகிறது
என்பது போல
தமது பங்குக்கு
பத்திரிகைகளுக்கு கூறியிருந்தன!

அதே கட்சிகள்
இப்போது ஒதுக்கிய நிதி
மீளப் பெறப்படுவதையிட்டு
மூச்சுக் காட்டவில்லை!

யாழ் மாவட்ட எம்.பிகள்
உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள்
போன்றோரும்
வாய் திறக்காதுள்ளனர்!

குடாநாட்டை அபிவிருத்தி
செய்வதற்காகவே
உள்ளூராட்சித் தேர்தலில்
போட்டியிடுவதாக
தமிழ்க் குழுக்கள்
கூறியிருந்தன!

உள்ளூராட்சித் தேர்தலை
உதாரணம் காட்டி
ஏராளமான நிதியை
அரசு வெளியுலகில் இருந்து
பெற்றுள்ளது!

அவ்வாறு பெற்ற நிதியை
இடது கையால் கொடுத்து
வலது கையால் எடுத்துள்ளது!

இடது கை கொடுப்பது
வலது கைக்கு தெரியாதளவுக்கு
உதவுவது பெரும் தன்மை!

ஆனால் இங்கு நடப்பது
நேர்மாறாக இருக்கிறது!
இடது கையால்
உலகறிய கொடுத்துவிட்டு,
வலது கையால்
உலகறியாமல் எடுக்கிறார்கள்!

இப்படித்தான் நடக்கும்
என்று 'முரசு'
திரும்பத் திரும்ப
குறிப்பிட்டு வந்தது!

இது ஏதோ
சிதம்பர இரகசியத்தை
அறியும் விடயமல்ல.

கடந்த கால அனுபவம்,
இன்றைய அரசு பற்றிய
கணிப்புக்கள், கண்டறிதல்கள்
என்பவைதான்
எமக்கு கற்றுத் தருகின்றன!

தமிழ்க் குழுக்களுக்கும்
இவை தெரியும்!

உண்மையைச் சொன்னால்
தங்கள் முகங்களும்
சேதமாகும் என்று பயம்!

ஆகவேதான், அரசு
வலதுகையால் எடுப்பதை
அறியாதது போல
அமைதி காக்கிறார்கள்!

வடக்கு-கிழக்குக்கு
என்று ஒதுக்கப்பட்ட
பல ஆயிரம் கோடி நிதி
சென்ற ஆட்சியிலும்
தெற்கிற்கு திருப்பப்பட்டது!

இந்த ஆட்சியிலும்
அதே கதைதொடர்கிறது!

இவ்வாறான காரியங்களில்
பொ.ஐ. முன்னணியும்
ஐ.தே. கட்சியும்
இணக்கம் கொண்டுள்ளன!
இத்தகைய இணக்கத்தைத்தான்
எதிர்பார்க்கவும் முடியும்!

தமிழ்க் குழுக்கள்
இத்தகைய இணக்கத்தையும்
தீர்வுக்கான படிக்கல்லாக
புழுகி உரைக்கக்கூடும்!

அந்தளவுக்கு
தமிழ் பேசும் மக்களை
முட்டாள்களாக
நினைக்கத் தொடங்கியுள்ளன
தற்போதைய தமிழ்க் குழுக்கள்!

அபிவிருத்திகளில்கூட
இடது கையால் கொடுத்து
வலது கையால் எடுப்பவர்கள்
அதிகாரப் பகிர்வை
தாமாக முன்வந்து தருவார்கள்
என்று எதிர்பார்க்கலாமா?

எனவே, இப்போது,
'அரசியல் தீர்வுக்கான
பேச்சை ஆரம்பி!'
'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை
உடனே அழை!"
என்று ஒரே குரலில்
தமிழ பேசும் தரப்பு
கோருவதே கட்டாயமாகும்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

# ஆன்மீகம்

## குருவின் உபதேசம்

உண்மையைப் பேசு! அறத்தைச் செய்! குருவுக்கு காணிக்கை கொணர்ந்து கொடுத்தபின் சந்ததி என்ற நூல் அறுபட்டு போகாமல் காப்பாற்றுவாயாக! உண்மையினின்று வழுவாதே! அறத்தினின்றும் வழுவாதே. நலனை புறக்கணிக்க வேண்டாம். ஓதுதலும், ஓதுவித்தலும் மறக்க வேணடாம். தேவர்களுக்கும், முன்னோர்களுக்கும் செய்ய வேண்டியதை மறக்க வேண்டாம். தாயைத் தெய்வமாகக் கருது. தகப்பனை கடவுளாகக் கருது. ஆசார்யனைத் தெய்வமாக நினை. எந்த செயல்கள் குற்றமற்றனவோ அவையே நீ செய்யத் தக்கவை. நல்ல நடத்தையை பின் பற்றுவாயாக, கொடுப்பதைச் சிரத்தையுடன் கொடுக்க வேண்டும். அசிரத்தையாகக் கொடாதே! தாராளமாகக் கொடுக்கப்பழகு. அதை அடக்கத்துடன் கொடுக்க வேண்டும். பயத்துடன் கொடுக்க வேண்டும். அன்புடன் கொடுக்க வேண்டும்.

செய்யும் கருமங்களிலேனும் நடக்கும் முறையிலேனும் உனக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்படும்போது, விவேகமும், தருமத்தில் பற்றும் இரக்கமும் கொண்ட அறவோர்கள் அவ்விஷயங்களில் எவ்வாறு நடந்து கொள்கிறார்களோ! அவ்வாறே நீயும் செய்வாயாக. இதுவே முறை- இதுவே உபதேசம். இதுவே வேதத்தின் பொருள் விளக்கம். இதுவே கட்டளை. இப்படி நீ நடப்பாயாக.

ஒரு நாட்டில் கல்வி கற்றவர்கள் எல்லாரும் மேற்கண்டவாறு உண்மையே பேசி, தரும வழியில் நின்று, ஓதுதலை விடாமல் வாழ்க்கை நடத்தினார்களானால் பின் அந்த நாட்டுக்கு வேறு என்ன வேண்டும்! தொகுப்பு: கொல்லந்தை எஸ்.என். ராஜரட்ணம்.



## அல்லாஹ்வின் நியதி

ஒரு மனிதர் அண்ணல் நபியிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! என் தந்தை என் விருப்பத்திற்கு மாறாக என் பணங்களை எடுத்துச் செல்கிறார் இதை நான் விரும்பவில்லை" என முறையிட்டார்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அம்மனிதரின் தந்தையை அழைத்து வரச் செய்தார்கள். முடி நரைத்த முதியோர் ஒருவர் அங்கு வந்து நின்றார். அவரது மகனின் முறையீட்டைப் பற்றி அவரிடம் விசாரித்தார்கள்.

அப்போது அவ் வயோதிபர் "யாரசூலுல்லா ஒரு காலத்தில் என் மகனான இவன் உழைப்பின்றி ஊர் சுற்றித்திரிந்தான். அந் நாளில் நான் செல்வந்தனாக இளமையோடு இருந்தேன். என் செல்வங்களை எல்லாம் அவன் அனுபவித்தான். அதற்கு நான் தடை போடவில்லை.

இன்று என் மகன் செல்வந்தனாகி விட்டான். என்னிடமோ எதுவுமே இல்லை. கஷ்ட வாழ்க்கை. இந்நிலையில்தான் அவன் பணத்தை தேவைக்கேற்ப அவனிடமிருந்து எடுத்துச் செல்வேன் " என்றார்.

இதைக் கேட்ட இறைதூதர் அந்த முதியோரின் மகனை நோக்கி "நீரும் நீர் பெற்ற செல்வமும் உமது தந்தைக்குரியதே. தனயனின் செல்வத்தில் தந்தைக்கு பங்குண்டு. அதுவே அல்லாஹ்வின் நியதி" என்றார்கள்.

தொகுப்பு:-எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல. 308

### பரிசுக்குரிய கவிதை

### நேற்று, இன்று, நாளை!

நாளைக்கே விடிவு வரும்
நாமிருந்து பார்ப்போம்!
வேளைக்கே உணவு வரும்
வீட்டில் வாழ நீதி வரும்!
ஆளுக்காள் அகதி எனும்
இந்த நிலை மாறிவிடும்!

த.சிவகுமார்-(ஈச்சையூர்ச் சிவா)



**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### கொடிகள்?

இவர்கள்
மரம்பற்றிவாழும்
கொடிகள் அல்ல;
நம்பிக்கை தளராத
நாளையப் பூக்கள்.

ந.ரதீஸ்வரன்-
பிரதானவீதி, தம்பிலுவில்-02.

### யாரறிவார்?

பிஞ்சு நெஞ்சென்பார்,
பஞ்சென்று கொஞ்சுவார்.
கஞ்சிக்காக நாம்-
காத்திருப்பதை யாரறிவார்?

ஏ.ஓ.எம்.சமீம்-புத்தளம்.

### மாநாடு

"இது தமிழ் கட்சிகளின்
கூட்டல்ல-!
இளம் தமிழர்களின்
மாநாடு!!

அ.சுதர்சன்-கல்லடி-வேலூர்,
மட்டக்களப்பு.

### விதியின் கையில்!

அன்று
குரு குலத்தில்
போருக்கு பஞ்ச பாண்டவர்!
இன்று!!
குட்டித் தீவில்,
போரால்
இவர்கள் பஞ்ச(ப்)
பாண்டவர்!

எம்.வேல்முருகன்- இ/பின்னவலை
த.வி; பலாங்கொடை.

### மனித உரிமைகள்

குழுவாம்
தீர்வுப் பொதியாம்
சமாதானத்திற்கு
யுத்தமாம்
இதற்கெல்லாம்
யாராவது
அர்த்தம்
சொல்லுங்களேன்!

திருமதி.புவனேஸ்வரி-பன்னீர் செல்வம்,
பசறை.

### ஓடுங்கள்!

இளமையில்
வறுமை கொடிது!
இருந்து பேசினால்
வருமா முடிவு?

மு.பெ.ஜெயராஜ்-
ஹெரொப்டன்.

## கவிதைப் போட்டி இல.311



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 05.06.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.311
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### கடிதம்

எழுதிடுவோம் கடிதமொன்று
யாருக்கு? என்னவென்று?
நாங்களும் மனிதர்கள் என்று
உணராதவர்க்கு!

எம்.சோமதாசன்- செல்வநாயகபுரம்,
திருகோணமலை.

### விதி

இனி ஒரு விதி
செய்வோம்!
எந்நாளும் காப்போம்!
ஐந்தாகக் கூடியினி
அகிலத்தை
ஏய்க்கோம்!

கவிஞர் 'திக்கவயல்' அம்பாறை.

### வெகுமதி!

போரின் வெகுமதியை
இனங்காட்டக்கூடினோம்
சட்டையில்லா
தி(ர்)வா(ர)ண மாநாடு


செழியன் ஜே.பேரின்பநாயகம்-
10 முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

# வாசக(ர்)சாலை

அன்பு மலரே!

விளையாட்டப்பா, காரப்பா, அடேயப்பா, ஜீன்ஸப்பா என்றெல்லாம் தலைப்புக்களைப் போட்டு அசத்தி விட்டாயே முரசப்பா! உன்னில் உள்ள அத்தனை அம்சங்களும் ஜோரப்பா! அதிலும் ஆரம்பமே அசத்தலாக வரும் 'கையில் சிக்கிய மின்னல்' தொடர்கதை ரொம்ப தூளப்பா! எல்லா நேயர்களின் ஆக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவற்றை பிரசுரிக்கும் உன் பண்பே உன்னில் உள்ள சிறப்பப்பா!

அ.லெமு.உவைஸ்,
காத்தான்குடி-01.







அன்பின் முரசுக்கு!

எனது வாழ்த்துக்கள் 'கையில் சிக்கிய மின்னல்' புதிய தொடர்கதை ஆரம்பமே அசத்தல்.

நடிகை ஸ்ரீ வித்யாவின் வாழ்க்கைத் தொடர் வாசிக்கும் எமக்கும் வேதனையின் சுமையாகவுள்ளது. அனைத்தம்சங்களையும் தெளிவுறத் தந்து எம்மை இன்புறச் செய்யும் உமக்கு எமது வாழ்த்துக்கள்.

நமணி, அபிராமி, பவித்ரா, விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.

முரசே,

வாசகர்கள் அள்ளி அருந்திட சுவையான அம்சங்களை வெளியிட்டு வருகிறாயே உன்னை எப்படித் தான் வாழ்த்துவதென்று தெரியவில்லை. உன்னை அள்ளிப் பருகுகின்றவர்களில் நானும் ஒருத்தி.

து.ச.மதி, கந்தப்பளை.

### கன்னீரில் கரைந்த வாழ்க்கை

டயானாவின் பிறப்பு முதல், இறப்புவரை ஒரு சோகமான வாழ்க்கையே டயானாவின் வாழ்வில் பல, பெயர்-புகழ் வந்திருந்த போதும் அந்தப் பெயர், புகழின் பின்னணியில் இருந்ததெல்லாம் துன்ப துயரமே. நிறைந்து கிடக்கிறது.

டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' என்பதை விட 'கண்ணீரில் கரைந்த வாழ்க்கை' என்பதே பொருத்தம். அதனை சிறப்பாக தருகின்ற புவனாவுக்கும், தினமுரசுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

ஏ.ஏ.சிபுனிஸ்,
பூ.எம்.எம்.ஏ.வீதி,
குச்சவெளி.

அன்பின் முரசே!

மூக்கணாங் கயிறுகள் மாற்றப்படுவது மாடுகளுக்கு மகிழ்ச்சி தராது. அது போல் இன்று ஆட்சிகள் மாறி இருக்கலாம். ஆனால் முன்னைய அரசு எம்மீது திணித்த அதே அடக்குமுறைகள் போல் பலமடங்காக இன்றைய அரசு எம்மீது திணித்துக் கொண்டு இருக்கிறது.

எமது வாக்குகள் பெற்று எமது பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்ளும் தமிழ் கட்சிகள் பத்திரிகைகளுக்கு அறிக்கைகளை விட்டுக்கொண்டு எம்மை ஏமாற்ற நினைக்கின்றனர்.

த.அபி, சாம்பல்த்தீவு,
திருமலை.

### கட்டமும் வட்டமும்

யாழில் உள்ளூராட்சித் தேர்தலில் வேண்டா வெறுப்பாக போட்டியிட்டதாகக் கூறிய தமிழ்க் கட்சிகள், இப்போது கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தக் கோருவது எதற்காக? நாம் மறந்துவிட்டோம் என்று நினைத்துவிட்டனரா? அரசு படிப்படியாக தமிழ் மக்களை இராணுவத்தீர்வால் வெற்றி கொள்ள போதிய கால அவகாசம் கொடுக்கின்றன தமிழ்க் கட்சிகள். அதனால்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையை அடக்கி வாசிக்கின்றன.

கட்டம் கட்டமாக பதவிகளை அனுபவித்து தமிழினத்திற்கு இறுதியில் பெரியதொரு வட்டத்தைக் கொடுக்க திட்டமிடுகிறார்கள். பாராளுமன்ற பதவிகள், மாகாண முதல்வர் பதவி- பின்னர் மத்திய அரசில் அமைச்சர் பதவி இவைதான் தமிழ்க் கட்சிகளது பல கட்டக் கனவுகள்.

இ.செல்வேந்திரன், காரைதீவு.

### ஜே.வி.பியும் தமிழ்க் கட்சிகளும்

ஜே.வி.பி எழுச்சியுடன் தமிழ்க் கட்சிகளது வீழ்ச்சியை ஒப்பிட்டு இராஜதந்திரி அலசியிருந்தது முற்றிலும் உண்மை. புலிகள்மீது பழியைப் போட்டுவிட்டு சகல கொள்கைகளையும் குழிதோண்டிப் புதைக்கின்றன தமிழ்க் கட்சிகள். ஜே.வி.பியின் தலைமைத்துவம் போன்ற ஒரு தலைமையைக்கூட இந்தத் தமிழ்க் கட்சிகளால் உருவாக்க முடியவில்லை. காரணம், இவற்றுக்கு பாராளுமன்றமே சொர்க்கமாகத் தெரிகிறது. கட்சிகள் நடத்துவதே அதற்காகத்தானே?

சி.குருநாதன், கொழும்பு-06.

### கோகிலா

தமிழக தலைச் சிறந்த எழுத்தாளர் ஜெயகாந்தனின் 'கோகிலா என்ன செய்து விட்டாள்' தொடராக முரசில் வருவது தித்திப்பான விஷயம். ஆண்-பெண் உறவுகளை போலியான குறுகிய வட்டங்களுக்குள் இருந்து வெளியே கொண்டுவரும் முற்போக்கான கதைகள் இன்று அவசியம்.

செல்வி கா.வேணி, கொழும்பு.

### கால்பங்குகூட கிடையாது

மே தினம் என்றால் என்னவென்றே தெரியாத ஒருவர் இடதுசாரிக்கட்சி என்று முன்பு கூறப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப்.க்கு தலைவராக இருக்கிறார். இந்த இலட்சணத்தில் இவர்கள் புரட்சிகரமான சிந்தனைகளை வளர்ப்பது எப்படி? ஜே.வி.பியின் நிலைப்பாடுகள் சில தவறாக இருப்பது உண்மையே. ஆனால் புரட்சிகரமாக எதையாவது சிந்திக்க வேண்டும், செய்ய வேண்டும் என்பதில் அவர்களுக்குள்ள உறுதியில் கால் பங்குகூட இத்தமிழ்க் கட்சிகளுக்குக் கிடையாது.

வி.இராசதுரை, யாழ்ப்பாணம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.


படிப்பகம்

www.padippakam.com

# இனக்கலவரத்தை தூண்ட சதி!

## தமிழர்களுக்கு எதிராக தீவிர பிரசாரம்

நாட்டில் இனக்கலவரம் ஒன்றை தூண்டுவதற்கும், தமிழ் மக்களை அச்சுறுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மலையகத்தில் இ.தொகாவின் மேதின ஊர்வலத்தை குழப்ப முயற்சித்த சம்பவத்தோடு இனக் கலவரத்தை தூண்டும் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ளன.

இ.தொ.கா.கூட்டத்தை குழப்பியோர் யார் என்று தெரிந்தும் இதுவரை அரசாங்கம் எத்தகைய உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சம்பந்தப்பட்ட எவரும் கைதாகவில்லை.

அமைச்சர் தொண்டமானுக்கு எதிரான முக்கிய மூத்த அமைச்சர் ஒருவரே மலையக கூட்டத்தை குழப்பும் நடவடிக்கைக்கு பின்னணியில் இருந்துள்ளார்.

இச் சம்பவத்தில் வீரவிதான என்னும் அமைப்புக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது. இந்த அமைப்புக்கு குறிப்பிட்ட அமைச்சரே முக்கிய ஆலோசகராக இருக்கிறார் என்று சிங்களப் பத்திரிகை ஒன்றும் தகவல் வெளியிட்டிருந்தது.

அதேசமயம் ஐக்கிய தேசியக் கட்சியினரும் குறிப்பிட்ட அமைச்சரின் தொண்டா எதிர்ப்பையும், வீரவிதான இயக்கத்தையும் பயன்படுத்தி வருகின்றனர்.

### பின்னணியில் தொண்டாவுக்கு எதிரான அமைச்சர்?

வீரவிதான அமைப்பு கொழும்பில் நடத்திய பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பேருந்துகளிலும் மக்கள் அழைத்து வரப்பட்டனர்.

#### ஆதரவாளர்கள்

ஆர்ப்பாட்டத்தில் குறிப்பிட்ட அமைச்சரின் ஆதரவாளர்கள் சிலரும், ஐ.தே.கட்சி ஆதரவாளர்களும் காணப்பட்டனர்.

'வீரவிதான இயக்கம்' தவிர வேறு பல பெயர்களிலும் பேரினவாத அமைப்புகள் தமிழர் விரோதப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

'பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு செயற்பட்டு வருகிறது. யுத்தத்தின் மூலமே இந்நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியும் என்று அந்த இயக்கம் பிரசாரம் செய்து வருகிறது. ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றையும் இந்த இயக்கம் மும்முரமாக நடத்தி வருகிறது.

பௌத்த மதகுருமார்களே வீரவிதான இயக்கம், பயங்கரவாதத்துக்கு எதிரான இயக்கம் போன்றவற்றில் முன்னணியில் நிற்கின்றனர்.

#### மறுபடியும்

1958, 1977, 1983 போன்ற ஆண்டுகளில் இனக்கலவரங்கள் வெடிப்பதற்கு சிங்கள இனவாத அமைப்புக்களே தூண்டுகோலாக இருந்தன. தற்போது மறுபடி அத்தகைய அமைப்புக்கள் தலைதூக்கியுள்ளன. வேகமாக வளர்ந்தும் வருகின்றன.

இதனையிட்டு அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ளாது இருப்பது தமிழ் மக்களிடையே அதிருப்தியை உருவாக்கியுள்ளது.

அது மட்டுமன்றி 'தொண்டாவை எதிர்ப்பது' என்ற போர்வையில் இனவாத அமைப்புக்களுக்கு ஊக்கம் தந்துவரும் தமது அமைச்சர் தொடர்பாகவும் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதையிட்டு இ.தொ.கா. வட்டாரங்களும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

## மாணவர் பகிஸ்கரிப்பு! மீனவர் உண்ணாவிரதம்!

### கட்சிகள் மௌனம்! கெடுபிடிகள் தீவிரம்

யாழ் குடாநாட்டில் புதிய கெடுபிடிகள் படையினரால் கொண்டுவரப்படுகின்றன.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் தமக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தியே புதிய கெடுபிடியான விதிகளை படையினர் அமுல் செய்கின்றனர்.

(நமது நிருபர்)

பத்துவயதுக்கு மேற்பட்டோருக்கு பாஸ் வழங்கும் நடைமுறை சமீபத்தில் கொண்டு வரப்பட்டது தெரிந்ததே.

தற்போது வீட்டுக்கு வீடு குடும்ப அங்கத்தவர்களது புகைப்படங்களை தொங்க விடுமாறு படையினர் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து யாழ் குடாநாட்டு மக்கள் கடும் விசனமடைந்துள்ளனர்.

"கேட்க நாதியில்லை என்று தெரிந்து கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. தமிழ்க்கட்சி பிரதிநிதிகள் என்று இருப்பவர்கள் வாய்மூடி நிற்கின்றனர்." என்று அரச சார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்த பிரதி நிதியொருவர் கவலை தெரிவித்தார்.

#### சிறைக்கூடம்

"யாழ் குடாநாடு திறந்தவெளி சிறைக்கூடமாக மாறிவிட்டதற்கு இதனைவிட வேறென்ன அத்தாட்சி தேவையாக இருக்கிறது? இதன் பின்னரும் மௌனமாக இருப்பவர்களை அரசியல் கட்சிகள் என்று நாம் எப்படி அழைப்பது?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மாணவர்கள் தாமாக போராடுகின்றனர். மீனவர்களும் தமது பிரச்சனைக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி சில தேவைகளை நிறைவேற்றியுள்ளனர். இங்குள்ள கட்சிகளுக்கு வேறு என்ன வேலை இருக்கிறது? என்றும் அவர் கேள்வி எழுப்பத் தவறவில்லை.

"குடும்ப அங்கத்தவர்களின் படங்களை தொங்கவிடுமாறு கோருவது போன்ற நடவடிக்கைகள் மூலம் குடாநாட்டில் மக்கள் அனைவரையும் படையினர் அந்நியராக்குகிறார்கள். இதனால் எங்களையும்தான் மக்கள் வெறுப்பார்கள்" என்று தமிழ்க்கட்சி ஒன்றின் பிரமுகரும் கவலை தெரிவித்தார்.

"இவற்றை எதிர்த்தால் படையினருக்கும் எமக்கும் கசப்புணர்வே தோன்றும். ஆகவே எனது பெயரைக் குறிப்பிட வேண்டாம்." என்றும் அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சர் திறந்துவைத்த பழைய கட்டடங்கள்!

மே 22, 23ந் திகதிகளில் அமைச்சர் அஷ்ரப் திருக்கோணமலையில் ஒரு நடமாடும் சேவையை நடத்தினார்.

இதில் ஒரு நிகழ்ச்சியாக பதினொரு பாடசாலைகளுக்கான புதிய கட்டடத் திறப்புக்களை அதிபரிடம் கையளிக்கும் நிகழ்ச்சியும் அமைந்திருந்தது.

உண்மை என்னவென்றால் சகல கட்டடங்களிலும் ஏற்கனவே வகுப்புகள் இயங்கி வந்திருக்கின்றன. பல கட்டடங்கள் ஓராண்டுக்கும் கூடுதல் பழமையானவை.

முதல்நாள் மேற்படி பாடசாலை அதிபர்கள் தத்தமது கட்டடத் திறப்புக்களை உறையில் போட்டு ஒட்டி கல்வித் திணைக்களத்தில் கையளித்தனர். அடுத்தநாள் ஆடம்பரமாக மேடையில் வைத்துப் பெற்றுக்கொண்டர்.

## செம்மணிக்கு சர்வதேச நிபுணர்கள்

### காணாமல்போனோர் சங்கம் சந்தேகம்

செம்மணி புதைகுழிப் பகுதிக்கு சர்வதேச நிபுணர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று நீண்டகாலமாக கோரப்பட்டு வந்தது.

அப்போது அதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நீண்ட காலம் கழித்து தற்போது திடீரென்று சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. செம்மணியில் தடயங்கள் அகற்றப்பட்டதா என்பதை கண்டறியவே சர்வதேச நிபுணர்களை அழைக்குமாறு கோரப்பட்டது.

ஆனால் கடும் மழை பொழிந்து, வெள்ளம் பாய்ந்தும், தேங்கியும் முடிந்த பின்னர், தடயங்கள் அகற்றப்பட்ட அறிகுறிகளும் மறைந்து போயிருக்கும். அது தவிர உள்ளூர் நிபுணர்களும் முன்னர் அப்பகுதிக்கு தனியாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

தடயங்கள் அகற்றப்பட்ட அடையாளங்களைக் கண்டு பிடிக்க முடியுமா என்று நோட்டம் பார்த்துவிட்டுத்தான் சர்வதேச நிபுணர்களை அழைகக முடிவு செய்யப்பட்டதா? என்று காணாமல் போனோர் சங்கத்தினர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே சர்வதேச மன்னிப்புச்சபை அனுமதி கேட்டபோது மறுத்த அரசாங்கம் தற்போது தானாக முன்வந்து அழைத்திருப்பது குறித்தே அவர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இதேவேளை துரையப்பா அரங்க புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் விவகாரம் அப்படியே அமுங்கிப்போய்விட்டது.

இது குறித்து அரசாங்கம் எவ்வித கரிசனமும் காட்டவில்லை. இத்தகைய நிலையில் செம்மணி விவகாரத்தில் உண்மைகள் முடி மறைக்கப்படும் என்றே எண்ணவேண்டியுள்ளது." என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

## தமிழீழ மக்கள் கட்சி உதயம்– பத்திரிகையும் வெளியீடு

'தமிழீழ மக்கள் கட்சி' என்னும் புதிய அமைப்பு அண்மையில் உருவாகியுள்ளது.

இந்த அமைப்பினர் 'தமிழீழம்' என்னும் பிரசார பத்திரிகையையும் வெளியிட்டுள்ளனர். புளொட் அமைப்பில் இருந்து நீண்ட காலத்திற்கு முன்னர் பிரிந்த அணியினர் 'தீப்பொறி குழுவினர்' என்ற பெயரில் இயங்கி வந்தனர்.

அவர்களும் தமிழீழ மக்கள் கட்சியில் இருக்கின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எஃப்., என்.எல்.எஃப்.ரி போன்ற அமைப்புக்களில் இருந்து பல ஆண்டுகளுக்கு முன்பாக பிரிந்து சென்ற சிலரும் இவ்வமைப்பில் அங்கம் வகிப்பதாக தெரிகிறது.

இரகசியமாக இயங்கவே இவர்கள் முடிவு செய்துள்ளனர். இவர்களது பிரசார பத்திரிகை அரசியல் முக்கியஸ்தர்கள், பத்திரிகையாளர்கள், முன்னாள் பேராளிகள் போன்றோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## நியாயமான தீர்வுக்கு ஆதரவில்லை!

கடந்த ஐந்து மாகாண சபைத் தேர்தலின்போது கருத்துக் கணிப்பு ஒன்றை பேராசிரியர் ஹெட்டிகே என்பவர் நடத்தியிருந்தார்.

அந்த ஆய்வு முடிவுகள் மேலோட்டமாகப் பார்த்தால் அரசியல் தீர்வுக்கு சாதகம் போல தோன்றுகின்றன. ஆனால் நியாயமான தீர்வுக்கு தென்னிலங்கையில் குறிப்பிடத்தக்க ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு முக்கியமா? இராணுவத்தீர்வு முக்கியமா? என்ற கேள்விக்கு 66 சதவீதத்தினர் அரசியல் தீர்வு என்று பதிலளித்துள்ளனர்.

ஆனால் அதிகாரப் பகிர்வு தேவையா? என்ற கேள்விக்கு 48 வீதத்தினர் 'ஆம்' என்றும் அதேயளவான வீதத்தினர் 'இல்லை' என்றும் பதிலளித்துள்ளனர் என்பதே முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறுவது மட்டும் சரியான நிலைப்பாடாக அமையாது. கௌரவமான தீர்வை வழங்க முன்வருவார்களா என்பதே முக்கியமானது.

அவ்வாறு நோக்கும்போது நியாயமான தீர்வுக்கு ஆதரவும், எதிர்ப்பும் சரிசமமாக உள்ளது என்பதையே பேராசிரியரது கருத்துக் கணிப்பு சுட்டிக்காட்டுகிறது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று இல்லாமல், இந் நாட்டுக்குள் இனப்பிரச்சனையை தீர்க்க முடியாது என்பதையே இக் கணிப்பும் வெளிக்காட்டியுள்ளது.

## கதிர்காமர் சூறாவளி சுற்றுப் பயணம்

### புலிகளுக்கு எதிராக பிரசாரம்

அமைச்சர் கதிர்காமர் இந்தோசீன நாடுகளுக்கு பத்து நாட்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

சிறீலங்கா அரசுக்கு விரோதமான ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடும் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித ஆதரவும் வழங்க வேண்டாம் என்று ஆங்காங்குள்ள பாதுகாப்பு அமைச்சர்களிடமும், இராணுவ அதிகாரிகளிடமும் கோரிக்கை விடுத்து வருகிறார்; அமைச்சர் கதிர்காமர்.

அண்மையில் வியட்நாம் நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ங்குயன் மான் கம்மை அமைச்சர் சந்தித்துள்ளார். சிறிலங்காவுக்கு எதிராக தமது நாட்டில் எத்தகைய நடவடிக்கையும் இடம்பெற அனுமதிக்கப்போவதில்லை என்று வியட்நாம் அமைச்சர் உறுதியாகச் சென்னாராம்.

#### விற்பனை

வியட்நாம் நீண்டகாலமாக அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றி கண்ட நாடு. அந்நாட்டின் மேற்கேயுள்ள கம்போடியா, உள்நாட்டுப் போர்களில் சிக்கிச் சீரழிந்த நாடு.

இந்நாடுகளில் தொடர்ந்து நடைபெற்று வந்த போராட்டங்களில் பயன்படுத்தப்படுவதற்காக மேற்கத்தைய நாடுகள் பலவும் சீனாவும் ஏராளமான ஆயுதங்களைக் குவித்தன.

அத்தகைய ஆயுதங்களின் பெரும் தொகையானவை இன்றும் அந்நாடுகளின் போராளிகள் வசம் உள்ளன. இத்தகைய ஆயுதங்கள் மிக மலிவான விலையில் கொள் முதல் செய்யப்பட்டு இலங்கையின் வடக்கு-கிழக்குக் கடலோரங்களுக்குக்கொண்டு செல்லப்படுகின்றன.

இந்நாட்டு இராணுவ உயர்பீட அதிகாரிகளுக்கு இந்த உண்மை தெரிந்தும், பிரத்தியேகமாகப் பணம் சம்பாதிப்பதில் நாட்டம் கொண்ட அவர்கள் கண்டும் காணாமல் இருந்து விடுகின்றனர் என்று 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## படையினர் வட பகுதிக்கு விரைவு!

கடந்த சில தினங்களாக கிழக்கின் பெரும்பாலான பகுதிகளிலிருந்தும் ஒரு சில பெரும்பான்மை இனப் பகுதிகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான படையினர் வடபகுதிக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அனுராதபுரம் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட பஸ் வண்டிகளிலும் மற்றும் படையினரின் வாகனங்களிலும் இவர்கள் விரைகிறார்கள். இதே போல் மாதுறு ஓயா இராணுவப் பயிற்சிப் பாடசாலைகளிலிருந்தும் வெளியேறிய புதிய அணியினர் வட பகுதிக்கு அனுப்பப்படுகிறார்கள்.

தென் பகுதியில் தேர்தல் வெற்றிக்காக வடபகுதியில் இருந்து போர்முனை வெற்றிச் செய்திகள் கிட்டும் என ஆளும் அரச தரப்பு எதிர்பார்த்திருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளின் ஆயத்தங்களே படைக் குவிப்பு என்று கருதப்படுகிறது.

## தவறு திருத்தம்

கொழும்பு பம்பலப்பிட்டியில் ரெலோ உறுப்பினர்கள் இருவரும் வர்த்தகர் ஜெயக்கொடியும் சுட்டுக் கொல்லப்பட்டனர். குறிப்பிட்ட இடத்திற்கு ரெலோ பிரமுகர்கள் செல்வதை முன்கூட்டியே தகவல் கொடுத்தவர் வர்த்தகர் ஜெயக் கொடி என்றே சந்தேகிக்கப்படுகிறது.

இது பற்றி கடந்தவாரம் வெளியான செய்தியில் 'பணத்தையும் பெற்றுவிட்டு கொன்றுவிட்டார்களே' என்று ஜெயக் கொடியின் மனைவி கதறியதாக குறிப்பிட்டிருந்தோம். ஜெயக்கொடியின் சகோதரி என்பதே சரியானது. தவறுக்கு வருந்துகிறோம்.

## குறிவைத்துத் தாக்குதல்!

### புலி என்று சந்தேகம்

மட்டக்களப்பு-வாழைச் சேனையில் பரபரப்பை ஏற்படுத்திய ஆட்கொலை பற்றி தற்போது சில தகவல்கள் வெளிப்பட்டுள்ளன.

சுட்டுக் கொல்லப்பட்ட க.ஜெகநாதன் (22) மின்னிணைப்பு வேலைகளைச் செய்பவர். இவரைப்பற்றிய சில தகவல்கள் பொது மக்களில் ஒரு சாராரான தகவல் வழங்குவோரிடமிருந்து சீருடையினருக்கு வழங்கப்பட்டு வந்துள்ளன. கொல்லப்பட்டவர் புலிகளின் தீவிர ஆதரவாளர் என்பதும் புலிகளுக்காகப் பணிவிடைகள் செய்கிறார் என்பதுமே அந்தத் தகவல்கள். அதனை வைத்தே இவரது நடவடிக்கைகளை அவதானித்து தீர்த்துக் கட்டும் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள்.

சம்பவ தினத்தன்று ஏற்கெனவே அடையாள அட்டையைப் பறித்து வைத்துக் கொண்டு முகாம் வேலைக்கு வருமாறு அழைத்து வேலை முடிந்ததும் அவர்களது அடையாள அட்டைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. ஆனால் ஜெகநாதன் அடையாள அட்டையைக் கேட்ட பொழுது, 'இன்னும் கொஞ்ச வேலை உள்ளது பின்னர் வந்து வேலையைச் செய்து விட்டு அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு போ" என்று கூறி அனுப்பியிருக்கின்றனர்.

பின்னர் அவர் அந்த முகாம் அமைந்துள்ள மயானப் பகுதிக்குச் சென்ற பொழுது மயானத்திலுள்ள சவப் பாடைத் தட்டி ஒன்றை எடுத்து எரித்து விடுமாறு கேட்டனராம். அவர் அதைச் செய்து முடித்த தறுவாயில் அடையாள அட்டையைக் கொடுத்ததுடன் ஒரு "பார்சலை"யும் அவர்கையில் கொடுத்து அதை அடுத்தாற் போலுள்ள துறைமுக முகாமில் ஒப்படைத்து விடுமாறு கூறியுள்ளனர்.

அவர் அங்கு சென்று பொதியை கையளித்து விட்டுத் திரும்புகையில் மள மளவென்று துப்பாக்கிச் சூடுபட்டு அவர் அந்த இடத்திலே பலியானார்.

## பொலிஸ் நிலையத்தைக் கலக்கிய சூடு!

### பொறுப்பதிகாரி சீற்றம்

பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பது மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்திற்குப் பொருந்தும். இந்தப் பொலிஸ் நிலையத்தில் பாம்பொன்றைக் கண்டு துப்பாக்கிச் சூடு நடத்தி பதற்றமடைய வைத்தார் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர்.

திடீரென துப்பாக்கிச் சூடுகள் சரமாரியாகத் தீர்க்கப்பட பொலிஸ் அதிகாரி உட்பட முறைப்பாடுகளுக்காகவும் மற்றும் வேறு அலுவல்களுக்காவும் பொலிஸ் நிலையம் வந்திருந்த ஏராளமான பொது மக்கள் திகிலடைந்து பதுங்கிக் கொண்டனர்.

துப்பாக்கிச் சூடு ஓய்ந்த பொழுது நடந்தவற்றை அறிய பொலிஸ் பொறுப்பதிகாரி முயற்சித்தார். அப்பொழுது ஒரு பாம்பைக் கண்டுதான் அத்தனை சரமாரியான வேட்டுக்களும் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்ற விசயம் தெரியவந்தது.

பொது மக்கள் உட்பட அங்கிருந்த ஏனைய பொலிஸாரும் திகிலடையும் வண்ணம் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பந்தப்பட்ட பொலிஸ்காரரை அங்கு அழைத்த பொறுப்பதிகாரி பொது மக்கள் முன்னிலையில் அவரைக் காரசாரமாகக் கண்டித்தார். அவரது துப்பாக்கியைப் பறித்துக் கொண்டதுடன் விளக்கம் முடியும்வரை வேலை நீக்கம் செய்யப்போவதாகவும் கூறினார்.

பொறுப்பற்ற முறையில் நடந்து பொலிஸ் நிலையம் வந்திருந்த பொது மக்களுக்குப் பீதியை ஏற்படுத்திய பொலிஸ்காரரின் நடவடிக்கை குறித்து பொறுப்பதிகாரி வருத்தம் தெரிவித்தார்.

## புலிகள் காட்டிய படம்!

மட்டக்களப்பு-முறக்கொட்டான்சேனையில் புலிகள் இயக்கத்தினர் 23.05.99 அன்றிரவு வீடியோ படக்காட்சி மூலம் போராட்டப் படங்களைக் காண்பித்தனர்.

பொதுமக்களுக்குப் படக் காட்சியைக் காண்பித்துவிட்டு புலிகள் பொழுது புலர்வதற்கு முன்னரே அப்பகுதியை விட்டு அகன்றனர்.

மறுநாள் காலை இவ்விடயம் அங்குள்ள படையினருக்குத் தெரியவரவே பொதுமக்கள் வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டனர். உடனடியாக அப்பகுதியைக் காலையில் சுற்றிவளைத்த படையினர் ஆண்கள் அனைவரையும் ஓரிடத்திற்கு அழைத்து பகல் முழுவதும் விசாரணை மேற்கொண்டனர்.

## புலிகளின் ஷெல் வீச்சு

### வாகனங்கள் கவசமாகத் தடுத்து வைப்பு!

மட்டக்களப்பு-சந்திவெளி கிரிமுட்டிப் பண்ணை முகாமை நோக்கிப் புலிகள் வாவியின் மறுகரையிலிருந்து ஷெல் தாக்குதலைத் தொடுத்தனர்.

குறித்த ஷெல்கள் பிரதான வீதியில் விழுந்து வெடித்துச் சிதறின. அச்சமயம் வீதியால் வரும் இராணுவ வாகனத் தொடரணியைக் குறிவைத்தே புலிகள் ஷெல்களை ஏவியதாகப் படைத்தரப்பு கூறுகிறது.

எனினும் ஷெல் வீச்சுத் தாக்குதல் நடக்கும் சங்கதி தெரியாமல் பொதுமக்களின் வாகனங்கள் மட்டக்களப்பு-கொழும்பு பிரதான பாதையில் சென்று கொண்டிருந்தன.

ஷெல்கள் புலிகளால் தொடர்ச்சியாக ஏவப்படக்கூடும் என்று நினைத்த சீருடைத் தரப்பினர் பொதுமக்களின் வாகனங்களை இரு புறமும் வழிமறித்து தமது முகாமுக்கு முன்பாக நிறகவைத்தனர்.

இந்நடவடிக்கையின்போது பல அரச தரப்பு மற்றும் தனியார் வாகனங்கள் மாட்டிக் கொண்டன. முன்னரும் சீருடையினர் விடுமுறையிற் செல்லும்போதும் விடுமுறை முடிந்து கடமைக்குத் திரும்பும்போதும், அவர்களது வாகனத் தொடரணிகள் பயணிக்கும் போது, எட்டநின்று புலிகள் ஏவும் ஷெல் வீச்சுக்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பொதுமக்களின் வாகனங்கள் கவசமாக அணிவகுத்து நிறுத்தப்படுவதுண்டு. ஆயினும் இந்நடவடிக்கை சமீபகாலமாக இல்லாதிருந்தது. இப்பொழுது மீண்டும் தொடங்கி விட்டதோ எனப் பொதுமக்கள் கவலை கொண்டுள்ளார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

## விழுங்கிய நடத்துநர்

(திருமலை நிருபர்)

மே 5ந் திகதி கொழும்பிலிருந்து கிண்ணியா நோக்கி வந்து கொண்டிருந்த கிண்ணியா டிப்போவைச் சேர்ந்த பேருந்தில் திடீரென டிக்கட் பரிசோதகர்கள் ஏறினர்.

டிக்கட்டுகளைப் பரிசீலித்துக் கொண்டு வந்தபோது பழைய டிக்கட்டுகள் சில பயணிகளுக்கு வழங்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. நடத்துநரிடம் இது பற்றிப் பரிசோதகர்கள் கேட்டபோது அவ்வாறு எதுவும் இருக்க முடியாது என்று சாதித்தார்.

டிக்கட்டுகளைக் காட்டி "இதற்கு என்ன சொல்கிறீர்கள்!" என்று கேட்ட போது லபக்கென்று அவற்றைப் பறித்து நடத்துநர் பரிசோதகர்களும் பயணிகளும் பிரமித்துப் போய் நிற்க வாயில் போட்டு விழுங்கிவிட்டார்.

இதனால் பேருந்து சுமார் ஒரு மணிநேரம் தாமதமானது. பரிசோதகர்கள் நடத்துநருக்கெதிரான ஆதாரத்தைப் பறிகொடுத்துவிட்டு மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

"நிறுவனங்களையே சிலர் விழுங்குகிறார்கள். இது என்ன பிரமாதம்?" என்று பயணியொருவர் சிரித்தபடியே கேட்டாராம்.

## விவரங்களை அமைச்சு கோருகிறது!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்சமயம் அகதி நிவாரணமாக உலர் உணவு பெறும் அனைத்துக் குடும்பங்களினதும் முழு விவரங்களையும் தமக்குப் பட்டியலிட்டு அனுப்பி வைக்குமாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கோரியுள்ளது.

பெயர், வயது, பிரதான குடியிருப்பாளர் அவரில் தங்கியுள்ளோர், ஆண், பெண் போன்ற விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

இது போன்ற பல பட்டியல்கள் ஏற்கெனவேயும் பலமுறை அனுப்பி வைக்கப் பட்டுள்ளன, என்றும் திரும்பத் திரும்ப விவரங்கள் கோரப்படுகிறதென்றும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பொழுது கேட்கப்படும் விவரங்கள் அடங்கிய பெயர்ப் பட்டியல்கள் பாதுகாப்புத் தரப்பினரின் பரிசீலனைக்காக இருக்கக் கூடுமோ என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இதனிடையே கடந்த பல மாதங்களாக நிவாரணம் கொடுத்ததின் பேரில் கூட்டுத்தாபனத்தின் பேரில் வழங்கப்படாதிருந்த நிலுவைக் கொடுப்பனவில் ஒரு சிறுபகுதி மாவட்டச் செயலகத்தால் சமீபத்தில் வழங்கப் பட்டுள்ளது.

## அத்தியட்சகரின் பொறுப்புள்ள சேவை!

அக்கரைப்பற்றில் பொலிஸ் அத்தியட்சகராகப் பொறுப்பேற்றுள்ள லக்சி பீரிஸ் அவர்கள் அப்பகுதி மக்களுக்கு மதிப்பு மிக்க சேவைகளைச் செய்து வருவதாக அறிய முடிகிறது.

முன்னர் திடீர் திடீரென அவ்வப்போது நடக்கும் சுற்றி வளைப்புக்கள் மற்றும் பொது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் நடவடிக்கைகள் குறைந்துள்ளன.

தடை செய்து முட்கம்பி போடப்பட்ட வீதிகள் இரண்டு மீண்டும் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளன. தேவையற்ற சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டுள்ளன. முன்னர் மாலையாகியதும் நேர காலத்துடனேயே மாலை 7 மணிக்கு சன நடமாட்டமின்றி உறங்கிப் போகும் நகரத்தில் இப்போது இரவு 9.30 மணிவரைக்கும் கடைகளைத் திறந்து வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். அதன்படி இரவு 10 மணிவரை நகரம் கலகலப்பாக உள்ளது.

குறுகிய காலத்தில் மக்களின் நன்மை கருதி பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொண்டு வரும் சமூக நல மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளை அப்பகுதி மக்கள் பெரிதும் வரவேற்கிறார்கள்.

## பொருத்தப்படாத குண்டு

கொழும்பு புறக்கோட்டை பகுதியில் 16.05.99 அன்று இரவு குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

புறக்கோட்டை மீன்சந்தைப் பகுதியில் இருந்த மின்மாற்றிக்கு பொருத்தவே அக் குண்டு கொண்டு வரப்பட்டது. பொருத்த முயற்சிக்கையில் யாரையாவது கண்டுவிட்டு குண்டை அப்படியே தரையில் வைத்துவிட்டு போயிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தென்மாகாண சபைத் தேர்தல் மற்றும் வன்னிப் படை நகர்வுகளை முன்னிட்டு கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் புலிகள் குண்டு வெடிப்புக்களை நடத்தலாம் என்று கருதப்படுகிறது. கொழும்பில் பாரிய கைதுகள், தேடுதல்கள் மத்தியில் குண்டு வெடிப்புக்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

## சுயதொழில் வேலை வாய்ப்பு 2 கோடி ரூபா கடனுதவி

(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கை வங்கியின் மட்டக்களப்பு நகரக்கிளை கிராமப் புறவறிய மக்களின் தொழில் அபிவிருத்திக்கான நன்மை கருதி பல வகையான சுய தொழில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உதவி வருகிறது.

மட்டக்களப்பு சர்வோதய நிலையத்தின் அனுசரணையுடன் கடந்த மூன்று வருடங்களில் 1437 சுய தொழில் வேலை வாய்ப்பு முயற்சிகளுக்கு சுமார் 2 கோடி ரூபாய் நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

"மட்டக்களப்பு இலங்கை வங்கிக் கிளை நகரின் மையத்தில் இருந்தாலும் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு கடன் வசதிகளை வழங்கி சுய தொழில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அதிக அக்கறை காட்டுகிறது. இதன் மூலம் காலா காலமாகத் தமது உடலுழைப்புச் சுரண்டப்பட்டு வந்த ஏழைகள் பொருளாதார ரீதியில் முன்னேற வாய்ப்புக் கிட்டியிருக்கிறது" என்று மாவட்ட சர்வோதய நிலையத்தில் இடம் பெற்ற கடனுதவி வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய வங்கி முகாமையாளர் திரு.ஆர்.ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில்; தற்போது வங்கி ஊழியர்கள் மேற்கொள்ளும் சட்டப்படி வேலைக் கட்டுப்பாடு உள்ள சமயத்திலும் கூட எமது வங்கி ஊழியர்களின் ஒத்துழைப்புடன் இந்த அபிவிருத்திக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன. கிராம மக்களுக்கு வழங்கப்படுகின்ற சுயதொழில் வேலை வாய்ப்புக்கான கடனுதவிகள் மிகவும் திருப்தியான முறையில் பயன் படுத்தப் படுவதையும், அவை மீளச் செலுத்தப் படுவதையும் அறியக்கூடியதாக உள்ளது" என்றார்.

இவ்வைபவத்தில் கிராம மக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததோடு வரவேற்பையும் பெற்றன.

## வலை அடிக்க பணிப்பு

(காரைதீவு நிருபர்)

கல்முனையில் அடிக்கடி தாக்குதல் இடம்பெறும் எலிபன்ட் ஹவுஸ் சந்திக்குப் பின்னாலுள்ள சர்வார்த்த சித்திவினாயகர் ஆலயத்தை சுற்றி கம்பிவலை உயரத்திற்கு பொருத்துமாறு நிருவாக சபையினரை கல்முனைப் பொலிஸார் கேட்டிருக்கின்றனர்.

இறுதியாக இடம்பெற்ற கிரனைட் வீச்சு ஆலய பக்கமிருந்து வந்ததால் ஆலயக்குருக்களும் கைதாகி விசாரணைக்குட்பட்டிருந்தது தெரிந்ததே. ஆலயத்தின் பிறபக்கம் பொலிஸ் சோதனை முகாமின் பின்புறமாக உள்ளது. இந்த இடத்தில் பல சம்பவங்கள் நடைபெற்று வந்திருந்தது.

ஆலய நிருவாக சபையினர் வேறு வழியின்றி வலை அடித்துள்ளனராம். கடவுளுக்கும் சோதனைதான்!


## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரீக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**
நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



## BRIGHT BOOK CENTRE (PVT) LTD
### MILLENNIUM POSTAL EDUCATION SCHEME
பிறைட் புத்தக நிலையம் (வரையறுக்கப்பட்டது)
ஆயிரமாண்டு தபால் மூல கல்வித் திட்டம்

**SPOKEN ENGLISH & SINHALA**
மூன்றேமாத காலத்தில் ஆங்கிலம்/சிங்களம் ஆகியனவற்றை பேச, எழுத, வாசிக்க கற்றுக் கொள்ள முடியும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் கடந்த பத்து வருடங்களாக கற்று பயன் பெற்றுள்ளனர்.

**METHOD OF COMPUTERISED BOOK KEEPING & ACCOUNTANY (M.C.B.A)**
கடைக் கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு பேணுவது என்பதும், E.P.F, E.T.F, G.S.T, சம்பளம் தயாரிப்பது, சரக்கிருப்பு கட்டுப்பாடு ஆகிய அனைத்தும் கணனியின் உதவியுடன் தயாரிக்கும் முறை என்பன கற்றுத் தரப்படும். இப்பாட நெறியை மூன்றே மாதகாலத்தில் கற்றுத் தேறமுடியும்.

* நேரடி வகுப்புகளுக்கு தொலை பேசியில் தொடர்பு கொள்க.

**BUSINESS ENGLISH**
வியாபார கடிதங்கள், வேலைக்கான விண்ணப்பங்கள் எவ்வாறு தயாரிக்கப் படுகின்றது என்பதும் நேர்முகத் தேர்வு, சம்பாஷனை ஆகிய வற்றுடன் கூடிய பாடத் திட்டம் மேலதிக விபரங்களுக்கு விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

பாலர்-முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி
**NURSERY TEACHER TRAINING COURSE (NTTC)**
**SIX MONTH'S CORRESPONDENCE DIPLOMA COURSE**
ஆறுமாத கால தபால் மூலமான டிப்ளோமா கல்விநெறி

பாலர்-முன்பள்ளி மாணவர்களுக்கு எவ்வாறு விளையாட்டு ஊடாக கல்வி போதிப்பது என்பதும், சிறார்களின் மனோநிலை விவேக தன்மை, சிந்தனைத்திறன், என்பவற்றை கணித்து கற்பிக்கும் முறைகள் அனைத்தையும் பாடத்திட்டங்களாகவும் பாட விளக்கங்களுடன் கொண்ட கல்விநெறி. இப்பாட நெறியை பூர்த்தி செய்பவர்கள் தங்களின் பிரதேசத்திலேயே Nursery School அமைக்க கூடிய தகுதியை வழங்கும், Diploma in Nursery Teacher Training Certificate வழங்கப்படும்.

**FAMILY LIFE EDUCATION (FLE)**
குடும்பநலக் கல்வி
வளரிளம் பருவத்தினர் தமது பருவமாற்றங்களையும் செயற்பாடுகளையும் சிறந்த வாழ்க்கை நலத்தையும் பேணும் பயிற்சியாகும் (மூன்றுமாதகாலபாடத்திட்டம்).

**ART OF YOGASANAM - யோகாசனக் கலை**
உடல் நலத்தை பேணவும், வேண்டாத இரத்த அழுத்தங்களில் இருந்து விடுபடவும், மேனி அழகை பேணவும் உகந்த ஆறுமாதகால பயிற்சி நெறி

**APPLICATION FORM**
NAME : ........................................
ADDRESS : ........................................
........................................
விரும்பும் பாடநெறி : ........................................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX P. O. BOX NO: 162, COLOMBO - 11. TELE: 434770, 074-718592
BRIGHT FUTURE IN YOUR HAND


### விளம்பரப் பகுதி


வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஏராளமாகப் பெற்றுத்தரும்...

## கணனிப்பொறியியல் நுட்பம்
## (Diploma in Computer Hardware Engineering)

இப்பொழுது புதியமாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்பாட நெறி ஆரம்பத்திலிருந்து முறைப்படி கற்பிக்கப்படும்காலம் - 1மாதம்

**பாடத்திட்டம்** கணனியைப்பொருத்துதல்(Assembling), கோளாறுகளைக்கண்டுபிடித்தல்(Troubleshooting),தரமுயர்த்துதலும்பேணுதலும்(Upgrading PCs,Maintenance & Servicing), பழுதுபார்த்தல்(Repairing),செயல்முறைப்படுத்துதல்(Software Instalation) தொழிற்பாட்டுமுறை(Operating System).

**இலவசம்** கணனியொன்றை அமைப்பதற்கு சலுகைவிலையில் உபகரணங்கள்,வெளிநாட்டுவேலைவிபரம்கலாசாலைஅறிமுகஅட்டை,பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்,நற்சாட்சிப்பத்திரம்என்பனஇலவசமாகவழங்கப்படும்.

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் 27.5.99 ஆம் திகதிக்கு முன் அதிபரின் பெயருக்கு ரூபா 25/= காசுக்கட்டளையை அனுப்பி அல்லது நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

The Principal
**Higher Tech (Lanka)**
85/2,St.Anthony's Mawatha,
Colombo - 3



**A/L 2000 & 2001**

மேற்படி பரீட்சைகளில் 3A சித்தி பெற்றாலும் CGTயில் சித்திபெறாவிட்டால் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படமாட்டீர்கள் என்பதை அறிந்துள்ளீர்களா? மேலதிக விளக்கங்களைப் பெறவிரும்பினால் உங்கள் பெயர் முகவரியுடன் புதிய 4/- முத்திரை ஒன்றையும் M.I. ABDUL JALEEL, RIFFA NEST SAMMANTURAI-02 ஜிற்கு உடன் அனுப்பி பெறமுடியும்.



**தபால் மூலம் தையற்கலை பயில இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்.**

LONDON SCHOOL OF SCIENTIFIC TAILORING டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற்கலை பயிற்றுவிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். பெண்களுக்கு மாத்திரமே பயிற்சி அளிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்பு கொள்ளவும்.

DIRECTOR: MRS SITHY KAMILA RAFI
7/1 GONGAWALA ROAD, MATALE.



## பயிற்சி வகுப்புகள்

வெளிநாடு செல்வோருக்கான குறுகிய கால அழகுக் கலை பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மற்றும் Facial, Bleaching, waxing போன்ற உங்கள் அழகை மெருகூட்டிக் கொள்வதற்கான அனைத்து அழகு சிகிச்சைகளையும், மணப்பெண் அலங்காரங்களையும் சிறந்த முறையில் செய்துகொள்ள நாடுங்கள்.

**PEARLEE BEAUTY CENTRE,**
**NO. 210/09, PRINCES,OF WALES AVENUE, COLOMBO-14.**
**T.P. 334310.**



**சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை**

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA, T PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. HP 97651074


## 50ம் நாள் நினைவஞ்சலி

உதயம் : 30 • 08 • 1939



அஸ்தமனம் : 23 • 03 • 1999

**அமரர் திரு அந்தோனி சந்தியோகு J.P**
**உயிலங்குளம்**

திங்களொன்று உருண்டாலும்
திகட்டிடுமோ உந்தன் ரூபம்.
மாதம் பல மறைந்தாலும்
மறந்திடுமோ எங்கள் உள்ளம்
ஆறாத்துயரில் அமிழ்கின்றோம்
மீளா உலகை நீயும்
உவந்து சென்றாயோ?

உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிமார், மைத்துனர்மார், மைத்துனிமார் மற்றும் உறவினர்கள்.

கடந்த 24.03.99ல் எமது தகப்பனாரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு எம்மை தேற்றியவர்களுக்கும் புறதேசத்திலும் இருந்து தொலைபேசி மூலமும் கடிதம் மூலமும் எம்மை ஆற்றியவர்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

தகவல்: JOE BASYL (மகன்)
SAVE SERVICE STATION, SOUTH PORT, U.K.


## K.N.S SHOPPING CENTRE & TAKE AWAY
SWISS

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை பெற்றுக்கொள்ள ஒறிஜினல் வீடியோ–ஓடியோ கசற்றுக்கள் COMPACT டிஸ்குகள் வீடியோ CDகள், 22 கரட்டில் நம்பிக்கைக்கு உத்தரவாதமளிக்கும் தங்க நகைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் இலங்கை, இந்திய, சுவிஸ் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் இலகுவாக நீங்கள் பெற்றுக்கொள்ள.

**K.N.S SHOPPING CENTRE**
K.N. SUKUMARAN
ANKER - STR - 16
8004 - ZURICH
SWITZERLAND.

☎ 01-242 7111- FAX 01- 2427144 வாரத்தில் 7 நாட்களும் (ஞாயிறு உட்பட) திறந்திருக்கும். நேரம் காலை 9 மணிமுதல், இரவு 12 மணிவரை.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஆயுதமும் - காகிதமும்

**யாழ்** குடாநாட்டில் மட்டுமன்றி வடக்கு-கிழக்கு முழுவதுமே இராணுவ நிர்வாகம்தான் நடைபெற்று வருகிறது.

யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றுவதற்கு முன்னர் புலிகளது நிர்வாகமே நடைபெற்று வந்தது.

சிவில் நிர்வாகம் என்று வழக்கமாகக் கூறப்படுகின்ற நிர்வாக முறை வடக்கு-கிழக்கில் செத்துப்போய் பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

ஆனால் அரசு வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகம் நடப்பதாக உலகுக்கு காண்பிக்க நினைக்கிறது. தமிழ்க் கட்சிகளும் 'சிவில் நிர்வாகம்' என்ற பதத்தையே தம் அறியாமை காரணமாக பயன்படுத்தி வருகின்றன.

இராணுவ நிர்வாகம் என்றோ அல்லது பொதுவாக அரச நிர்வாகம் என்றோ அழைப்பதே சரியானது.

'சிவில் நிர்வாகத்தை இடையூறு செய்யக் கூடாது' என்று தமிழ்க் கட்சிகள் அறிக்கை விடுவது வேடிக்கை.

இல்லாத சிவில் நிர்வாகத்தை எப்படி இடையூறு செய்ய முடியும்?

முற்று முழுதாக யுத்தம் நடைபெறும் பகுதியில் சிவில் நிர்வாகம் என்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

யுத்தமே அனைத்தையும் தீர்மானிக்கும் பிரதான பாத்திரம் வகிக்கும்போது, அதனை நடத்தும் துருப்புக்களே முதன்மையானவர்கள்.

யுத்த வெற்றி, படைத்தரப்பு நலன் என்பவற்றுக்கு கீழ்ப்பட்டே யுத்தப் பிரதேச நடைமுறைகள், நிர்வாகங்கள் என்பன இயங்கியாக வேண்டும்.

இது தவிர்க்க முடியாதது. இதனை தவிர்க்க ஒரே ஒருவழி யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதுதான்.

இது புரியாமல், உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்தால் சிவில் நிர்வாகம் மலரும் என்று மக்களை ஏமாற்றி வாக்குப் பெற்றன தமிழ்க் கட்சிகள்.

இப்போது வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தால் சிவில் நிர்வாகம் தோன்றிவிடும் என்று கூறித்திரிகின்றனர்.

வடக்கு-கிழக்கில் இன்று மத்திய அரசு நிர்வாகம் கூட படையினர் ஊடாகத்தான் நடக்கிறது.

மாகாணசபை தேர்தல் நடத்தப்படுமானால் மேலும் போரை தொடரவும், இராணுவத்தீர்வை முனைப்பாக்கவும் அரசுக்கு அரியதோர் வாய்ப்புக்கிடைக்கும்.

வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் த்ரப்பின் ஆட்சி நடப்பதாக உலகுக்கு காட்டிக் கொண்டு, இராணுவத்தீர்வு முயற்சியை சிறப்பாக முன்னெடுக்கலாம்.

அப்படியிருந்தும் அரசு அங்கு தேர்தல் நடத்த தயாராக இல்லை. ஏனெனில் வடக்கு-கிழக்கு இணைந்திருக்கக்கூடியதாக தேர்தல் நடத்தினால், பேரினவாத சக்திகளது எதிர்ப்பை சம்பாதிக்க நேரும். அதுதான் பிரதான காரணம்.

ஆகவேதான் தேர்தலை நடத்தாமல் இருக்கிறது அரசு.

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இராணுவ அதிகாரியை ஆளுநராக நியமித்து, படையினரின் மனம் கோணாது நிர்வாகத்தை முன்னெடுத்து வருவதும் இன்றைய அரசுதான்.

எனவே, சிவில் நிர்வாகம் என்பது போரின் மத்தியில் நிறைவேறாத கனவாகும்.

வடக்கு-கிழக்கில் இராணுவ நிர்வாகத்திற்கு சவாலான பல நடவடிக்கைகளை புலிகள் எடுத்து வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு சிவில் அதிகாரிகள் இராணுவ நிர்வாகத்தின் கீழும் பணியாற்ற வேண்டியுள்ளது. புலிகளது கட்டளைகளையும் மதிக்க வேண்டி இருக்கிறது. இருதலைக் கொல்லி எறும்பின் நிலையில் இருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் படையினரின் கட்டளைகளை அனுசரித்தே நிர்வாகப் பணிகளில் அதிகாரிகள் ஈடுபடுகின்றனர்.

மக்களால் தெரிவான நகரசபையால் கூட, படையினரின் கட்டளையை மீறி நிர்வாகம் நடத்த முடியவில்லை. திருமலை சந்தை விவகாரம் இதற்கு நல்ல முன்னுதாரணம்.

அதேநேரத்தில் புலிகளது கடிதங்களும் அதிகாரிகளை வந்தடைகின்றன. இராணுவ நிர்வாகத்திற்கு தெரியாமல் புலிகளது கட்டளைகளை நிறைவேற்றும் சாமர்த்தியமும் அதிகாரிகளுக்கு தேவையாக இருக்கிறது.

கிழக்கில் மின்சாரத்தை புலிகள் நிறுத்தியபோது, இராணுவ நிர்வாகத்தால் புலிகளை மீறி மின்சாரத்தை கொண்டுவர முடியவில்லை. புலிகளே அனுமதித்த பின்னர்தான் மின்சாரம் வந்தது.

எனவே, வடக்கு-கிழக்கில் படையினரது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இராணுவ நிர்வாகம் அமுலில் இருக்கின்றபோதும், அதனை சீர்குலைக்கும் வல்லமையை புலிகள் கொண்டுள்ளனர்.

தற்போது யாழ் குடாநாட்டில் புலிகள் வெளிப்படுத்த விரும்பும் செய்தியும் அதுதான்.

யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகளது உதவியுடன் உள்ளூராட்சித் தேர்தலை அரசு நடத்தியது.

யாழ் குடாநாட்டு உள்ளூராட்சி சபைகளில் தலைபோன்றது யாழ் மாநகரசபை. அந்த தலையைக் கைப்பற்றியது கூட்டணி. அந்த மாநகர சபைக்கு மேயரைக்கூட நியமிக்க முடியாத நிலைதான் இருக்கிறது.

இது யாழ் குடாநாட்டில் படையினருக்கு ஏற்பட்ட தோல்வி என்றும் கூறலாம். மாநகர முதல்வராக வருபவரை தம்மால் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த படையினரால் முடியவில்லை. காற்றுப்புக வழியிருந்தால், அதற்குள்ளாக புலிகளும் புகுந்துவிடுவார்கள் -என்னுமளவுக்கு புலிகளது நடவடிக்கைகள் அமைகின்றன.

இப்போது யாழ் குடாநாட்டு படையினருக்கு மற்றுமொரு சவால் புலிகளிடமிருந்து வந்துள்ளது.

யாழ் குடாநாட்டில் இராணுவ நிர்வாகத்தின் கீழுள்ள சிவில் அதிகாரிகள் வாரத்தில் இரண்டு நாட்கள் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பணியாற்றக்கூடாது என்று புலிகள் கடிதம் அனுப்பி உள்ளனர்.

அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

புலிகளது கடிதம் கிடைக்கப் பெற்றதும் குறிப்பிட்ட நாட்களில் சிவில் அதிகாரிகள் எவரும் பணிக்குச் செல்லவில்லை.

இராணுவ நிர்வாகத்திற்கு இது பலத்த அடியாக அமைந்தது.

பெரும் படைபலம் கொண்டு படையினர் யாழ் குடாநாட்டில் ஆட்சி செலுத்துகின்றனர். யாழ குடாநாடு பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறுகின்றனர்.

ஆனால் தமது பிடி அங்கும் உண்டு, தமது ஆதிக்கமும் அங்கு இருக்கிறது என்று படையினருக்கு மட்டுமன்றி வெளியுலகுக்கும் புரிய வைப்பதில் புலிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

இத்தடை நீடிக்குமோ, இல்லையோ இரு வாரங்களாக வெற்றியளித்தமையே புலிகளுக்கு வெற்றிதான்.

புலிகளிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளன என்று தெரிந்தும்கூட, படையினரால் அரச அலுவலகங்களை இயங்க வைக்க முடியாமல் இருந்தது.

வடக்கு-கிழக்கில் யாழ்குடாநாட்டில் மட்டும் புலிகள் இத்தடையை மேற்கொள்ள என்ன காரணம்?

ஏனைய பிரதேசங்களைவிட, யாழ் குடாநாட்டைத்தான் தமிழ் பேசும் தரப்பின் முக்கிய பிரதேசமாக அரசு வெளியுலகுக்கு காண்பித்து வருகிறது.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை பிடிவாதமாக நடத்திக் காட்டியது. கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு தமிழ்க் கட்சிகள் மன்றாட்டமாக கேட்டும் கூட, இதுவரை உறுதியாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, அரசின் அக்கறை உள்ளூராட்சி சபைகளை இயங்க வைப்பதல்ல என்பது தெளிவு.

யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவுவதாக காண்பித்தால் போதும், அங்கு அரச கட்டுப்பாடு பூரணமாக உள்ளது எனக் காண்பித்தால் போதும் என்றுதான் அரசு நினைக்கிறது.

போரின் இலக்கு அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதே என்று வெளியுலகுக்கு ஆதாரம் காட்ட யாழ் குடாநாட்டை பயன் படுத்துவதே அரசின் திட்டம்.

அந்தத் திட்டத்துக்கு புலிகள் வகுத்துள்ள பதிலடித் திட்டத்தில் ஒன்றுதான் வாரத்தில் இரு நாட்கள் அரச நிர்வாகத்தை செயல் இழக்க வைப்பது.

ஆயுதம் மூலம் குடாநாட்டில் நிர்வாகம் நடத்தும் படையினருக்கு, காகிதம் மூலம் புலிகள் விடுத்துள்ள சவால் இது.

1961இல் அரச நிர்வாகத்தை சீர்குலைக்கும் மாபெரும் சத்தியாக்கிரகம் ஒன்றை தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் நடத்தியது.

யாழ் அரச செயலகம் முன்னால் நடைபெற்ற அந்த சத்தியாக்கிரகத்தால் சிவில் நிர்வாக நடவடிக்கைகள் பல நாட்கள் ஸ்தம்பித்தன.

அதன்பின்னர் 28 வருடங்கள் சென்றுவிட்டன. தற்போது புலிகளின் அறிவித்தலால் அரச நிர்வாகம் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

அரச நிர்வாகத்தை முடக்குவது என்பதை போராட்ட முறையாக அறிமுகப்படுத்திய மூலகர்த்தாக்கள் தந்தை செல்வாவும், தமிழரசுக் கட்சியும் தான்.

அப்போது அமைதிவழிப்போர். இப்போதும் அமைதி வழிதான். ஏனெனில் புலிகள் பயன்படுத்தியது காகிதம்தானே!

–★–

# வவுனியாவில் பலியான தளபதி

**வ**ன்னியில் புலிகள் நடமாடும் கெரில்லா தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளனர்.

படையணிகளது பலவீனமான பகுதிகளுக்குள் தாக்குதல் நடத்துவது, படையினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் தாக்குதல் நடத்துவது என்பவை இதில் அடங்கும்.

வவுனியா நகருக்குள் தொடர் தாக்குதலை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

நகரில் சுதந்திரமாக நடமாடும் பொலிசார் மீதும், படையினர்மீதும் தாக்குதல்களை நடத்துவது, காவலரண்களை தாக்கி அச்சுறுத்துவது என்பது புலிகளது நோக்கம்.

இதற்காக புலிகளது வவுனியா தளபதி தங்கம் தலைமையில் புலிகளது அணியினர் திட்டம் தீட்டி வந்தனர்.

வவுனியாவில் பல வெற்றிகரமான சிறு தாக்குதல்களும் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

11.05.99 அன்று வவுனியா பூவரசங்குளம் பகுதியில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வவுனியாவில் புலிகள் தொடர்பான சில தகவல்களை திரட்டுவதில் இவர் ஈடுபட்டிருந்ததாக கூறப்படுகிறது. இதனை அறிந்தே இவர் பற்றிய தகவலை திரட்டிய புலிகள் தீர்த்துக் கட்டினார்கள்.

சைக்கிளில் சென்று சுட்டுவிட்டு, அதே சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டனர்.

இதனையடுத்து, 12.05.99 அன்றும் வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் பகுதியில் காவலரண் ஒன்றை நோக்கி சைக்கிளில் வந்த புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றனர்.

அப்பகுதியில் சிவில் உடையில் நின்ற பொலிசார் தப்பிச் சென்ற புலிகளை பின் தொடர்ந்ததோடு, படையினருக்கும் தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து மூன்று புலிகள் சுற்றி வளைப்புக்குள் சிக்கினார்கள்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் லெப்டினன்ட் கேணல் தங்கம் பலியானார். ஏனைய இரு புலிகளும் தப்பிச் சென்றனர்.

உயிருடன் பிடிபட்டுவிடக்கூடாது என்று அவர் சயனைட்டும் விழுங்கியதாக புலிகள் கூறியுள்ளனர்.

பலியானவர் புலிகளது பிராந்திய தளபதிகளில் ஒருவர் என்பது, பாதுகாப்பு தரப்புக்கு தெரியவில்லை.

லெப்டினன்ட் கேணல் தங்கம் (திருக்குமரன் அல்லது கதிரவேலு ஜீவதாஸ்) யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்தவர்.

லெப்டினன் கேணல் ஒருவரை பறிகொடுத்தது புலிகளுக்கு பெரும் இழப்பேயாகும்.

மூத்த தளபதிகள் கேணல் தரத்திலும், அதற்கடுத்த நிலைகளில் உள்ளோரும், மற்றும் பிராந்திய தளபதிகளும் லெப்டினன்ட் கேணல் என்றும் புலிகள் தர நிலைப்படுத்துகின்றனர்.

வவுனியாவில் மட்டுமன்றி மன்னாரிலும் புலிகளது தாக்குதல்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

21.05.99 அன்று மன்னாரில் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றை புலிகள் வெற்றிகரமாக நடத்தியிருந்தனர். இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உட்பட 16 பேர் காயமடைந்தனர். அவர்களில் 7 படையினர் நிலை கவலைக்கிடம் என்று படை வட்டாரங்களே கூறியிருந்தன.

கவலைக்கிடமானோர் நிலைபற்றி பின்னர் அறிவிக்கப்படவில்லை. இத்தாக்குதல் புலிகளுக்கு வெற்றியே.

தமது தரப்புக்கு இழப்பே இல்லாது இத்தாக்குதலை புலிகள் நடத்தியுள்ளனர்.

மேலும் புதிய தாக்குதல்கள் மன்னாரில் நடக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

வவுனியா போன்று மன்னாரும் திடீர் சுற்றிவளைப்பு தேடுதல்களுக்கு உள்ளாகலாம்.

எனினும் அவற்றால் புலிகளது தாக்குதல்களை நிறுத்த முடியாது.

மன்னார் பிரதேச புலிகளது அணியினர் பல இலக்குகளுக்கு குறிவைத்துள்ளதாக தெரிகிறது.

வன்னியில் புதிதாக நிலைகொள்ள மேலும் படையினரை மன்னாரில் இருந்து பெறமுடியாதளவுக்கு, அங்கு புலிகளது தாக்குதல்கள் பரவலாகலாம்.

அதேசமயம் படையினரும் வன்னிப் போர்முனையில் தமது பின்தளத்தை விரிவுபடுத்தும் போர் உத்தியில் இறங்கியுள்ளனர்.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் வவுனியா-யாழ் சாலையில் படைகள் முன்நோக்கி நகரும்போது, புலிகளது பாரிய தாக்குதல் பின்தளமான தாண்டிக்குளத்தில் நடந்தது. அதன்மூலம் 'ஜயசிக்குறுய்' படையினரின் விநியோக மையம் சீர்குலைந்தது.

அதேபோல மன்னார், பூநகரி சாலையில் படையினர் முன்நகரும் நிலை ஏற்பட்டால், பின்தளத்தில் புலிகள் பாய்ச்சல் நடத்தாமல் இருக்கக்கூடியதாக வியூகங்கள் வகுக்கப்படுகின்றன.


அடுத்து மல்லாவியை கைப்பற்றி அங்கிருந்து மன்னார் பூநகரி சாலை திறப்புக்கான நகர்வை ஆரம்பிக்க படையினர் நினைக்கக் கூடும்.

மல்லாவியையும் கைப்பற்றினால் மன்னார் பூநகரி சாலைக்குள் புலிகள் கிழக்குப் புறமிருந்து பக்கவாட்டில் தாக்குவதோ, ஊடறுப்பதோ கடினம் என்று படையினர் நினைக்கலாம்.

ஆனால் களத்தில் ஒருதரப்பு புது உத்தியைக் கையாளும்போது, மறுதரப்பு அதற்கு மாற்று உத்தியை கண்டுபிடிப்பதும் நடக்கத்தான் செய்யும். ■

நாரதர்

## சாம் 7-ஸ்ட்றெல்லா ஏஏ ஏவுகணை



| | |
|---|---|
| **வழிநடத்தல்:** | புற ஊதாக் கதிரியக்கச் செயற்பாட்டினால் வழிநடத்தப்படுகின்றது. |
| **ஏவுகணையின் வெடி பொருளின்விட்டம்** | : 70 மில்லிமீட்டர் |
| **ஏவுகணையின் வெடி பொருளின் எடை** | : 1.15 கிலோகிராம் |
| **ஏவுகருவியின் எடை** | : 10.6 கிலோகிராம் |
| **ஏவுகணையின் (மிசைல்) எடை** | : 9.2 கிலோகிராம் |
| **ஏவுகணையின் நீளம்** | : 1.3 மீட்டர் |
| **அதிகூடிய தாக்கும் தூரம்** | : 3.5 கிலோமீட்டர் |
| **உச்ச வேகம்** | : 385 மீட்டர்/ செக்கன் |
| **உற்பத்தியாளர்** | : ஸ்ரேற் ஆர்செனல்ஸ், முன்னாள் சோவியத் யூனியன். |

தனிநபரால் உபயோகிக்கக்கூடிய இவ்வகை விமான எதிர்ப்பு ஏவுகணை தொழில்நுட்ப வளர்ச்சி 1959ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முழுமையான வடிவம் 1966ல் உருவாக்கப்பட்டது. 1968/70ல் இடம்பெற்ற இஸ்ரேல்-எகிப்துக்கிடையிலான யுத்தத்திலும், வியட்நாமின் விடுதலைப் போராட்டத்திலும் முதன்முதலில் உபயோகிக்கப்பட்டது.

சாம் 7 ஏவுகணை ஆரம்பத்தில் பல குறைபாடுகளுடன் காணப்பட்டது. அதனோடு இணைக்கப்பட்ட புற ஊதாக்கதிரியக்கத் தொலைநோக்கியின் செயற்பாடு பல வழிகளால் குழப்பப்பட்டது. விமானத்திலிருந்து ஏவப்படும் இலக்கைத் திசை திருப்பும் ஒளி வெடிகுண்டு, சூரிய வெளிச்சம், சூடான தரை மேலும் பல பொறிகளின் செயற்பாட்டால் இவ் ஏவுகணையின் செயல்திறன் மட்டுப்படுத்தப்பட்டது. தற்போது இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டு அதி திறன் வாய்ந்த கருவியாகப் பல நாடுகளிலும் உபயோகிக்கப்படுகின்றது.

ஏவுகணையின் வெடிபொருள் அதிசக்தி வாய்ந்த உயர்வலு வெடி மருந்தாலானது. சில்லுகளாக வெடித்துச் சிதறக்கூடிய உலோக வார்ப்பினால் கவசமிடப்பட்டது. இலக்கை மோதும்போது முதல் வெடிப்பும் பின்னர் ஊடுருவி வெடிப்புமாக இரண்டு வெடிப்புக்கள் மோதுகையில் இடம்பெறும். இலக்கின் குறி தவறுமானால் 6 கிலோமீட்டர் தொலைவில் அல்லது ஏவப்பட்டு 15 செக்கன்களில் தானாக வெடித்துவிடும்.

சாம் 7 ஸ்ட்றெல்லா ஏஏ ஏவுகணையின் ஏவுகருவியின் கீழே அடிப்பாகத்தில் வெப்பத்தால் இயங்கும் பற்றரி உள்ளது. இது ஏவுகணையை ஊக்கப்படுத்தி உந்தித்தள்ளிவிடும்.

அமெரிக்கத் தயாரிப்பான ஸ்ரிஞ்சர் ஏவுகணையைவிட சாம் 7 எடையில் குறைவானது. கையாள்வதும் சுலபம்.

இந்த ஏவுகணை புலிகளிடமும் இருக்கலாம் என்று பாதுகாப்பு தரப்பு சந்தேகிக்கின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**குடாநாட்டு அரச** அதிகாரிகள் ஏதோ ஒழுங்காக பணியாற்றுவது போலவும் ரெண்டு எழுத்தார் இரண்டு நாள் தடுத்ததால்தான் பல பணிகள் பாதிக்கப்படுவது போலவும் பாச்சா காட்டுகினம். சனி, ஞாயிறு நாட்களில் முழுமையாக வேலை செய்ய நினைக்கினமாம். அப்படிச் செய்ய அதிகாரத்தரப்பும் அனுமதிக்காது என்பதை நன்கு தெரிந்துவிடுகினம் பாருங்கோ கதை! ரெண்டு எழுத்தாரின் இருநாள் தடையால் உள்ளூர வெகு மகிழ்ச்சிப்பட்டிருப்பினம்! அவைக்கு என்ன, சம்பளத்தோடு வாரத்தில் மேலதிகமாக இரண்டுநாள் விடுமுறை! அந்த இரண்டு நாள் சம்பளத்தை ரெண்டு எழுத்தார் கேட்டால் என்ன? ஹி.ஹி.ஹி.

**இலண்டனில் கிரிக்கெட்** போட்டியின்போது வானூர்தி பறந்த சமாச்சாரம் இங்கு அதிகாரத்தரப்பை கலக்கியிருக்குதாம்! கச்சிதமாக பிரசாரம் நடத்திப் போட்டினமல்லோ! இரண்டுபேரை கைது செய்தது சும்மா ஒரு சம்பிரதாயத்துக்காகத்தானாம்! சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாதாம்! அதுசரி, அவுஸ்திரேலியாவிலும் வானூர்தி பறந்தது அல்லவோ? அங்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இலங்கை அணியில் இருந்த கோபத்திலை சந்தோசப்பட்டிருப்பினமாக்கும்!

**கனடாவில் பத்துக்கு** மேற்பட்ட பத்திரிகைகள் வருகின்றன. அவற்றில் ஒரு பத்திரிகை தமிழக வைரமான கவிஞரை அழைத்து விழா நடத்தியது. இதனை சகியாத போட்டிப் பத்திரிகை வைரமான கவிஞரை வசைபாடியது. அது போதாது என்று கீழ்த்தரமான காரியம் ஒன்றையும் செய்தவையாம். கனடா விமான நிலையத்துக்கு போதை மருந்துடன் கவிஞர் வருவதாக தகவல் கொடுத்திருக்கினம். இதனை நம்பி கவிஞரை கிட்டத்தட்ட நிர்வாணமாக்கி சோதனையிட்டார்களாம். இதனால் அற்ப சந்தோசமாம். இத்தனைக்குப் பின்னரும் தனக்கு போட்ட தங்கப் பதக்கங்களை ஈழத்தமிழர் நிதிக்காக கொடுத்துவிட்டு திரும்பினார் கவிஞர். அவரைப் பாராட்டலாம்தானே!

**தேனகத்தில் ஒன்றரை** மாத சிசுக் கொலைக்கும் இயக்க மோதல்களுக்கும் தொடர்பு ஏதும் கிடையாது. அது உள்வீட்டு பிரச்சனையின் வெளிப்பாடாம்! அதனை போட்டி இயக்கம்மீது போட்டுவிட்டனர்.

**குடாநாட்டில் வீட்டுக்கு** வீடு குடும்ப அங்கத்தவர் புகைப் படங்களை தொங்கவிடவேண்டுமாம். அந்தக் கால அடிமை முகாம்களில்கூட இப்படியொரு விதி இருந்திருக்காது! இதெல்லாம் பாரதூரமான பிரச்சனைகளாக எங்கள் 'டமில்' கட்சிகளுக்குத் தெரிவதில்லையோ?

**இலங்கை கிரிக்கெட்** அணி 'சாம்பியனாக' வந்தபோது அரசியலுக்கும் பயன்பட்டதல்லோ? நாங்கள் கொடுத்த பந்திலும் நாங்கள் கொடுத்த துடுப்பிலும் பயிற்சி எடுத்துத்தான் சாம்பியனாகியது என்றல்லோ நீல அணி உரிமை பாராட்டியது. இந்தத் தடவை அந்த வாய்ப்பில்லை. இம்முறை என்ன சொல்லப் போகினம்?

**இயக்க மோதலைப்** பயன்படுத்தி, உபதேசம் செய்து நற்பெயர் தேடுவோரும் உள்ளனர். உண்மையாக மோதலை நிறுத்த நினைத்தால் அதனை ஏன் பத்திரிகைகளுக்குக் கொடுக்க வேணும்? இயக்க மோதலை நிறுத்தச் சொல்லி மக்களுக்கோ அறிக்கை விடுப்பது? முன்னாள் மாகாணசபை கட்சிச் செயலாளரும் இதில் முன்னணியில் நிற்கிறார். இதுதான் எரியும் நெருப்பில் குளிர்காய்வது என்று சொல்லுறது! உண்மையாக கண்டிப்பவை என்றால் யார் பக்கம் தவறு என்றுமல்லோ சுட்டிக்காட்ட வேண்டும்! எல்லோரும் கெட்டவர்கள். யாம் நல்லவர்கள் என்று நற்பெயர் எடுத்து அடுத்த தேர்தலில் கொஞ்ச வாக்குகளைக் கவர்வதுதான் செயலரின் தந்திரமாம்!

**இந்தவாரப் பொன்மொழி:**

"ஒருவன்
அரசனாக வாழலாம்.
ஆனால் அவன்
மனிதனாகத்தான் மரிக்க வேண்டும்!" ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# பழிவாங்கும் படலத்துக்கு பயன்பட்ட கொலை

**ரா**ஜீவ் கொலை வழக்கில் முன்னர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர் ரங்கநாத்.

பெங்களூரில் சிவராசன் குழுவினர் தங்கியிருக்க வீடு கொடுத்தவர் இவர்தான்.

உச்ச நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட ரங்கநாத் சட்டத்தரணிகளது ஆலோசனையின்படி தலைமறைவாக இருந்து வருகிறார்.

ராஜீவ் கொலை தொடர்பாக திடுக்கிடும் தகவல்களை அவர் வெளியிடப் போவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

ராஜீவ் கொலை தொடர்பாக ஆராய்ந்த ஜெயின் கமிஷன் முன்பாகவும் ரங்கநாத் பிரமாணப் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அதிலும் இந்திய மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ) மீது ரங்கநாத் சந்தேகம் தெரிவித்திருந்தார். அத்தோடு பல கேள்விகளையும் எழுப்பியிருந்தார்.

அதனைத்தான் மறுபடி எழுப்ப இருக்கிறார் என்று தெரிகிறது.

ஜெயின் கமிஷனுக்கு ரங்கநாத் சமர்ப்பித்த பத்திரத்தில் இருந்த முக்கிய விபரங்கள் இங்கு தரப்படுகின்றன.

* 18.08.91 அன்று நான் கைது செய்யப்பட்டேன். நான் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் சிவராசனும் மற்றவர்களும் பதுங்கியிருந்த வீட்டை பொலிஸ் துணை கமிஷனர், வெற்றிகரமாக சுற்றி வளைத்தார்.

* நான் கைது செய்யப்பட்டபோது பொலிசாரிடம் பல உண்மைகளைத் தெரிவித்தேன். ஆனால் அந்த உண்மைகளைச் சொல்லக்கூடாது என்று சி.பி.ஐ. அதிகாரிகள் என்னை மிரட்டிக் கொடுமைப்படுத்தினார்கள். சி.பி.ஐ. பல விஷயங்களை வெளிச்சத்துக்கு வரவிடாமல் மூடி மறைத்து விட்டது.

* இந்த வழக்கில் முக்கிய குற்றவாளிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள சிவராசனையும், சுபாவையும் உயிருடன் பிடிப்பதற்கு சி.பி.ஐ. மிகவும் தயக்கம் காட்டியது.

* ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான விக்கி எனப்படும் விக்னேசுவரன் 3.7.91 அன்று கோவையில் கைது செய்யப்பட்டார்.

சி.பி.ஐ.யின் புலனாய்வுப்படி, சிவராசனையும், சுபாவையும் பெங்களூருக்கு அழைத்துப் போனவர்களில் இந்த விக்கியும் உண்டு. இவரைக் கைது செய்தபின் சிவராசன் பற்றி அனைத்து தகவல்களையும் இவர் சொல்லி விட்டதாகத் தெரிவிக்கிறது.

சி.பி.ஐ. தகவல் தெரிந்த உடனே-அதாவது 30-ம் தேதியே சம்பந்தப்பட்ட வீட்டை சுற்றி வளைத்திருக்க வேண்டும். ஆனால் சி.பி.ஐ. 3ம் திகதி இரவுதான் அங்கு போனது என்று சி.பி.ஐ. தரப்பு சாட்சியே சொல்லியிருக்கிறார்.

20.8.91 அன்று காலை தான் (அதாவது தகவல் கிடைத்தது. 20 நாட்கள் கழித்து) அந்த வீட்டுக்குள் பொலிஸ் நழைந்தது. அப்போதுதான் இரண்டு பேரும் சயனைட் சாப்பிட்டு இறந்து கிடந்ததை பொலிஸ் பார்த்தது. அவர்கள் தப்பிச் செல்ல வேண்டும் என்றே சி.பி.ஐ. எதிர்பார்த்தது. எனவே தான் 20 நாட்கள் வரை வீட்டுக்குள் நுழையாமல் வெளியே இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

* 2.8.91 அன்று இரவு பத்து மணிக்குத்தான் சிவராசன் மற்றும் சுபா என்வீட்டுக்கு வந்தனர் என்று சி.பி.ஐ.யே ஒப்புக் கொள்கிறது. அப்படி என்றால் 30.07.91-லிருந்து 02.08.91 வரை அவர்கள் எங்குத் தங்கி இருந்தார்கள் என்பதைச் சொல்லாமல் ஏன் சி.பி.ஐ. மறைக்கிறது? யாரைக் காப்பாற்ற?

* ஜகநாதன் என்பவரால் வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டில் சிவராசனும், சுபாவும் இந்த இடைக்காலத்தில் தங்கி இருக்கிறார்கள். சி.பி.ஐ. அவரை விசாரித்த




போது, விடுதலைப் புலிகள் தங்குவதற்காக இன்னும் சில வீடுகளை வாடகைக்கு எடுத்ததாக அவர் கூறியிருக்கிறார். ஆனால் அந்த வீடுகளில் சி.பி.ஐ. தேடுதல் நடத்தவில்லை.

* போராளிகள் ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள விபரத்தையும் ஜெகநாதன் சி.பி.ஐ.யிடம் கூறி இருக்கிறார். அந்த நர்சிங் ஹோமுக்கு சிவராசனும், சுபாவும் சென்று காயப்பட்டவர்களுக்கு ரத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

* சில மருத்துவமனைகளுக்கு விஜயம் செய்து நோயாளிகளை விசாரித்திருந்தாலே சிவராசனையும், சுபாவையும் கண்டு பிடித்திருக்கலாம்.

* சிவராசனையும், சுபாவையும் பெங்களூருக்கு அழைத்துச் செல்லும்போது அவர்கள் 541824 என்கிற பெங்களூர் நம்பருக்கு போன் செய்ததாகக் கூறுகிறது சி.பி.ஐ. இந்த தொலைபேசி யாருடையது? ஏன் அவர் விசாரிக்கப்படவில்லை.

* பெங்களூரில் இந்திரா நகரில் காலை 7 மணிக்கு நல்ல வெளிச்சத்தில் டாங்கர் லாரியிலிருந்து சிவராசனும், சுபாவும் இறங்குகிறார்கள். மிகவும் செல்வாக்கான ஒருவர் வீட்டு வாசலில் வண்டி நிறுத்தி வைக்கப்படுகிறது. அந்த முக்கிய புள்ளியை சி.பி.ஐ ஏன் கண்டு கொள்ளவில்லை?

* 2.8.91 அன்று நள்ளிரவு சிவராசனையும், சுபாவையும் என் வீட்டுக்கு யார் எப்படி கொண்டு வந்தார்கள் என்பதையும் சி.பி.ஐ. சாமர்த்தியமாக மூடி மறைக்கிறது.

* 8.8.91 அன்று சிவராசன் தங்கியிருக்கும் வீட்டைக் கண்டு பிடித்த சி.பி..ஐ. மயக்கமடையச் செய்யும் வாயுவை அந்த வீட்டுக்குள் செலுத்தி உயிரோடு பிடிக்க ஏன் முயலவில்லை? அவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் வரை ஏன் காத்திருக்க வேண்டும்?

* ராஜீவைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட சக்தி வாய்ந்த ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்து ராணுவத்திடமிருந்துதான் வந்திருக்க வேண்டும். அல்லது ஆயுதங்களைக் கடத்துபவர்களிடமிருந்துதான் கிடைத்திருக்க முடியும். அந்த ஆயுதக் கடத்தல்காரரை சி.பி.ஐ. ஏன் மறைக்கிறது?

* ராஜீவ் வெடி குண்டு வெடித்து இறந்த செய்தி அப்போதைய பொலிஸ் ஐ.ஜி. ராகவனால் இரவு 10.40 மணிக்குத்தான் முதன் முதல் வெளியிடப்பட்டது. அதற்கு முன்பு திருப்பெரும்புதூர் பொதுத் தொலைபேசியிலிருந்து யாரும் இது தொடர்பாக போன் செய்யவில்லை. ஆனால் டெல்லியில் இருக்கும் சேஷனுக்கு இரவு 10.30 மணிக்கு எப்படி செய்தி கிடைத்தது?

அதை அவர் இரவு 10.40 மணிக்கு ஆர்.வெங்கட்ராமனுக்குத் தெரிவித்துள்ளார். இப்படிப்பட்ட முக்கியமான தகவல்களை சி.பி.ஐ. ஏன் மறைக்கிறது?

இவ்வாறு சில முக்கியமான கேள்விகளை ரெங்கநாத் எழுப்பியிருந்தார். இதற்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை.

ராஜீவ் கொலை வழக்கு விபரங்களை இத்தோடு நிறுத்திக் கொண்டு, மறுபடி 1991ம் ஆண்டு மே மாதத்திற்கு திரும்பிச் செல்லுவோம்.

## கைது

ராஜீவ் கொலைக்குப் பின்னர் தமிழகத்தில் அ.தி.மு.க. பதவிக்கு வந்தது. செல்வி ஜெயராம் ஜெயலலிதா முதல்வராகப் பொறுப் பேற்றார்.

ஜெயலலிதா பதவிக்கு வந்ததும் முதலில் குறிவைத்தது கலைஞர் கருணாநிதிக்கல்ல. கலைஞர் ஆட்சியில் பொலிஸ் உயரதிகாரியாக இருந்த துரைக்கும், உள்துறை செயலாளராக இருந்த நாகராஜனுக்குமே குறிவைத்தார்.

இவர்களில் துரை, ஜெயலலிதா வீட்டில் சோதனை நடத்தியவர். அவ்வாறு சோதனையிடும் போது, ஜெயலலிதா தன் கைப்பட எழுதிய பழைய கடிதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

அது ராஜினாமா கடிதம். ஜெயலலிதா ஒரு கட்டத்தில் அரசியலில் இருந்து விலகப் போவதாக எழுதிய கடிதம் அது.

பின்னர் அவரது உயிர்தோழி சசிகலாவும், அவரது கணவர் நடராஜனும் ஜெயலலிதாவை சமாதானப்படுத்தி முடிவை மாற்ற வைத்திருந்தனர்.

அதனால் அக்கடிதம் வெளியிடப்படாமல் கிடந்தது. அதனைத்தான் கண்டெடுத்து, புதிய கடிதம் போல வெளியிட்டு மக்களை குழப்பியிருந்தனர்.

இதனால் துரைமீது மிகுந்த கோபத்தில் இருந்தார் ஜெயலலிதா. அவரது கோபத்தை துரையும் அறிந்திருந்தார்.

ஜெயலலிதா தன்னை அவமானப்படுத்துவது நிச்சயம் என்பதை உணர்ந்த துரை தூக்கமாத்திரைகளை விழுங்கி தற்கொலை செய்து கொண்டார்.

துரை இறந்ததும் தனது அடுத்த எதிரியான உள்துறைச்செயலர் நாகராஜனை குறிவைத்தார் ஜெயலலிதா.

எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் கருணாநிதியின் ஆள் என்று நாகராஜன் பழிவாங்கப்பட்டவர். பந்தாடப்பட்டவர்.

அப்படியிருந்தும் உறுதியோடு தன் பக்கம் நின்றதால், தான் ஆட்சிக்கு வந்ததும் அவரை உள்துறைச் செயலாளராக நியமித்தார் கலைஞர் கருணாநிதி.

கலைஞர் ஆட்சியில் நாகராஜன் வைத்தது



கைதின்பின்னர் நாகராஜன்

தான் சட்டம். நாகராஜன்தான் உண்மையான முதலமைச்சர் என்று எதிர்க்கட்சிகள் கூறி வந்தன.

செல்வி ஜெயலலிதாவை அரசியலில் இருந்து ஒழித்துக் கட்டும் பொலிஸாரின் செயல்களுக்கு உத்தரவிட்டதும், சூத்திரதாரியும் நாகராஜன்தான் என்றே நம்பப்பட்டது.

ஏனெனில் உள்துறைச் செயலாளரின் கீழ்தான் சட்டம். ஒழுங்கு பிரிவுகளும் இருக்கும்.

நாகராஜனை கைது செய்து அரசியல் பழி தீர்க்க செல்வி ஜெயலலிதா ஏவிய அஸ்திரம், "புலிகளுக்கு உடந்தையாக இருந்தவர்" என்பதுதான்.

தன்னை ஜெயலலிதா அரசு கைது செய்யப் போவதாக கலைஞர் கருணாநிதியிடம் நாகராஜன் கூறினார்.

அதற்கு கலைஞர் "நான் இருக்கும்போது என்ன பயம்? உங்களை கைது செய்தால் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பேன் என்றா நினைக்கிறீர்கள்?" என்று தைரியம் கொடுத்திருக்கிறார்.

அவ்வாறு தைரியம் கொடுத்த சில நாட்களில் நாகராஜன் கைது செய்யப்பட்டார்.

பிணையில் வெளியே வரமுடியாத 'தடா' சட்டத்தின்கீழ் நாகராஜனை கைது செய்தனர்.

'கைவிடமாட்டேன்' என்று உறுதியளித்த கலைஞர் கருணாநிதி கைவிட்டே விட்டார்.

சிறையில் இருந்த நாகராஜனை தி.மு.க. பிரமுகர்கள்கூட சென்று பார்க்கவில்லை.

நாகராஜனை கைது செய்ததை அடுத்து கலைஞர் கருணாநிதியும் கைது செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

தி.மு.க. எம்.பியும், முன்னாள் அமைச்சருமான சுப்புலட்சுமி ஜெகதீசனையும் கைது செய்தார்கள்.

புலிகளது தமிழகப் பொறுப்பாளராக இருந்தவர் சாந்தன். குண்டுச் சாந்தன் என்றழைப்பார்கள். தேடுதலின்போது சயனைட் அருந்திப் பலியானார்.

## விடுதலை

இவருக்கு உதவியதாகவே சுப்புலட்சுமி ஜெகதீசன் கைதானார். சாந்தன் உட்பட புலிகள் இயக்கத்துக்கு அவர் உதவியது உண்மைதான்.

தமிழ் உணர்ச்சிமிக்கவர் சுப்புலட்சுமி. அதே உணர்ச்சியோடு ஈழப் போராளிகளை ஆதரித்து உதவினார்.

அவருக்கும் பத்மநாபா கொலைக்கும் தொடர்பு இருப்பதாக பழிபோட்டு கைது செய்தனர்.

நீண்டகாலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவரை நீதிமன்றம் விடுதலை செய்தது.

தமிழக பொலிஸ் அதிகாரிகளுக்குள் பல பிரச்சனைகள் இருந்தன. ஆட்சி மாறியதும் கருணாநிதி ஆட்சியில் செல்வாக்குடன் இருந்த பொலிஸ் அதிகாரிகளை, அவர்களால் பாதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் பழிவாங்கத் துடித்தனர்.

தமது பழிவாங்கும் படலத்திற்கு தோதாக புலிப் பூச்சாண்டி காட்ட ஆரம்பித்தனர்.

ராஜீவ் காந்தி கொலையைத் தொடர்ந்து ஜெயலலிதா, வாழப்பாடி ராமமூர்த்தி போன்றோரை தீர்த்துக்கட்ட புலிகள் திட்டமிட்டதாக புரளிகளைக் கிளப்பிவிட்டனர்.

தமிழகத்தின் பொலிஸ் மற்றும் உளவுத் துறைகளுக்குள் புலிகள் பயங்கரமாக ஊடுருவிவிட்டனர் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

## பட்டியல்

புலிகள் தமிழ் நாட்டில் சம்பந்தப்பட்ட சில சம்பவங்களை தங்கள் புரளிகளுக்கு உதாரணங்களாக கூறினார்கள்.

அவை பின்வருமாறு:

* நவம்பர் 6, 1989: இரண்டு மாருதி ஜிப்சிகளில் ஆயுதம் தாங்கிய 12 புலிகள் ராமநாதபுரம் கடற்கரையை நோக்கி சென்று கொண்டிருந்தபோது திருச்சிக்கு அருகே உள்ள சோதனைச் சாவடிகளில் இரண்டு பொலிசார் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள்.

குறுக்குக் கட்டையை அகற்றும்படி புலிகள் பொலிசாருக்கு உத்தரவிட்டனர். பொலிஸ் மறுத்தது. மறுத்தவர்கள் சுடப்பட்டார்கள்.

மீண்டும் அதே சாலையில் 80 கி.மீ தள்ளி, பொலிஸ் கண்காணிப்பாளர் தலைமையில் வந்த பொலிசாரால் புலிகளது ஜீப்புகள் மறிக்கப்பட்டன.

தங்களைத் தொடர்ந்து செல்ல அனுமதிக்குமாறு புலிகள் துப்பாக்கி முனையில் மிரட்டினார்கள். பொலிஸ் அனுமதித்தது.

* ஜூன் 18, 1989: வேதாரண்யத்தில் இருந்து இலங்கைக்கு ஆயுதம் ஏற்றிச் சென்று கொண்டிருந்த படகொன்றை கைப்பற்றிய சுங்கப்பகுதி கண்காணிப்பாளரும் இரண்டு இன்ஸ்பெக்டர்களும் யாழ்ப்பாணத்திற்கு கடத்திச் செல்லப்பட்டனர். அங்கு 40 நாள் தடுத்து வைக்கப்பட்டனர்.

மத்திய அரசிடம் இருந்து உதவிகள் எதுவும் கிடைக்காதமையால், உள்ளூர் சுங்க அதிகாரிகள், புலிகளது நண்பரான சண்முகத்தின் உதவியை நாடினார்கள். சண்முகம் இரண்டு நாட்களில் அந்த மூன்று பேரை அழைத்து வந்தார்.

அதன் பின்னர் புலிகளை சுங்கப் பகுதியினர் தடுத்து நிறுத்துவதில்லை.

இப்படிப் பட்டியலிட்டு, தமிழக பொலிஸ் உயர் பீடத்தில் புலிகளது ஊடுருவல் இருந்தமைக்கான அடையாளமாக காண்பித்தனர்.

இக்காலகட்டத்தில் வை.கோ. தி.மு.க. எம்.பி.யாக இருந்தார். அவரது சகோதரரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

இதே காலகட்டத்தில் கொழும்பில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர்.

சக்கை லொறியும் தயாரானது.

(தொடர்ந்து வரும்)




மகனுக்கு தூக்கு என்றதும் சாபமிடும் பேரறிவாளனின் அம்மா அற்புதம்

## மகன் வருவானா?

**ரா**ஜீவ் கொலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளனின் தந்தை குயில்தாசன் ஜனவரியில் எழுதிய கவிதை.

*தை பிறந்தால் வழி பிறக்குமா?*
*தீர்த்து சொல்லு குயிலே!*
*இந்தப் பொங்கலுக்காவது*
*என் மகன் வருவானா*
*எண்ணி சொல்லடி குயிலே!*

*களம் வென்று வந்தே-என்*
*கண்களை நிறைப்பானா?*
*நெருங்கி வரும் என்றன்*
*சாவை தடுப்பானா?*

## காணாமல் போன கோப்புகள்

நரசிம்மராவ் ஆட்சியில் பல முக்கிய அரசாங்கக் கோப்புகள் காணாமல் போய்விட்டன; அந்தக் கோப்புகள் விவரம்:

1. கோப்பு எண் 8-1 WR/JSS/90/Vol.III நவம்பர் 89லிருந்து-ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அதிகாரிகள் எழுதிய குறிப்புகளைக் கொண்ட கோப்பு; பிரதமர் அலுவலகத்திலிருந்து 1991ம் ஆண்டில் இது காணாமல் போய்விட்டது. பிறகு இந்தக் கோப்பை சரிப்படுத்தி ஒட்டு வெட்டு வேலைகளைச் செய்து ஜெயின் கமிஷன் முன் நரசிம்மராவ் ஆட்சி சமர்ப்பித்தது (இப்படி கோப்புகளைத் திருத்தி அமைப்பது சட்ட விரோதமான நடவடிக்கையாகும்.)

2. கோப்பு எண் 1/12014/5/911-A.S./DIII நீதிபதி வர்மா மற்றும் நீதிபதி ஜெயின் கமிஷன்களின் விசாரணை வரம்புகள் பற்றியது இந்தக் கோப்பு, 1995 முதல் காணவில்லை.

3. சந்திராசாமி, மற்றும் ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணியசாமி ஆகியோருடன் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள தொடர்பு கொண்டு பேசிய போது இடைமறித்துக் கேட்கப்பட்ட தகவல்களைக் கொண்ட இந்தக் கோப்பை, பிரதமர் அலுவலக முத்த அதிகாரிகளே அழித்து விட்டனர்.

4. 1987ல் ராஜீவ் காந்தியைக் கவிழ்க்க-அன்றைய குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்-சந்திராசாமி ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி இந்திய உளவு நிறுவனம் (I.B) கண்டறிந்த உண்மைகளும், பரிந்துரைகளும் அடங்கிய முக்கிய கோப்பையும் காணவில்லை.

5. ராஜீவ் கொலைபற்றி உளவு நிறுவனங்கள் உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவானிடம் தெரிவித்த கருத்துக்கள், இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோப்பு காணப்படவில்லை.

6. ராஜீவை சென்னையில் கொலை செய்யலாமா? அல்லது டில்லியில் கொலை செய்யலாமா? என்ற உள் கேள்விகளோடு, 1991 ஏப்ரல் 20ம் தேதி பரிமாறிக் கொள்ளப்பட்ட ஒரு வயர்லெஸ் தகவலை உளவுத்துறை இடைமறித்துப்பதிவு செய்தது. இந்த விவரங்கள் அடங்கிய கோப்பும் காணவில்லை.

7. நரசிம்மராவ் அரசாங்கமே-ஜெயின் கமிஷன் விசாரணையை நிறுத்திவிடுவதற்கான முயற்சிகளில் இறங்கியது. இதுபற்றிய விவரங்களடங்கிய கோப்பும் காணவில்லை.

www.padippakam.com

# அடிக்கடி மாறிவரும் ஆட்சியாளரின் காலக்கெடு

**அலசுவது - இராஜதந்திரி**

இந்த ஆண்டின் இறுதிக்குள் இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போவதாக ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சிலரிடம் கூறியிருக்கிறார்.

வடக்கு-கிழக்கு முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள் சமீபத்தில் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்திருந்தார்.

அவரிடமும் இந்த ஆண்டின் இறுதிக்குள் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போவதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இதனை வரதராஜப் பெருமாளும் மிகவும் நம்பிக்கையோடு பத்திரிகைகளுக்கு அறியத்தந்துள்ளார்.

ஆனால் 04.05.99 அன்று பெந்தர-எல்பிட்டிய விளையாட்டரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை மேற்கண்ட உத்தரவதத்துக்கு மாறாக அமைந்துள்ளது.

"ஒரு வருடத்திற்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, தீர்வு யோசனையை பாராளுமன்றத்தில் முன்வைப்போம்!" என்று ஜனாதிபதி சந்திரிக்கா அங்கு கூறியிருக்கிறார்.

தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் கூறியிருந்த காலவரையறையைவிட, மேலும் ஐந்து மாத காலம் பின்தள்ளியே புதிய காலவரையறை கூறியிருக்கிறார்.

இக் காலவரையறையும் மேலும் பின்தள்ளிப் போகும் என்பதில் சந்தேகமில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக ஜனாதிபதி சந்திரிக்காவும், அமைச்சர் பீரிசும் பலமுறை இவ்வாறான காலவரையறைகளை தெரிவித்து வந்துள்ளனர்.

அத்தனை காலவரையறைகளும் காலாவதியாகும் கட்டத்தில் புதிய காலவரையறைகள் கூறப்படுவதும் வழக்கமாக இருந்து வருகிறது.

இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா முதற்கொண்டு இன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா வரை தமிழ் பேசும் தரப்புக்கு எண்ணற்ற வாக்குறுதிகளை மட்டுமே வழங்கியிருக்கின்றனர்.

அடம்பிடிக்கும் குழந்தைக்கு அம்புலிமாமாவை பிடித்துத் தருவதாக கூறி ஏமாற்றுவது போல, தமிழ் பேசும் தலைமைகளுக்கு சிங்களத் தலைவர்கள் இனிப்பான வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றி வந்துள்ளனர்.

தமிழ் பேசும் தலைமைகளும் சேர்.பொன். அருணாசலம் முதற்கொண்டு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வரை சிங்களத் தலைமைகளது அம்புலிமாமா கதைகளை நம்பி, தமிழ்பேசும் மக்களிடமும் அதனை புளகாங்கிதத்துடன் கூறிவந்தனர்.

வடக்கு-கிழக்கில் சிங்களத் தலைமைகளை செம்கம்பளம் விரித்து வரவேற்பதிலும் தமிழ்க் கட்சிகள் அக்காலத்தில் முன்னின்றன.

இறுதியில் அவர்களுக்கு கிடைத்தது பெருத்த ஏமாற்றமேயாகும். சேர்.பொன். இராமநாதன் முதல், எஸ்.ஜே.வி. செல்வநாயகம்வரை இறுதியில் 'நாம் ஏமாந்துபோனோம், எம்மை ஏமாற்றிவிட்டனர்' என்று தலையில் அடித்து புலம்பியதே வரலாறாக இருந்துள்ளது.

தமிழ் பேசும் தரப்பு ஏமாந்துபோகும் வரலாற்றுக்கு தனது அனுபவத்தோடு முற்றுப் புள்ளியிடுவதற்கே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் பாடுபட்டார்கள்.

'சிங்களத் தலைமைகளை நம்பியது போதும். இனி நம்பவே முடியாது' என்பதுதான் இராமநாதன் காலம் முதல் செல்வா காலம் வரையான ஏறக்குறைய 25 ஆண்டுகளாக பெற்ற அனுபவத்தின் பெறுபேறாகும்.

நாட்டின் சூழ்நிலை, கட்சிகளது பின்னணிகள் என்பவற்றை கணக்கில் எடுக்காது, ஆட்சித் தலைவர்களை நம்பியதுதான் தமிழ் பேசும் தரப்பின் அந்தக் கால தலைமைகள் ஏமாந்து போனதற்கு முக்கிய கரணமாகும்.

'24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டு வருகிறேன்' என்று சூளுரைத்து பதவிக்கு வந்தவர் பண்டாரநாயக்கா.

அவருடன் சென்று தந்தை செல்வநாயகம் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு உடன்பாடு செய்து கொண்டார்.

அந்த உடன்பாடு செய்துகொள்ள முன்னதாக தென்னிலங்கையின் சூழ்நிலையையும், பண்டாரநாயக்காவுக்குள்ள பின்னணியையும் செல்வா அவர்கள் ஆய்ந்து அறிய தவறியிருந்தார்.

தனிச் சிங்கள சட்டத்தை 24 மணி நேரத்தில் கொண்டுவருவேன் என்று கூறிய ஒருவர் வெற்றி பெறமுடிந்தது என்றால், பேரினவாத சிந்தனை நன்கு தலைதூக்கியிருந்தது என்பதே அர்த்தமாகும்.

பேரினவாத சிந்தனையை தூண்டியே பண்டாரநாயக்கா பதவிக்கு வந்த பின்னர், அவரே நினைத்தாலும் அதனை தணிக்க முடியாதவரானார்.

தீயை மூட்டுவது சுலபம். அணைப்பதுதான் கடினமானது. தூண்டிவிட்ட தீ நாசம் விளைவித்தே தணியும்.

இனவாதம் என்பதும் கொடிய தீ போன்றதேயாகும்.

பேரினவாதத்தை சார்ந்து பதவிக்கு வந்த பண்டாரநாயக்காவால், அதனை மீறி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

அதனைக்கிழித்து பேரினவாதத்திற்கு தீனியாக கொடுக்கத்தான் முடிந்தது.



சூழ்நிலைகளை ஆராயாது தனிப்பட்ட தலைவர்களை மட்டுமே நம்புவது அரசியல் விவேகம் அல்ல.

'வடக்கு-கிழக்கை பிரிக்க மாட்டேன்' என்று ஜே. ஆர்.வாய்மொழியாக ராஜீவ் காந்திக்கு கூறினார். ஜே. ஆர். ஒரு கனவான் என்று நம்பிய ராஜீவ் அந்த வாய்மொழியை நம்பினார்.

'நான் அப்படியொரு வாக்குறுதியே கொடுக்கவில்லை' என்று ராஜீவ் இறந்தபின்னர் ஜே. ஆர். கூறியிருந்தார்.

வடக்கு-கிழக்கை பிரிக்க வேண்டும் என்று பேரினவாத சக்திகள் முனைப்போடு இருக்கும் சூழ்நிலையில், அதற்கு மாறானவராக தன்னை காட்டிக் கொள்ள ஜே. ஆர். தயாராக இருக்கவில்லை.

ஏனெனில் ஜே. ஆரும் சிங்கள மக்களது ஒப்பற்ற தலைவராக வரலாற்றில் இடம்பிடிக்கவே விரும்பியிருந்தார்.

தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசம் ஒன்றாக இருப்பதை பேரினவாத சக்திகள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள் என்பதை ஜே. ஆர் அறிந்து வைத்திருந்தார்.

அதேபோல இன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களும் சிங்கள மக்களது தலைவியாக தன்னை முன்னிறுத்துவதிலேயே இன்று அக்கறை காட்டி வருகிறார்.

சமீபத்தில்கூட மடுவை கைப்பற்றிய பின்னர், சிங்கள கிறிஸ்தவ மக்களுக்காக மடுவை மீட்டுத் தந்த தலைவியாக அவரை சித்தரிக்கும் சுவரொட்டிகள் வெளியிடப்பட்டிருந்தன.

தீர்வுப் பொதியிலும் வடக்கு-கிழக்கை பல கூறுகளாக பிரிக்கும் திட்டத்தையே அடிப்படையாக வகுத்து வைத்துள்ளனர்.

இத்தகைய தீர்வுப் பொதியைக் கூட அமுல்படுத்த முடியாதவராகவே ஜனாதிபதி சந்திரிக்கா காலத்தை கடத்தி வந்திருக்கிறார்.

இத்தகைய அரைகுறைப் பொதியைக் கூட, தமிழ் பேசும் தரப்பை இராணுவரீதியில் வெற்றி கொண்ட பின்னரே பேரினவாதத்தின் ஆசிர்வாதத்தோடு தமிழ் பேசும் தரப்பின் தலையில் திணிக்க நினைத்திருக்கிறார்கள்.

இதனையிட்டு எதிர்ப்பையும், கொதிப்பையும் காட்ட வேண்டிய தமிழ்க் கட்சிகள் அதற்கு மாறாக, தீர்வுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைக்கப் போகிறார் என்று பூரிப்போடு கூறுவதுதான் வேடிக்கையாக உள்ளது.

தீர்வுப் பொதிக்கு யோசனைகளை கொடுத்ததாக சகல தமிழ்க் கட்சிகளும் பீற்றிக் கொள்கின்றன. அந்த யோசனைகளை குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, அதே பொதியை முன்வைக்கப் போவதாக அரசு கூறுவதையும் தமிழ்க் கட்சிகள் பூரிப்போடு ஏற்கின்றன.

எனவே இக் கட்சிகள் முன்வைத்த யோசனைகள் தாமும் தமிழ் பேசும் மக்களுக்காக உரத்து வாதாடுவது போல காண்பிக்கும் நாடகங்களேயாகும்.

அரை குறைப் பொதியை ஏற்க முடியாது என்று அரசியல் உறுதியோடு முன்வைக்கப்பட்ட யோசனைகளல்ல என்பது தெளிவாகிறது.

அவ்வாறு அரசியல் உறுதியோடு முன்வைத்திருந்தால், தீர்வுப் பொதியை முன்வைக்கப் போவதாக ஆட்சியாளர் கூறியதும் இக்கட்சிகள் அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும்.

'எங்கள் திருத்த யோசனைகளுக்கு என்ன நேர்ந்தது?' என்று கேள்வி எழுப்பியிருக்க வேண்டும். அதற்கு மாறாக ஜனாதிபதி கூறியதை வரவேற்றது மூலம் தம்மையறியாமலேயே தமது சரணடைவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனாலும், தற்போதைய அரைகுறைப் பொதியைக்கூட முன்வைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படப்போவதில்லை.

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றுக்கு முன்பாக பொதியை அவிழ்க்க ஆட்சியாளர்கள் முன்வரப்போவதில்லை.

ஒரு வேளை ஆட்சியாளர்களே வெளியுலகை திருப்தி செய்வதற்காக பொதியை அவிழ்க்க நினைத்தால்கூட, அந்த நினைப்பை கெடுக்கும் சூழ்நிலைகளே இருக்கின்றன.

இன்றைய யுத்தம் தமிழ் பேசும் தரப்புக்கு எதிரான யுத்தமாக பேரினவாதிகளால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

பௌத்த மத பீடங்களின் ஆசியுடன் போரைத் தொடரும் நிலைக்கு ஜனாதிபதி சந்திரிக்கா ஆளாகியுள்ளார். போர்க்கள நிலவரங்களை விளக்க தனது அமைச்சர்களை பௌத்த மதகுருமார்களிடம் அனுப்பியும் வைத்திருந்தார்.

1994ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பேரினவாத சக்திகளுக்கு எதிராக சமாதானப் பிரசாரத்தை சந்திரிக்கா கையில் எடுத்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தென்னிலங்கையில் நடைபெற்ற சகல தேர்தல்களிலும் போர் வெற்றிப் பிரசாரத்தை நம்பியே ஜனாதிபதி சந்திரிக்காவும் அவரது அணியினரும் களமிறங்கினார்கள்.

இத்தகைய பிரசாரங்களே மறுபடி பேரினவாத சக்திகளுக்கு புத்துயிர் கொடுத்துள்ளன.

பேரினவாதம் தவிர வேறு எந்தக் கொள்கையும் அற்ற ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றுடன் பொதுஜன முன்னணி நட்பு கொள்ள முன்வந்துள்ளது.

இத்தகைய நிலைப்பாடானது பேரினவாத முகாமுடன் பொ.ஐ.முன்னணி சமரசம் செய்து கொண்டுள்ளதின் வெளிப்பாடேயாகும்.

தமது பிரசாரம் மூலம் பேரினவாதத்துக்கு புத்துயிர் கொடுத்துவிட்டு, அதே



**ஆட்சியாளர்கள் கூறுவதை அப்படியே நம்புவது அரசியல் தலைமையாகாது! சொல்லுக்கும்,செயலுக்கும் சூழ்நிலைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை கண்டறிந்து வியூகம் வகுப்பதே விவேகம்!**

பேரினவாதத்தின் முன் மண்டியிட்ட முன்னைய ஆட்சியாளர்கள் போன்றே, இன்றைய ஆட்சியாளர்களும் மாறியுள்ளனர்.

எனவே, தற்போதைய அரை குறைப் பொதியைக்கூட முன்வைப்பதை பேரினவாத முகாம் அனுமதிக்கமாட்டாது. அதனை எதிர்த்து ஆட்சியாளர்கள் செயற்படப் போவதில்லை.

போரை முடித்துவிட்டு தீர்வைக் கொடுக்கலாம் என்பது ஜனாதிபதி சந்திரிக்காவின் கூற்றல்ல. தென்னிலங்கையின் பௌத்த பீடாதிபதிகள் சிலர் பல மாதங்களுக்கு முன்னர் கூட்டாக விடுத்த அறிக்கையே அதுவாகும். பேரினவாத முகாமின் நிலைப்பாடும் அதேதான்.

தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கிவிட்டால், தற்போதைய அரைகுறைப் பொதியைக்கூட கனம் குறைத்து கொடுக்கலாம் என்பதே பேரினவாதத்தின் உத்தி என்பது தெளிவு.

எனவே இன்னும் ஒரு வருடத்தில் போரை முடிவுக்கு கொண்டு வந்துவிட்டு, தீர்வை முன்வைக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருப்பது பேரினவாத முகாமின் நிலைப்பாட்டின் எதிரொலியாகவே அமைந்துள்ளது.

ஆனால் போரை முடிவுக்கு கொண்டு வரும் சக்தி ஆட்சியாளர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இனப் பிரச்சனைக்கு, அரசியல் தீர்வு எட்டப்படும் வரை போரை முடிவுக்கு கொண்டுவர எச் சக்தியாலும் முடியாது என்பதையே கள நிலவரங்கள் புலப்படுத்துகின்றன.

இன்னொரு விடயத்தையும் கவனத்தில் கொண்டாக வேண்டும். இப்போதும் அரசும், ஐ.தே.கட்சியும் இணக்கத்துக்கு வந்தால் தீர்வு கிடைத்துவிடும் என்று பழைய பல்லவியையே தமிழ்க் கட்சிகளும் வாய் ஓயாமல் பாடிக்கொண்டிருக்கின்றன.

சூழ்நிலை மாற்றங்களைக்கூட இக் கட்சிகள் கருத்தில் எடுத்துக்கொள்ள தவறுகின்றன. அதனால் சூழலுக்கு நேர்மாறான கருத்துக்களையே கூறிவருகின்றன.

இன்று பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமன்றி, ஜே.வி.பி.யும் முக்கியமான சக்தியாகும்.

எதிர்வரும் தென்மாகாணசபைத் தேர்தலின் பின்னர் ஜே.வி.பி.யின் பலம் மேலும் அதிகமாகவுள்ளது.

அதுமட்டுமன்றி பல மாகாணசபைகளில் ஜே.வி.பியை நம்பியே பொ.ஜ.முன்னணி ஆட்சி நடத்துகிறது.

எனவே, ஐ.தே.கட்சியைவிட ஜே.வி.பியின் இணக்கமும் இனப்பிரச்சனை தீர்வு யோசனைகளுக்கு இனி முக்கியமாக திகழப்போகிறது.

ஆட்சியாளரின் அரைகுறைப் பொதியைக் கூட ஜே.வி.பி. திட்டவட்டமாக நிராகரித்துவிட்டது.

அதுமட்டுமன்றி சிறீலங்கா முற்போக்கு முன்னணியும், தினேஷ் குணவர்த்தனா கட்சியும் பொதியை ஆதரிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, பொதியை முன்வைத்தபோது இருந்த சூழ்நிலையைவிட மிக மோசமான பேரினவாத சூழநிலையே தற்போது நிலவுகிறது.

சில தினங்களுக்கு முன்பாக கொழும்பில் வீரவிதான என்ற அமைப்பு மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தது. மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

யுத்தத்தை ஆதரித்தும், தமிழ் மக்கள் நாடு முழுவதையும் கைப்பற்ற நினைப்பதாக கூறியுமே இந்த பேரினவாத எழுச்சி நடந்துள்ளது.

இந்த வீர விதான இயக்கத்தின் பின்னணியில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சரே நிற்பதாக சிங்களப் பத்திரிகை ஒன்று அம்பலப்படுத்தியுள்ளது.

இதனையிட்டுக்கூட தமிழ்க் கட்சிகள் எதுவும் கண்டுகொள்ளவில்லை. பூனை கண்களை மூடிக்கொண்டு உலகம் இருண்டு விட்டது என்று நினைப்பதுபோல, இக் கட்சிகள் சூழ்நிலைகளை நோக்காது, அவற்றுக்கு மாறாக புலம்பிக் கொண்டிருக்கின்றன.

ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் அவசரகால சட்டத்தின் கீழ் இந்த ஊர்வலத்துக்கு தடைவிதித்திருக்க முடிந்திருக்கும்.

முன்னரும் சிங்களக் கமிஷன் இனவாத விவாதங்கள் நடத்துவதற்கு ஆட்சியாளர்களே களம் அமைத்து கொடுத்திருந்தனர். தற்போது வீரவிதான இயக்கம் போன்றவை வளர்வதை ஆட்சியாளர்கள் அனுமதித்துள்ளனர்.

எனவே, இந்நிலையில் தகுந்த தீர்வை மட்டுமல்ல, அரை குறைத் தீர்வைக்கூட ஆட்சியாளர்களால் முன்வைக்க முடியாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

காலம் செல்ல மேலும் நிலவரம் மோசமாவதுடன், பேரினவாத சக்திகளது கரங்களே தென்னிங்கை அரசியலில் மேலோங்கும்.

எனவே, ஆட்சியாளரது வாக்குறுதிகளை நம்பியிருக்காது, சூழ்நிலை மேலும் மோசமாக முன்பாக மூன்றாம் தரப்பின் தலையீட்டை ஒன்றுபட்டு நின்று கோருவதே தமிழ் பேசும் தரப்பின் விவேகமான நிலைப்பாடாக இருக்கும். ●

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

## வன்னியில் மாணவர்கள் வரவில் ஏன் வீழ்ச்சி?

"வன்னியில் பாடசாலைகளுக்கு மாணவர் வரவு வீழ்ச்சி. புலிகள் உடற்பயிற்சி கொடுப்பதால் மாணவர் வரவு குறைகிறது" இப்படியொரு செய்தி வெளியாகியிருந்தது.

பாடசாலையிலேயே உடற் பயிற்சி சொல்லிக் கொடுப்பது வழக்கம்தானே. அதனை புலிகள் சொல்லிக் கொடுத்தால்கூட உடல் ஆரோக்கியத்துக்கு நன்மைதானே. அதற்காக மாணவர்கள் ஏன் பயப்படப்போகிறார்கள்.

புலிகள் கொடுக்க நினைத்தது உடற் பயிற்சியல்ல. இராணுவப் பயிற்சி. இதற்கும் பாடசாலைக்கு மாணவர்கள் வரவு குறைவதற்கும் ஒரு சம்மந்தமுமில்லை.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச மக்கள் அனைவருக்கும் புலிகள் இராணுவப் பயிற்சி கொடுப்பது எனில், பாடசாலைக்கு செல்லாதவர்களுக்கும் பயிற்சி உண்டுதானே. பின்னர் பாடசாலைக்கு செல்லாதிருந்து என்ன பயன்?

வன்னியில் மாணவர்கள் வரவு குறைவதற்கு உண்மையான காரணம், இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள சூழ்நிலைதான்!

எத்தனையோ பாடசாலைகள் இடிந்து போய்க் கிடக்கின்றன. குடிமனைகள் ஊடான படை நகர்வால் மக்கள் இடம்பெயர்ந்ததில் ஏராளமான பாடசாலைகளும் பாழடைந்து கிடக்கின்றன.

அப்படியிருந்தும் இடம் பெயர்ந்து சென்ற பகுதிகளில் குடிசைகளிலும், மரநிழல்களிலும் பாடசாலைகள் நடந்து வருகின்றன. ஆசிரியர்களும் சேவை உணர்வுடன் பலத்த சிரமங்களுக்கிடையே கல்வி புகட்டி வருகின்றனர்.

இப் பாடசாலைகளின் தேவைகளுக்கு புலிகளும் உதவிகள் செய்து வருகிறார்கள்.

புலிகள் கட்டாயமாக ஆட்களை சேர்க்க நினைத்திருந்தால், பாடசாலைகளை நடக்கவிடாது செய்திருக்கலாம்.

புலிகளில் இருந்து குறிப்பிட்ட காலத்தின் பின்னர் விலகுவதற்கு தற்போதுகூட புலிகள் அனுமதிக்கிறார்கள். கட்டாயப்படுத்தி ஆள் சேர்க்கக்கூடாது என்பதில் புலிகள் உறுதியாக உள்ளனர்.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் வீதியோரங்களிலும், காடுகளிலும் தான் வாழ்க்கை நடத்துகிறார்கள். புலிகள் ஆள் பிடிக்க நினைத்தால் பாடசாலைகளுக்கு ஏன் போக வேண்டும்? வீதிகளில் வைத்தே பிடித்துப் போய்விடுவார்களே!

சில காலத்தின் முன்னர் புலிகள் ஆள் சேர்த்தனர். கட்டாயமாக தம் பிள்ளைகளை பிடித்துப் போய்விட்டதாக பெற்றோர் படையிடம் முறையிட்டனர்.

அப்படி முறையிட்டால்தான் அந்தக் குடும்பங்கள் அரச கட்டுப்பாட்டு பகுதியில் வாழ முடியும்.

தமது குடும்பங்களுக்கு பிரச்சனை வரக்கூடாது என்பதற்காக, தம்மை கட்டாயப்படுத்தி புலிகள் அழைத்துச் செல்வதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்திவிட்டு புலிகளுடன் போனவர்களும் உண்டு.

புலிகளோடு புதிதாக ஆட்கள் இணைவதை தடுக்க விரும்பினால், அரசு செய்ய வேண்டியதெல்லாம், இராணுவத்தீர்வை கைவிட்டு, அரசியல் தீர்வுக்கான நகர்வுகளை மேற்கொள்வதுதான்!

அல்லது குறைந்த பட்சம் தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்ற கோணத்தில் மேற்கொள்ளப்படும் கைதுகள், பாஸ் நடைமுறைகள், பொருளாதார தடைகள் போன்ற கெடுபிடிகளையாவது நிறுத்த வேண்டும்.

***

யாழ் குடாநாட்டில் மினி சினிமாக்களில் நீலப்படம்கூட காண்பித்தார்கள். இதெல்லாம் தெரிந்தும் அங்குள்ள தமிழ்க் கட்சிகள் தலையிடவில்லை.

இவற்றில் எல்லாம் தலையிட்டால் நாளை வாக்குகள் குறைந்து போகலாம் என்று அச்சம்.

ஒரு உதாரணம்: யாழ் குடாநாட்டில் ஒரு பகுதியில் சாதிரீதியான பேதங்கள் தலை தூக்கியிருந்தன. அதனைத் தீர்ப்பதற்கு பதிலாக, அதனை தக்க வைப்பதுபோல கட்சிப் பொறுப்பாளர் நடந்து கொண்டார்.

'நாம் சாதிகளை ஒழிக்கவும், சாதி பேதங்களை அகற்றவும் போராட வேண்டுமல்லவா?' என்று உறுப்பினர் ஒருவர் கேட்டாராம். அதற்கு பொறுப்பாளர் சொன்னாராம்; "சும்மா இரும் ஐசே, இதில் எல்லாம் தலையிட்டால் வோட் விழாது!" இதேதான் மினி சினிமா நிலவரமும்!

புலிகள் ஒரே ஒரு அறிவுப்போடு மினிசினிமாக்களை இழுத்து மூட வைத்துவிட்டார்கள்.

இதனால் யாழ் குடாநாட்டில் பெற்றோர்கள் மத்தியில் புலிகளுக்கு நற்பெயர்.

ஆனால் ஒன்று, தமிழ்க் கட்சிகள் தலையிட நினைத்திருந்தாலும், படையினர் அனுமதித்திருப்பார்களா என்பது சந்தேகம்தான்! ●


படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 63

**கடந்தவாரம்**

**போயிங் விமானம் வாங்குவது வீண் விரயம் என்று கூறிய கலாசார அமைச்சர் சியம்பாவிடம் நீச்சல் தடாகம், லாண்ட் ரோவரில் வானொலி நிலையம் போன்றவற்றை காண்பித்து எரிச்சலூட்டுகிறான். அதேசமயம் உகண்டா வானொலியில் மக்கள் சிக்கனமாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்று அமீனின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.**

**இனி....**

# இடி அமீன்

தருவது ரசிகன்

**1974** மார்ச் மாதத்தில் உகண்டாவின் இராணுவப் பிரிவுகளுக்கு இடையில் மோதல்கள் தலைதூக்கின.

இது அமீன் எதிர்பாராத நிகழ்வாக இருந்தது.

இராணுவப் பொலிஸின் தலமை அலுவலகத்தை இராணுவப் பிரிவொன்று தாக்கியது.

இராணுவப் பொலிஸ் பிரிவுக்கு தென்சூடான் நாட்டவனான பிரிகேடியர் ஹுசைன் மரெல்லா பொறுப்பாக இருந்தான்.

இராணுவப் பிரிவொன்றின் சிப்பாய்கள் சிலரை இராணுவப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தக் கைதை அடுத்தே மோதல்கள் தலைதூக்கின.

"வந்தேறு குடிகள் எங்களை மேய்க்க நினைக்கிறார்கள். பாடம் புகட்டியே தீர வேண்டும்!" என்று அந்த இராணுவப்பிரிவின் பொறுப்பதிகாரி தூண்டிவிட்டான்.

சூடானியர்களுக்கு எதிரான கலவரம் போலவே மோதல்கள் நடந்தன.

இராணுவத்தில் உள்ள சூடானியர்களை அப்புறப்படுத்தும் நோக்கம் கொண்ட இராணுவ அதிகாரிகள் இந்த மோதல்களை ஊக்குவித்தனர்.

இராணுவப் பொலிஸ் தலைமையகம் பீரங்கிகளால் தாக்கப்பட்டது. அங்கிருந்தவர்கள் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. உயிர் தப்பினால் போதும் என்று ஓடினார்கள்.

கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன. ஆவணங்கள் நாசமாகின.

இத் தாக்குதல் செய்தியை அமீனுக்கு உடனடியாக தெரியப்படுத்த முடியவில்லை.

ஜனாதிபதி மாளிகையுடன் தொடர்பு கொண்ட போது, "அதிபர் தற்போது இங்கே இல்லை" என்று பதில் கிடைத்தது.

"அவரை தொடர்பு கொள்ள முடியாதா?" என்று இராணுவத் தளபதி கேட்டபோது, "மன்னிக்கவும், அது பற்றி எமக்கு எதுவும் தெரியாது," என்று பதில் வந்தது, ஜனாதிபதி மாளிகையிலிருந்து.

தலைநகருக்கு வெளியே செல்வதாகக் கூறிவிட்டு, தலை நகரான கம்பலாவுக்குள்ளேயே உல்லாச விடுதி ஒன்றில் ஒய்வெடுத்துக் கொண்டிருந்தான் அமீன்.

இரண்டு அழகிகளை தன்னுடன் அழைத்துப் போயிருந்தான். இருவரும் ஜனாதிபதி மாளிகையில் முக்கிய பொறுப்பில் இருப்பவர்கள்.

அவர்களது அழகுக்காகவே அங்கு வேலையில் சேர்க்கப்பட்டவர்கள்.

ஜனாதிபதி மாளிகைக்குள்ளேயே அவர்களை கட்டிலில் சந்தித்திருக்கிறான். இடைக்கிடையே புதிய இடங்களில் சென்று உல்லாசம் அனுபவிக்கும் ஆசை ஏற்படுவதுண்டு.

அதற்காகவே பல உல்லாச மாளிகைகள் இரகசியமாக இருந்தன. அதில் ஒன்றுக்கே சென்றிருந்தான் அமீன்.

அப்படியான சந்தர்ப்பங்களில் மிக நம்பிக்கையான மெய்காவலர்களை மட்டுமே தன்னுடன் அழைத்துச் செல்வான்.

அமீனின் லீலைகள் மெய்காவலர்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் அமீனின் இரகசியங்கள் சிலருக்கே தெரியும்.

அமீன் ஜனாதிபதி மாளிகையில் இல்லாதபோது, அவனுடன் எப்படித் தொடர்பு கொள்வது என்பது புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு மட்டுமே தெரியும்.

புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியையும் தொடர்பு கொள்ள முடியவில்லை. அமீன் ஒய்வெடுக்கச் சென்றது தெரிந்ததும், அவனும் தன் காதலியோடு எங்கோ போய்விட்டான்.

புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கும் நாடக நடிகை ஒருத்திக்கும் இடையே தொடர்பு இருந்தது.

அவளுடன்தான் கிளம்பிப் போயிருந்தான். ஒரு மணிநேரத்திற்குள் திரும்பிவிடலாம், அதற்குள் என்ன ஆட்சியா கவிழப்போகிறது? என்ற நினைப்பில் போய்விட்டான்.

அந்த நினைப்புத்தான் அவன் உயிருக்கே உலைவைக்கப்போகிறது என்பது அப்போது எங்கே தெரிந்தது.

அமீனுடன் தொடர்பு கொள்ள முடியாததால், மோதல்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தளபதியால் முடிவு செய்ய முடியவில்லை.

அமீன் தலைநகரில் இல்லை என்றதும் தளபதிக்கு ஒரு சந்தேகம்.

அமீன் தான் ஏதோ காரணத்திற்காக மோதலைத் தூண்டி விட்டிருக்கிறானோ? ஒளித்திருந்திருந்து வேடிக்கை பார்க்கிறானோ? என்றுதான் சந்தேகம்.

புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியுடனும் தொடர்பு கொள்ள முடியாத போது, அந்த சந்தேகம் வலுத்தது.

'ஏதோ பெரிய சதி நாடகம் ஒன்று அரங்கேறிக்கொண்டிருக்கிறது. நமக்கேன் வம்பு' என்று நினைத்த தளபதி தன் வீட்டுத் தொலைபேசியை செயல் இழக்கச் செய்து விட்டு தூங்கப் போய்விட்டார்.

அன்று இரவே பல இராணுவப் பிரிவுகளுக்குள் சூடானியர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடந்தன.

இராணுவப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஹுசைனும் அமீனை தொடர்பு கொள்ள முயன்று தோற்றுப்போனான்.

அவனை ஒழித்துக் கட்ட இராணுவப் புரிவொன்று இரவிரவாகத் தேடியலைந்து கொண்டிருந்தது.

வேட்டுச்சத்தங்கள் மக்களது தூக்கத்தைக் கலைத்தன. வேற் நாட்டுத் துருப்புக்கள் நாட்டைப் பிடித்து விட்டனவோ என்றுதான் முதலில் சந்தேகப்பட்டனர்.

அமீன் ஜனாதிபதி மாளிகையில் இல்லை என்று தெரிந்ததும், இராணுவப் பிரிவுகளது பொறுப்பதிகாரிகளும் தமது பிரிவுகளை தைரியமாக சூடானியர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டனர்.

தலைநகரிலுள்ள இராணுவப் பிரிவுகளில் மட்டுமே இந்த மோதல்கள் நிகழ்ந்தன. நாடெங்கும் அவை பரவியிருக்கும். ஆனால் அமீனுக்கு அதிகாலையில் தகவல் கிடைத்ததால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன.

அழகிகளுடன் சல்லாபத்தில் ஈடுபட்ட அமீன் அயர்ந்து தூங்கிப் போனான்.

அவனது இருபுறமும் அழகிகள் இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தனர். அதிகாலையில் அமீனுக்கு விழிப்பு வந்தது.

விரும்பத்தகாத காரியங்கள் ஏதோ நடப்பதுபோல, அவனது உள்மனதில் உறுத்தல் ஏற்பட்டது.

சடுதியாக எழுந்து, குறுக்கே கிடந்தவளை கடந்து தொலைபேசியை சுழற்றினான். ஜனாதிபதி மாளிகையில் இருந்தவர்கள் தகவல் கூறியதும், அமீன் கேட்ட முதல் கேள்வி; "அந்த வேசி மகன் எங்கே?". அமீன் குறிப்பிட்டது புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளரை.

ஒரு மணி நேரத்தில் திரும்பிவிடலாம் என்று நினைத்துச் சென்றவன், நடிகையின் கவனிப்பில் தன்னை மறந்து, தன்னையிழந்து, களைத்து தொய்ந்து அவள் மேலேயே தூங்கிப் போனான். அதனால் அமீனிடம் மாட்டிக் கொண்டான்.

"புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி எங்கிருந்தாலும் தேடிப்பிடித்து வைத்திருங்கள்!" என்று கூறிய அமீன், அடுத்து துரித கதியில் இராணுவப் பிரிவுகளது பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

அமீனின் பிரத்தியேக பாதுகாப்புப் பிரிவும் மோதல் நிகழ்ந்த பகுதிகளுக்கு உடன் அனுப்பி வைக்கப்பட்டது.

இரண்டு பிரிகேடியர்கள், இரண்டு கப்ரன்கள் மற்றும் சில சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர்.

அதிகாலை ஐந்து முப்பது மணியளவில் நடிகையின் வீட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த புலனாய்வுப் பரிவு பொறுப்பாளர் வழி மறிக்கப்பட்டு, ஜனாதிபதி மாளிகைக்குக் கொண்டுவரப்பட்டார்.

அப்போது அமீனும் அங்கு வந்து சேர்ந்து விட்டான். புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியைக் கண்டதும் அமீனுக்கு தலைகால் புரியாத கோபம் ஏறியது.

நாலு அடி வைத்து பொறுப்பதிகாரியை நெருங்கிய அமீன், ஓங்கி ஓர் அறை விட்டான்.

எல்லோர் முன்பாகவும் அமீன் தன்னை அறைந்ததும் பொறுப்பதிகாரிக்கு அவமானமாகிவிட்டது.

அவன் சட்டையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு தன் அறைக்குள் புகுந்த அமீன்; "எங்கே போயிருந்தாய்?" என்றான்.

பொறுப்பதிகாரி பதில் சொல்லாது எச்சில் விழுங்கினான். மறுகணமே அமீனின் முழங்கால் அவன் அடி வயிற்றில் இடியாக இறங்கியது.

"உன்னை நம்பி பொறுப்பை ஒப்படைத்ததுக்கு இதுதான் நீ காட்டிய நன்றியா? அற்பப் பதரே! நீயும் இந்த மோதல்களுக்குக் காரணமா? சொல்லடா!" என்று பிஸ்டலை உருவினான் அமீன்.

பொறுப்பதிகாரி பொறி கலங்கிப் போனான். தான் எங்கிருந்தேன், எவளோடு இருந்தேன் என்ற உண்மையைக் கக்கினான்.

அந்த நடிகையை மிக மட்டரகமான கெட்ட வார்த்தையால் விவரித்த அமீன், பொறுப்பதிகாரியை உதைத்துத் தள்ளினான்.

"இன்றோடு உன் பதவி காலியாகிறது. ஒழிந்து போ!" என்று கதவை நோக்கி கைகாட்டினான்.

அவனை அத்தோடு விடத்தான் அமீன் நினைத்திருந்தான். ஆனால் அமீனின் உள்மனது எச்சரித்தது.

'இவனை இப்படியே விட்டால் உன் இரகசியங்கள் அம்பலமாகும். உனக்கே ஆபத்தாகும்!'

அந்த எச்சரிக்கைக்கு உடனடியாக பணிந்தான் அமீன்.

வெளியே செல்வதற்கு கதவைத் திறக்க பொறுப்பதிகாரியின் கை உயர்ந்தபோது, அதைவிட வேகமாக அமீனின் கை உயர்ந்தது. 'டுமீல்'. 'டுமீல்'. 'டுமீல்'.

தொடராக மூன்று வெடி! சர்வ நிச்சயமான மரண வெடி! சுருண்டு கதவருகே விழுந்தான் பொறுப்பதிகாரி.

அவன் அருகே மடங்கி அமர்ந்து, குபுகுபுவென்று கொட்டிய இரத்தத்தை தன் ஆட்காட்டி விரலால் தொட்டு நாக்கில் வைத்து ருசித்தான்.

அதன் பின்னர் கதவைத் திறந்து பாதுகாவலர்களை அழைத்தான்.

"இவனைக் கொண்டுபோய் மருத்துவமனையின் சவக் கிடங்கில் போடுங்கள்".

அன்றிரவே உகண்டா வானொலி பின்வரும் செய்தியைப் புழுகியது:

"இராணுவ வீராகளுக்குள் பூசலைத் தூண்டிய புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரிக்கு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை" விதித்துள்ளது. சதிக்கு உதவிய இரண்டு பிரிகேடியர்கள், இரண்டு கப்ரன்கள் உட்பட மேலும் ஆறுபேருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

உகண்டா இராணுவத்திற்கு ஒழுக்கம் முக்கியம். இன, மத பூசல்களுக்கு இடமளிக்கப் படமாட்டாது என்று அதிபர் இடி அமீன் கூறியிருக்கிறார்."

அந்த அறிவிப்பு வெளியாகிக் கொண்டிருந்தபோது, புலனாய்வுப் பொறுப்பதிகாரி காதலியான நாடக நடிகை அமீனின் பிடியில் இருந்தாள்.

"அப்படி எதைக் காட்டி அவனை மயக்கினாய்? எனக்கும் காட்டு!" என்று இடிச்சிரிப்பை உதிர்த்தான் அமீன்.

பசி கொண்ட மிருகத்தின் முன்னால் பரிதவிக்கும் அப்பாவி ஆடுபோல அவள் தவித்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று தன் கைகளை நீட்டி அவளது மேற்சட்டையை இழுத்துக் கிழித்தான் அமீன்.

சட்டை கிழிந்ததால் அவள் கண்களுக்கு தெரிந்த பிரதேசங்கள் அவனுக்கு சதைப் பசியை தூண்டிவிட்டன.

"உன்னிடம் அவன் ஏன் மயங்கிக் கிடந்தான் என்று இப்போது தெரிகிறது!" என்றான் உற்றுப் பார்த்தபடி.

தனது படுக்கையறையில் இருந்த வானொலிப் பெட்டியின் சத்தத்தை முதலிலேயே அதிகரித்து வைத்திருந்தான் அமீன்.

புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி கொல்லப்பட்ட செய்தி பெரிதாக ஒலித்ததால், அந்த மிரட்சியான சூழலிலும் அவள் காதுக்குள் புகுந்தது.

அவள் கண்கள் அதிர்ச்சியால் விரிவதையும், ஏற்கனவே பயந்திருந்த அவள் முகம் மேலும் வெளிறிப் போவதையும், அவளது தேகம் தன் கரங்களுக்குள் நடுங்குவதையும் கொடூரமான இரசனையுடன் அவதானித்துக் கொண்டிருந்தான்.

அவள் அந்தச் செய்தியைக் கேட்க வேண்டும் என்பதற்காகவே சத்தத்தை பெரிதாக வைத்திருந்தான்.

அவளுக்கு மயக்கம் வந்தது. பூமி அவள் கால்களுக்கிடையே நழுவிக் கொண்டிருந்தது.

(இடி தொடரும்)



# ரசிகைகளின் நாயகன்

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்குள் மட்டுமன்றி, உலகக் கிரிக்கெட் வீரர்களிடையேயும் ரசிகைகள் அதிகமுள்ளவர் யார் தெரியுமா?

ஒட்டங்களைக் குவித்து உலக சாதனைகள் படைக்கும் டெண்டுல்கரா?



இல்லை! அவர்மீது மரியாதை இருக்கிறது. காதல் கிடையாது. கட்டியணைத்து 'உம்மா' கொடுக்கும் வெறி கிடையாது.

அப்படியானால் யார் மீது என்கிறீர்களா? ஜடேஜாதான் அந்தக் கதாநாயகன். இளம் பெண்களின் உள்ளத்தை துடுப்பாட்டத்தை காட்டியே கொள்ளையடித்த நாயகன்.

ஆண் பிள்ளைக்கான தோற்றமும், துடிப்பும் அவரிடமே இருக்கிறது என்று ரசிகைகள் கூறுகின்றனராம்.

ஜடேஜாவுக்காக ரசிகர் மன்றம் ஒன்று மும்பாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்பித்த வேகத்திலேயே சூடு பிடித்துவிட்டது.

ஒரே மாதத்தில் இரண்டாயிரத்தி ஐநூறு'பேர் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். இந்த மன்றத்தின் இயக்குநரும் ஒரு பெண்தான். அவரது பெயர் நியாதிஷா.

வருட சந்தா 400 ரூபாய். இதனை வைத்து ஜடேஜாவுக்கு நினைவுப் பரிசுகள் வாங்கிக் கொடுக்க உள்ளனராம். அத்தோடு வருடத்தில் ஆறு முறை ஜடேஜாவை சந்திக்க ஏற்பாடு செய்வார்களாம்.

"ஒரு அரச குடும்பத்து இளவரசர் என்ற போதிலும் அந்தப் பந்தா அவரிடம் கிடையாது" என்று கூறும் ஷா, "அவர் நன்றாகப் பழகுகிறார், நன்றாக விளையாடுகிறார்" என்றும் கூறுகிறார்.

# கையொப்பம்

விளையாட்டு வீராங்கனைகள் என்றால் ரசிகர்கள் ஜொள்ளு விடுவதும், விளையாட்டு வீரர்களிடம் ரசிகைகள் ஜொள்ளு விடுவதும் உலகப் பொது நியதி.

அமெரிக்காவில் கார்ப்பந்தய வீரர்களுக்கு ரசிகைகள் ஏராளம். அமெரிக்காவில் சமீபத்தில் ஒரு இளம் பெண் தன் அபிமான கார்ப்பந்தய வீரரை சந்தித்தார்.

கார்ப் பந்தயத்தில் அவர் வெற்றிபெற்ற சூட்டோடு சூடாக இச் சந்திப்பு நடந்தது.



அந்த வீரரின் கையொப்பத்தை தவ நெஞ்சிலேயே வாங்கிக்கொண்டார். இச் காட்சியை ஏராளமான ரசிகர்களும், ரசிகைகளும் ஏக்கத்தோடு கண்டு களித்தனர்.

# பதவியை உதறும் மண்டேலா

பதவியைக் காப்பாற்றவும், பதவிகளை கைப்பற்றவும் நம் நாட்டில் முன்னாள்



போராளிகள்கூட ஒற்றைக்காலில் நிற்கின்றனர்.

இவற்றைக் கண்டு எல்லோரும் இப்படித்தான் இருப்பார்களோ? என்று தப்புக் கணக்குப் போட்டுவிடக்கூடாது.

தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தனது பதவியில் இருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார். கட்சித் தலைமையில் இருந்தும் ஓய்வு பெற விரும்புகிறார்.

ஓய்வு பெற்ற பின்னர் தனது ஆட்சிக் கால அனுபவம் பற்றி புத்தகம் எழுதப் போகிறார்.

அதுமட்டுமா, மேலும் கூறுகிறார் கேளுங்கள்; "நான் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உண்மையான தொண்டன். எந்த நேரத்தில் கட்சித் தலைமை அழைத்தாலும் கட்சிப் பணியாற்ற தயாராக இருப்பேன்.

ஓய்வு பெற்ற பின்னர் சர்வதேச பிரச்சனைகளில் தலையிட்டு சமரசம் செய்து வைக்க முயற்சிப்பேன்" என்று கூறியிருக்கிறார்.

நெல்சன் மண்டேலா ஓய்வு பெற்றதும் அவரது இடத்திற்கு தாபோ பெகி என்பவர் நியமிக்கப்பட இருக்கிறார்.

இதேவேளை மண்டேலா சிறையில் இருந்தபோது தனது முன்னாள் மனைவி வின்னிக்கு எழுதிய காதல் கடிதங்கள் புத்தகமாக வெளியிடப்பட உள்ளன.

சிறை வாழ்க்கையை எப்படி பயனுள்ளதாக பன்படுத்தலாம் என்பது பற்றியும் கடிதங்களில் எழுதியுள்ளாராம்.

# நம்பிக்கை அம்மா!

அந்தப் பெண்மணி பிறக்கும் போதே இடுப்புக்கு கீழ்ப்பகுதிகள் செயற்படாமல் போய்விட்டன. அதனால் சத்திரசிகிச்சையில் கீழ்ப்பகுதியை எடுத்துவிட்டனர்.

அதன் பின்னர் அப்பெண்ணின் உயரமே இரண்டடிதான். அப்படியும் அந்தப் பெண்மணி தன்னம்பிக்கையோடு இருந்தார்.

அந்தப் பெண்ணை ஒரு இளைஞர் காதலித்து கல்யாணம் செய்து கொண்டார். அதுதான் பெரிய விஷயம்.

அதன் பின்னர் அப் பெண் கர்ப்பமானார். குழந்தை பிறந்தது.

குழந்தையும் தாயைப் போல ஆகிவிடுமோ என்று டாக்டர்கள் பயந்தனர். நல்ல வேளையாக அப்படி எதுவும் நடக்கவில்லை. குழந்தை படு ஆரோக்கியமாக



பிறந்துள்ளது. மிகவும் ஆச்சரியமான செய்தியாக இது அமெரிக்காவில் பேசப்பட்டது



# மகாராணிக்கு பணக் கஷ்டம்

பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணிக்கு பிரிட்டிஷ் அரசு தொண்ணூறு இலட்சம் பவுண் கொட்டியமுகிறது. நம்மூர் மதிப்பில் 102. 6 கோடி ரூபாய்கள்.

இந்தப் பணம் அரைவயிற்றுக் கஞ்சிக்கே போதாதே. அதனால் தனது சம்பளத்தில் மேலும் பத்து இலட்சம் பவுண் அதிகமாகத் தருமாறு கேட்டுள்ளாராம்!

தனது பணியாளர்கள் ஊதியம் அதிகமாகக் கேட்பதாக மூக்கால் அழுதுள்ளாராம் மகாராணி.

ஏற்கனவே மகாராணியின் குடும்பச் செலவுகள் பற்றி பிரிட்டிஷ் மக்கள் முணுமுணுக்கிறார்கள். இந்த இலட்சணத்தில் மேலும் கூட்டிக் கொடுக்க பிரிட்டிஷ் அரசு முன்வருமா என்பது தெரியவில்லை



படிப்பகம்




## டெண்டுல்கர் கடவுள்

↑ கிரிக்கெட் உலகின் அசத்தல் நட்சத்திரம் டெண்டுல்கர். இந்திய கிரிக்கெட் அணியின் ரசிகர்களுக்கு டெண்டுல்கர்மீது அபாரமான பக்தி.

இங்கு பாருங்கள், 'டெண்டுல்கர் எங்கள் கடவுள்' என்று எழுதப்பட்ட பிரமாண்டமான பதாகையுடன் ரசிகர் கூட்டம். இங்கிலாந்தில் உள்ள இந்திய ரசிகர்கள்தான் இவர்கள்.

டெண்டுல்கரின் தந்தை மரணமானதால் அவரது ரசிகர்களுக்கும் ஆழ்ந்த அதிர்ச்சி. தங்கள் கடவுளை இந்த நேரம் பார்த்து சோதித்த கடவுளை சபித்திருப்பார்கள். ■

## அஞ்சலி

↓ இந்த சிலுவைகளின் பின்னால் ஒரு பெரிய சோகக் கதை இருக்கிறது.

ருவாண்டா நாட்டில் இன மோதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் பலியாகினர்.

பலியான மக்களில் ஒரு பகுதியினரது உடல்கள் செயின்ட் மார்டின் நிலத்தில் பெரும் குழிதோண்டி புதைக்கப்பட்டன.

இவர்கள் பலியான ஆண்டு நினைவுகளின்போது பனையோலை குருத்தில் சிலுவை செய்து வைத்து அஞ்சலி செய்யப்படுகிறது.

ஒரு சிலுவைக்கு நூறுபேர் என்ற கணக்கில் பத்தாயிரம் குருத்தோலை சிலுவைகள் வைக்கப்பட்டன. அப்படியானால் இங்கு புதைக்கப்பட்ட மக்களின் தொகை புரிகிறது. நெஞ்சு அதிர்கிறது அல்லவா!



## தகவல் பெட்டி

## வித்தை மனிதர்

↓ சாதாரண கயிற்றை மூக்கில் நுழைத்தால்கூட தும்மித் தும்மியே தொய்ந்து போவோம். இந்த மனிதரைப் பாருங்கள், பா...பா... பாம்மை மூக்கின் வழியாக செலுத்தி வாய் வழியாக எடுத்துக் காண்பிக்கிறார்.

சிங்கப்பூர் பூங்காக்களில் இந்த வித்தையை செய்து காண்பித்து பிழைப்பு நடத்துகிறார் இந்த சீனாக்காரர்.

பாம்மை வைத்து இந்த வித்தை காட்டுவது மட்டுமன்றி, பல்புகள், ட்யூலைட்டுக்கள், போத்தல்கள் என்பவற்றை உடைத்து விழுங்குவது, கம்பியை காது மற்றும் மூக்கு வழியே நுழைப்பது என்று வேறு பல வித்தைகளையும் கைவசம் வைத்திருக்கிறார்.






## ராஜமரியாதை


↑ உலகக் கோப்பை போட்டி நடக்கும் அரங்குகளில் செய்தியாளர்களுக்கு இம்முறை ராஜமரியாதை.

இறுதிப் போட்டி நடைபெறவுள்ள இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் அதி நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எவ்வித இடையூறுமின்றி செய்தியாளர்கள் அமர்ந்திருக்கக் கூடியதாக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கலக்கலான அரங்கையே இங்கு காண்கிறீர்கள்.

விண்வெளி ஓடம் போல இக் கட்டடத்தை வடிவமைத்துள்ளனர். விண்வெளி ஓடம் என்றுதான் பெயரும் சூட்டியுள்ளனர். கடந்த ஏப்ரல் 27ம் திகதி இது திறந்து வைக்கப்பட்டது. இதற்கு எவ்வளவு செலவானது தெரியுமா? மூர்ச்சையாகி விடாதீர்கள். 58 இலட்சம் பவுண். நம் மதிப்பில் 66 கோடியே 40 இலட்சம் ரூபாய். பணத்தை தண்ணீராய் இறைப்பது என்பது இதுதான். இதில் 250 பேர் அமர்த்திருக்கலாம். இங்கிருந்து நேரடி வர்ணனை செய்யலாம். தொலைக்காட்சி கமராக்களை இயக்கலாம். இப்படி பல வசதிகள் உள்ளன.

செய்தியாளர்களுக்கு பந்தா காட்டியுள்ளது இங்கிலாந்து. அதுதான் இத்தனை செலவில் அசத்தல்! ■

## பூதம்?



↑ பெரிய மிருகம் ஒன்றின் வாயில் சிறுவன் மாட்டி விட்டானா? அல்லது சினிமாக் காட்சியா? இரண்டுமில்லை.

ஜப்பான் டோக்கியோவில் உள்ள பூங்கா ஒன்றில் பிரமாண்டமான டைனோசர் சிலை இருக்கிறது. அதன் வாய்க்குள் புகுந்து விளையாடுகிறான் ஒரு சிறுவன். பேரினவாதப் பூதத்தையும் இப்படி கற்பனை செய்யலாம்.

## உள்ளரங்க கிரிக்கெட்



↗ கிரிக்கெட் ஆட்டம் பொதுவாக திறந்த வெளி மைதானங்களில் தான் இடம் பெற்று வந்தன. பனிக்காலத்தில் திறந்த வெளி மைதானத்தில் கிரிக்கெட் ஆடுவது சிரமம். ஆகவே இப்போது உள்ளக மைதானங்களில் பனிக்கால கிரிக்கெட் ஆட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் பனிக்கால கிரிக்கெட் ஆட்டங்கள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. இரண்டாமிரமாம் ஆண்டு முடிவுறும் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில்-பெப்ரவரியில் முற்றிலும் பெண்களுக்கான உலகக் கிண்ணப் போட்டிகள் வியன்னாவில் நடைபெறுவதற்கான ஆயத்தங்களும் தொடங்கி விட்டன.

வியன்னா பல்கலைக் கழக விளையாட்டு மண்டபத்தில் உள்ளக கிரிக்கெட் விளையாட்டுக்கான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதை இப்படம் காட்டுகிறது.

இதில் ஏற்கனவே சில போட்டிகளும் நடைபெற்றுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் சபை மற்றும் ஐரோப்பிய கிரிக்கெட் அபிவிருத்திக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 2000ம் ஆண்டு பெப்ரவரி 10ம் திகதி சர்வதேச அணிகள் பல கலந்து கொள்ளும் போட்டிகள் இந்த உள்ளக அரங்கில் நடைபெற இருக்கின்றன. ■

www.padippakam.com

சினிமா விமர்சனம்

# வெளுத்து வாங்கும் அஜித்

படம்: வாலி. நடிப்பு: அஜித்குமார், சிம்ரான், ஜோதிகா, மணிவண்ணன், விவேக் மற்றும் பலர்.

இயக்கம்: சூர்யா. இசை: தேவா. ஒளிப்பதிவு: ஜீவா.

அஜித்குமார் முதன் முதலாக இரட்டை வேடம் ஏற்றுள்ள படம். சிம்ரான் சிறப்பாக நடித்துள்ள படம். அதற்காக கவர்ச்சி இல்லை என்று எண்ண வேண்டாம். தாராளமாக ஆடைகளை நழுவவிட்டு திணறடிக்கிறார்.

- காது கேளாத, வாய் பேசாத பணக்கார அண்ணன் அஜித்குமார், தன் தம்பி அஜித்தின் மனைவியான சிம்ரான்மீது ஆசைப்படுகிறார். கதைச் சுருக்கம் இதுதான்.

இடைவேளைக்கு சற்று முன்புதான் படம் சூடு பிடிக்கிறது. அதுவரை சிம்ரானும், நக்மாவின் தங்கை ஜோதிகாவும் கண்களுக்கு குளிர்ச்சி தருகிறார்கள்.

சிம்ரானை ஏமாற்றுவதற்காக தான் முன்பே ஒரு பெண்ணை காதலித்ததாக பொய் சொல்கிறார் அஜித். அது பொய்க் கதை என்று நமக்கு முன்கூட்டியே தெரிந்தபோதும், அதனை அனுமார் வாலாக நீட்டி பொறுமையைச் சோதிக்கிறார்கள். அதனால்தான் முன்பாதியில் படம் தொய்கிறது.

இடைவேளைக்குப் பின்னர் அமைதியாக, இயல்பாக முகபாவத்தால் மட்டும் வில்லத்தனம் செய்து கலக்குகிறார் அஜித். அப்பாவித் தம்பியாகவும் நடிப்பில் முத்திரை பதித்திருக்கிறார். அஜித்துக்கு இது அருமையான வாய்ப்பு. மனிதர் தவற விடாமல் தன் திறமையைக் காட்டியுள்ளார்.

சிம்ரான்-அஜித் கிளு கிளுப்பு. ஒளிப்பதிவு குளு குளுப்பு. இசை: படபடப்பு. மொத்தத்தில் பார்க்கக்கூடிய படம்.

# ஏமாற்றம் தரும் படம்

'சிம்மராசி', 'சின்னத்துரை' ஆகிய படங்கள் சரத்குமாருக்கு படு தோல்விப் படங்கள்.

'சின்னத்துரை' படத்தில் நடிக்க சரத் ஏன் சம்மதித்தார்? என்றுதான் அவரது ரசிகர்களே தலையில் அடித்துக் கொண்டனர்.

அந்தப் பட்டியலில் தற்போது வெளியாகியுள்ள படம் 'ராஜஸ்தான்'.

ஆர்.கே. செல்வமணி பிரமாண்டமாக, பணத்தை விரயமாக்கி, படம் பார்ப்போரின் நேரத்தையும் விரயமாக்கியுள்ளார்.

சரத்குமாருக்கும், விஜயசாந்திக்கும் சம முக்கியத்துவம் கொடுக்க நினைத்து இருவரையுமே திருப்தியாக செய்ய விடவில்லை.

பின்பாதியில் பிரகாஷ்ராஜை களத்தில் இறக்கி, சரத்குமாரை பல காட்சிகளில் கண்ணிலேயே காட்டவில்லை.

சரத், விஜயசாந்தி ரசிகர்களுக்கும் ஏமாற்றம் தரும் படம். அதனால் தோல்வி நிச்சயம்.

# காதோடு சொல்லுகிறோம்

நட்சத்திர குடும்ப இளம் நடிகை தொழிலதிபர் ஒருவருடன் நெருங்கிப் பழகுகிறாராம். மஞ்சளான தாய்க்குல நடிகைதான் அந்த தொழிலதிபரை மகளுக்கு அறிமுகம் செய்து வைத்தாராம்.

இந்தி நடிகரான ஷாருக்கான் சென்னையில் நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கி இருந்தாராம். அவரைச் சந்திக்க பல நடிகைகள் போட்டி போட்டனராம். மீன் நடிகை, 'சிம்ம' நடிகை, சீமைப்பசு நடிகை ஆகியோர்தான் போட்டி போட்டு சந்தித்தனராம்.

'மீன்' நடிகைக்கு இப்போது வாய்ப்புக்கள் இல்லை. தமிழில் முன்னர் முப்பது லகரம் வாங்கினார். தற்போதுள்ள போட்டியால் ஊதியத்தை குறைத்துள்ளார். பதினைந்து லகரம் வாங்குகிறாராம்.

# ஏமாற்றிய பாபு

பாபு ஆண்டனி தமிழில் பல படங்களில் வில்லனாக நடித்து பிரபலமானவர்.

'பூவிழி வாசலிலே' படத்தில் ரகுவரனின் கையாளாகத் தோன்றி கச்சிதமாக நடித்திருந்தார். 'சூரியன்' படத்தில் பிரதான வில்லனாக நடித்திருந்தார்.

நடிகை சர்மிளாவை காதலித்து தன் ஆசைக்கு உபயோகப்படுத்திவிட்டு கைகழுவினார். பத்திரிகைகளுக்கு தன் சோகக் கதையைக் கூறி நியாயம் கேட்டார் சர்மிளா. பாபு ஆண்டனி தன் வில்லத்தனத்தை சர்மிளாவிடமே காட்ட, அவர் பயந்து போனார்.

இதன் பின்னர் மலையாளத்தில் வேறு சில நடிகைகளுடன் சுற்றிக் கொண்டிருக்கிறார் பாபு.

விரைவில் திரைக்கு வரவுள்ள 'புலனாய்வுத் துறை' படத்தில் பாபு ஆண்டனி பிரதான வேடத்திலும் நடித்துள்ளார்.

# திடீர் முதல்வன்

சங்கரின் 'முதல்வன்' படம் வேகமாக வளர்ந்து வருகிறது. பிரபலங்களை பேட்டிகாணும் பிரபல செய்தியாளராக நடிக்கிறார் அர்ஜுன்.

மாநில முதல்வரை அர்ஜுன் பேட்டி எடுக்கிறார். அவரது கேள்வி ஒன்றால் வெகுண்ட முதல்வர், "கேள்வி கேட்பது சுலபம், முதலமைச்சராக இந்த நாற்காலியில் இருப்பதுதான் கஷ்டம்" என்கிறார்.

அந்த சவாலை ஏற்று திடீர் முதல்வராகிறார் அர்ஜுன். இதுதான் படத்தின் கதைச்சுருக்கம்.



சஞ்சய் தத்-ஊர்மிளா
படம்: தவுட் (இந்தி)



விஜயசாந்தி
படம்: சூர்யோதயம்

திரையுலக மறுபக்கம் 105

## மும்பாயின் பரபரப்பான செய்தி

# நடிகர் கொடுத்த தங்க நெக்லஸ்

தமிழ்நாட்டிலிருந்து மயன்

மும்பாய் பத்திரிகைகளில் சமீபத்தில் பரபரப்பாக வெளியான செய்தி இது.

மும்பாய் பட உலகின் இயக்குநர்களில் ஒருவர் டி.எல்.வி. பிரசாத். எந்த நடிகையானாலும் இவரை கட்டிலில் சந்தித்தால்தான் நடிக்க வாய்ப்புக் கொடுப்பார்.

தமிழில் வெளியான 'காதலி' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக கவர்ச்சி மழை பொழிந்தவர் நடிகை திவ்யா.

மும்பாயில் வாய்ப்புத் தேடிய திவ்யாவுக்கு, அங்கு தயாரிப்பாளர் ஒருவரது நட்புக் கிடைத்தது. திவ்யாவின் அதிரடியான கலைச்சேவையால் தயாரிப்பாளருக்கு திருப்தி.

தனது படம் ஒன்றில் மிதுன் சக்கரவர்த்தி, ஜாக்கிஷெராப் ஆகியோருடன் நடிக்க வைத்தார்.

இந்தப் படத்தின் இயக்குநர் டி.எல்.வி. பிரசாத். திவ்யாவைக் கண்டதும் அவர் சூடாகிவிட்டார்.

'என்னைத் திருப்தி செய்தால்தான் இந்தப்படத்தில் நடிக்கலாம். நான் கூறுகிற இடத்துக்கு வரச்சொல்' என்று தன் உதவியாளரை நடிகையிடம் அனுப்பினார்.

தயாரிப்பாளர் தன் கைக்குள் இருப்பதால் நடிகை இயக்குநரை மதிக்கவில்லை. சீறி எழுந்தார். "நான் நடிக்கத்தான் வந்திருக்கிறேன். படுக்கை விரிக்க வரவில்லை." என்று உதவியாளரிடம் சீறிவிழுந்தார்.

இயக்குநருக்கு கடும் கோபம். நடிகையை படத்தில் இருந்து தூக்கப் போவதாக மிரட்டினார்.

அரண்டுபோன நடிகை இதுபற்றி தயாரிப்பாளரிடம் முறையிட்டார். அந்த இயக்குநரை பகைத்துக்கொள்ள தயாரிப்பாளர் தயாராக இருக்கவில்லை. நடிகைக்கு இது மேலும் அதிர்ச்சியாக இருந்தது.

மிதுன் சக்கரவர்த்தியிடம் சென்று அழுது முறையிட்டார். தன்னால் இந்த விடயத்தில் எதுவும் செய்ய முடியாது என்று அவரும் கூறிவிட்டார்.

இப்போது சமரச முயற்சிகள் நடக்கின்றன. இயக்குநருக்கு இசைவு காட்ட தயாராகிவிட்டார் நடிகை.

-★-

## வந்தார் மனைவி

சமீபகாலத்தில் தமிழ்ப்பட உலகில் கொடிகட்டிப் பறக்கும் நடிகை அவர். நான்கெழுத்து நடிகை.

சினிமாவில் மிக கண்ணியமாக தோன்றும் இந்த நடிகை பற்றி ஏகப்பட்ட செய்திகள் வெளியாகியுள்ளன.

இவருடன் பல படங்களில் இணைந்து நடித்தவர் அந்த மூன்றெழுத்து நடிகர்.

அவருக்கு நடிகைமீது காதல். நடிகையும் அவருக்கு முழு ஒத்துழைப்பும் கொடுத்து வந்தார்.

நடிகையும், அவரும் பிரபல விடுதி ஒன்றில் தங்கியிருந்தபோது, நடிகரின் மனைவிக்கு எப்படியோ தெரிய வந்திருக்கிறது.

குறிப்பிட்ட விடுதிக்கு விரைந்தார் மனைவி. விடுதியின் அறைக் கதவை தட்டியதும் நடிகர்தான் கதவைத் திறந்தார்.

உள்ளே கட்டிலில் நடிகை இருந்த நிலை உண்மையை புட்டுவைத்தது. நடிகர் திகைத்து நிற்க, மனைவி புயலென உள்ளே புகுந்தார்.

நடிகை அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு முன்னரே, அவரைப் புரட்டி எடுத்துவிட்டார் மனைவி. விடுதி ஊழியர்கள் வேடிக்கை பார்த்தனர்.

இதன்பின்னர் தனக்கு இன்னொரு காதலர் இருப்பதாகக் கூறி நடிகருடன், உறவைக் கத்தரித்துக் கொண்டார் நான்கெழுத்து நடிகை.

அப்படியிருந்தும் நடிகருக்கு காதல் மயக்கம் போகவில்லை. மீண்டும் நான்கெழுத்து நடிகையுடன் ஜோடியாக நடிக்கும் சூழலை ஏற்படுத்திக் கொண்டார்.

அந்தப் படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பில் நடிகைக்கு கேரள நகைக் கடை ஒன்றில் இருந்து நெக்லஸ் வாங்கிப் பரிசளித்தாராம். அதனையும் மறுக்காது பெற்றுக் கொண்டார் நடிகை.

-★-

## புதுமுகத்துக்கு வலை

தமிழ்நாட்டின் பிரபல கராட்டி வீரரின் சகோதரர் ஒருவர் படத்தை தயாரித்து நடித்து வருகிறார்.

இப்படத்தில் அம்சமான அந்த 'வி' நடிகையும் நடிக்கிறார். கவர்ச்சி நடிகையான அவர் ஏற்கனவே பெண் பொலிஸ் அதிகாரியின் மகனை காதலித்தவர். அது பெரும் சர்ச்சையாகி முடிந்தது.

இப்போது கராட்டி வீரரின் தம்பி 'வி' நடிகையின் விசித்ரங்களில் மயங்கிக் கிடக்கிறாராம்.

படத்தின் நாயகி கண்டிப்பான நடிகை என்பதால், கதாநாயகனின் பார்வை கவர்ச்சி நடிகைமீது சென்றிருக்கிறது.



சரத்குமார்-ரோஜா
படம்: சின்னத்துரை

# மறுபடி அப்பாஸ்

'காதல் தேசம்' படத்தின் பின்னர் ரசிகைகளின் இதயங்களை மொத்தக் குத்தகைக்கு எடுத்தவர் அப்பாஸ். பின்னர் அவரது படங்கள் பப்படமானதால் குத்தகைகளும் கைவிட்டுப் போயின.

தற்போது மறுபடி அவர் காட்டில் மழை. தமிழ், தெலுங்கு, மலையாளம் உட்பட மொத்தம் ஒன்பது படங்கள் கைவசம் உள்ளன.

இரண்டாவது கதாநாயகனாக துணிந்து நடிக்கிறார். தனிக்கதாநாயகனாக நடிப்பேன் என்று பிடிவாதம் பிடிப்பதில்லை.

# தாடி மணி

மணிவண்ணன் என்றாலே தாடிதான் நினைவுக்கு வரும். சத்யராஜ், அப்பாஸ் நடிக்க மணிவண்ணன் இயக்கும் ஆறுவது சினம்' படத்தில் மணிவண்ணன் தாடி இல்லாமல் நடிக்கிறார். தாடிக்கு பதிலாக பெரிய மீசை வைத்து நடிக்கிறார்.

இப்படத்தில் நடிக்க மீனா முயற்சி செய்தாராம். ஆனால் புதுமுகம் விந்தியாவைத்தான் நடிக்க வைத்துள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

# தந்திர நடிகை

ஆர்.விஜயாவின் சகோதரி மகளான கே.ஆர்.வத்சலா வந்துள்ளார் என்பது பழைய செய்தி. எப்படி வாய்ப்புப் பிடிக்க துடிக்கிறார் என்பது புதிய செய்தி. தன்னை ஒப்பந்தம் செய்ய வரும் தயாரிப்பாளரிடம் 'என்ன சாப்பிடுகிறீர்கள்?' என்று கேட்கிறாராம். சகல விதமான மது வகைகளும் தயாராக இருக்குமாம். விரும்பியதை அருந்திவிட்டு, விருந்த பின்னால் செல்லலாம். இந்த இன்பச் சலுகையால் வாய்ப்புகள் குவியும் என்று நினைக்கிறார் வத்சலா.

# தெலுங்கில் மிரட்டலப்பா

'படையப்பா' தெலுங்கில் 'நரசிம்மா' என்ற பெயரில் வெளியானது. அங்கும் ரஜினியின் முன்னைய பட வசூல்களை முறியடித்துள்ளது.

தெலுங்கில் படையப்பாவை ஏ.எம்.ரத்னம் வெளியிட்டுள்ளார். 1.75 கோடிக்கு வாங்கியிருந்தார். இதுவரை தெலுங்கில் படையப்பா வசூல் 40 கோடி. கணையான இலாபம்.

இந்த வசூலைக் கண்டு தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியே மிரண்டு போயிருக்கிறாராம்.

ரஜினியே தெலுங்கில் இந்த வரவேற்பை எதிர் பார்க்கவில்லையாம்.

# அதே பெயர்

படத்தின் பெயர்களைத்தான் அடிக்கடி மாற்றுவார்கள். பாரதிராஜா, தன் மகனின் பெயரையே அடிக்கடி மாற்றுகிறார்.

'தாஜ்மஹால்' படத்தில் தன் மகனை மனோஜ் என்ற பெயரில் அறிமுகம் செய்தார். பின்னர் 'மணிபாரதி' என்று மாற்றினார்.

படம் தமிழ் தவிர இந்தி, தெலுங்கு போன்ற மொழிகளிலும் வெளியாக உள்ளது. அதனால் மகன் பெயர் பொதுவான பெயராக இருப்பது நல்லது என்று நினைக்கிறாராம். எனவே மறுபடி மனோஜ் என்ற பெயரிலேயே அறிமுகப் படுத்த திட்டமாம்.

# ரம்பாவை நாடும் சுந்தர் விட்டுப் பிடிக்கும் குஷ்பு

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தில் கார்த்திக் ஜோடியாக ரம்பா நடித்திருந்தார். வசூலில் சக்கைபோடு போட்டது. அதன் பின்னரே கார்த்திக் மார்க்கெட்டும் கிடுகிடுவென உயர்ந்தது.

ஆனாலும் கார்த்திக், ரம்பா ஜோடி அப்படத்தின் பின்னர் மறுபடி சேரவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இப்போதுதான் சேர்ந்துள்ளனர்.

'உனக்காக எல்லாம் உனக்காக' என்ற படத்தின் மூலமே இந்த ஜோடி மீண்டும் சேருகிறது. 'உள்ளத்தை அள்ளித்தா' இயக்குநர் சுந்தர்.சி தான் இப்படத்தையும் இயக்குகிறார்.

ரம்பாவுடன் ராசியாக இருந்து, இடையிலே தகராறு ஏற்பட்டு, மறுபடி ராசியாகியவர் சுந்தர் சி. இப்போது தன் உள்ளம் கவர் ரம்பாவுக்கு வாய்ப்பளித்துள்ளார். குஷ்பு முதலில் தடுத்துப் பார்த்தார். இப்போது தடையை தளர்த்தி விட்டார். சுந்தருடன் உறவு முறிவதைவிட, விட்டுப் பிடிக்கலாம் என்று நினைக்கிறார் குஷ்பு.

'உனக்காக எல்லாம் உனக்காக' படத்திற்கு இசை, யுவன் சங்கர் ராஜா. கவுண்டமணி, விவேக், அஞ்சு, ஜெய்கணேஷ், சச்சு உட்பட பலர் நடிக்கின்றனர்.

# சாதனையப்பா

ரஜினியின் 'படையப்பா' பாட்ஷாவின் சாதனையை உடைத்துவிட்டது. சென்னையில் 'பாட்ஷா' 175 நாட்கள் ஓடிக் குவித்த வசூலை, 'படையப்பா' நான்கு வாரத்தில் எடுத்துவிட்டதாம். இது தமிழ்ப்பட உலகின் புதிய சாதனை.

'ரஜினியின் முன்னைய சாதனைகளை உடையப்பா என்று கூறுமளவுக்கு இருக்கிறது படையப்பா' என்று கலைஞர் கருணாநிதி கூறியதை மெய்ப்பித்துவிட்டார் படையப்பா.

# பறந்தார் விஜய்

விஜய் குடும்பத்தினரின் சொந்தப் படம் 'நெஞ்சினிலே'. அந்தப் படத்தின் படப்பிடிப்பு மும்பாயில் நடைபெற்றது. அதற்காக சென்றிருந்தார் விஜய்.

படப்பிடிப்புக்கள் அங்கு முடிந்ததும் விஜய் மாயமாய் மறைந்து போனார். தன் காதலியிடம் பறந்து போய் விட்டார் என்ற விஷயம் பின்னர்தான் தெரிந்தது.

அடிக்கடி விஜய் இலண்டன் செல்வதை பெற்றோர் விரும்பவில்லை. தொழிலில் கவனம் குறைந்துவிடும் என்று நினைக்கிறார்கள்.

அதனால்தான் சொல்லாமலே இலண்டன் பறந்தார் விஜய். விரைவில் யாவரும் அறிய திருமண விழா நடத்தவும் ஆர்வமாக உள்ளாராம். சங்கீதாவைக் கண்டுவிட்டு ஒரு வாரத்தில் நாடு திரும்பும் திட்டத்தோடு போயிருக்கிறாராம்.

## முகப்பில்

ரம்யா கிருஷ்ணன்

தேவயாணி

# நட்பு

சஞ்சய்தத்துடன் பலமாகக் கிசுகிசுக்கப்படுகிறார் ஊர்மிளா.

இயக்குநர் ராம் கோபால் வர்மாவுடன் ஆரம்பித்த நட்பு ஜாக்கி ஷெராப்புடன் தொடர்ந்தது. தற்போது சஞ்சய்தத்துடன் தொடர்கிறது.

சினிமாவில் மட்டுமல்ல, நிஜத்திலும் மிகத் தாராளமானவர் ஊர்மிளா. சஞ்சய்தத்தும் சளைத்தவரல்ல. மாதிரி டிக்ஷித் முதற் கொண்டு பலருடன் 'நட்பு' கொண்டவர்.



பாபு அன்டனி-அஞ்சும் சேத்தி
படம்: புலனாய்வுத்துறை




விஜயகாந்த்
படம்: வானத்தைப் போல

# 'நிரந்தர வில்லியாக மாற்றுவோம்' ரம்யாவுக்கு எச்சரிக்கை

**படையப்பாவில் பயங்கரவில்லி** ரம்யா கிருஷ்ணன், நீலாம்பரி என்ற அந்தப் பாத்திரம் ஜெயலிதாவை குறிப்பிடுவதாகப் பேசப்படுவதால், ஜெயலலிதாவுக்கும் வில்லியாகிவிட்டார் ரம்யா.

ரஜினி ரசிகர்கள் தன்னை சபிப்பார்களே என்று பயந்து கொண்டிருந்த ரம்யாவுக்கு, இப்போது எதிர்பாராத பிரச்சனை.

ஜெயலிதா ஆதரவாளர்களிடம் இருந்து கொலை மிரட்டல்கள். 'எங்க அம்மாவையா எதிர்த்து நிற்கிறாய்? உன்னை ஒழிக்காமல் விடமாட்டோம்' என்று கெட்ட வார்த்தைகளோடு மிரட்டல் கடிதங்கள்.

இதற்கெல்லாம் உச்சக்கட்டமாக சமீபத்தில் ஓர் நாள் கதிகலங்க வைக்கும் மிரட்டல் விடுக்கப்பட்டதாம்.

நள்ளிரவு நேரத்தில் ரம்யா வீட்டு தொலைபேசி மணி ஒலித்தது.

அ.தி.மு.க. எம்.பி ஒருவரது பெயரைக் கூறி தன்னை அறிமுகம் செய்து கொண்ட ஒருவர், ரம்யாவை தான் தங்கியுள்ள விடுதிக்கு வருமாறு அழைத்தாராம். அரசியல்வாதி என்பதால் ரம்யா பவ்வியமாக மறுத்திருக்கிறார்.

பிரபல நடிகர் ஒருவரது பெயரைக் கூறிய அரசியல்வாதி, அவரையும், ரம்யாவையும் இணைத்து தரக்குறைவாக பேசினாராம்.

அதன் பின்னர் மிரட்டலில் இறங்கினாராம். 'அழகான முகம் இருந்தால் தானே கதாநாயகியாக நடிப்பாய். உன் முகத்தில் ஆசிட் ஊற்றினால் வில்லியாகத்தான் நடிக்க வேண்டும். நாங்கள் நினைத்தால், எங்கள் தலைவி நினைத்தால் உன்னை நடுத்தெருவுக்கு கொண்டு வந்து விடுவோம்' என்றும், தாறுமாறாகவும் திட்டித் தீர்த்தாராம்.

இந்த மிரட்டலால் மிகவும் ஆடிப்போயிருக்கிறார் ரம்யா. அதனையடுத்து தமிழக வார சஞ்சிகை ஒன்றுக்கு ரம்யா பேட்டியளித்தார்.

ஜெயலலிதாவின் துணிச்சலை பாராட்டியுள்ளதோடு, 'படையப்பாவில்' தனது பாத்திரம் ஜெயலலிதாவை மனதில் வைத்து உருவாக்கப்பட்டதல்ல' என்றும் கூறியிருக்கிறார்.

# அத்தை மகன்

'அத்தை மகன்' படத்தில் கார்த்திக் ஜோடியாக மறுபடி நடித்து வருகிறார் ரம்யா கிருஷ்ணன். சுந்தர். சி. இயக்கும் இப் படம் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்பட்டுள்ளது.

ரம்யா கிருஷ்ணன் பணக்கார வீட்டுப் பெண். அந்த உண்மையைக்கூறாது வீட்டு உதவியாளர் போல நடித்து கார்த்திக்கை காதலிக்கிறாராம்.

'படையப்பா'வின் பின்னர் ரம்யா நடித்து வெளியாகப்போகும் படம் இது.

# மினி சினி

னோஜ்குமார் இயக்கத்தில் பிரபு-ரகாஷ்ராஜ் நடிக்கும் 'வசந்தகாலம்' டத்தில் பிரபுவுக்கு 'சங்கமம்' விந்தியாம், பிரகாஷ்ராஜிற்கு நடிகை சுமித்ரான் மகள் உமாவும் ஜோடிகளாக டிக்கின்றனர்.

பாவாணன் தயாரிப்பில் சத்யராஜ் தாநாயகனாக நடிக்கும் 'அடிமைகள்' டத்தின் பெயர் இப்போது 'கைதிகள்' ன்று மாற்றப்பட்டுள்ளது.

ஜயகாந்தை வைத்து 'வானத்தைப் பால' படத்தை இயக்கும் விக்ரமன், டுத்த வெங்கடேஷ் கதாநாயகனாக டிக்கும் தெலுங்குப்படம் ஒன்றை யக்கவுள்ளார்.

ப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்க முரளி தாநாயகனாக நடிக்கும் 'காமராசு' டத்தில் கதாநாயகி லைலா பூ கட்டிற்கும் பெண்ணாக நடிக்கிறார்.

மிழில் வெற்றிகரமாக ஓடிய 'சொல்லாலே' படம் தற்போது 'பியார் திவானா காத்தா ஹை' என்ற பெயரில் இந்தியில் யாராகி வருகிறது. இதில் கோவிந்தா தாநாயகனாக நடிக்கிறார்.

ன்னஸ் சாதனைக்காகத் தயாராகும் யம் வரம்' படத்தில் அர்ஜுன் பொலிஸ் திகாரியாக நடிக்கிறார். இந்த வேடத்தில் தலில் நடிக்க இருந்தவர் விஜயகாந்த்.

- தெலுங்கில் 'சாமாக்கா-சாரக்கா' என்ற பெயரில் அடிதடிப்பட மொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில் சாராக்காவாக ரம்யா கிருஷ்ணனும், சாமாக்காவாக ரோஜாவும் நடிக்கின்றனர்.
- சக்தி ரீ.வி.யில் இடம்பெறும் 'சக்தி' நாடகத்தின் ஆரம்பத்தில் ஒலிக்கும் 'பூவும் பெண்ணும் ஒன்றா...' பாடலை இயற்றிய மூர்த்தி-ரமேஷ் இரட்டையர்கள் 'ஆசையில் ஓர் கடிதம்' படத்திற்கு வசனம் எழுதுகிறார்கள்.
- சிவசக்தி பாண்டியன் தயாரிக்க முரளி நாயகனாக நடிக்கும் 'கனவே கலையாதே' படத்தில் சிம்ரான் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.
- 'கிங்', 'உண்மை' போன்ற வெற்றிப் படங்களை இயக்கிய மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷ், அண்மையில் சுரேஷ் கோபியை வைத்து இயக்கிய 'எஃப்.ஐ.ஆர்.' எதிர்பார்த்தளவு ஓடவில்லை.
- 'வாலி' வெற்றிகரமாக ஓடுவதால் அதன் இயக்குநர் சூர்யாவை வைத்து புதிய படமொன்றைத் தயாரிக்கவுள்ளார், 'இந்தியன்' படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்னம். இதில் அஜித்குமார்-சிம்ரான் ஜோடியாக நடிக்கவுள்ளார்கள்.



ப்ரீதா விஜயகுமார்
படம்: தாலாட்ட நான் பிறந்தேன்

# அறுவடைகள்?!

நீங்கள்
அமைதி காக்க(?)
வந்தவர்கள்!
▫▫
அசங்கியங்களை
அரங்கேற்றிவிட்டு
திரும்பிப்போன
திருட்டுப் பூனைகள்!
▫▫
வக்கிரங்களை
உக்கிரமாக
அமுல்படுத்திய
அரக்கர் குழாம்!
▫▫
அப்பாவிகளையும்
பால் மணம் மாறா
பச்சிளம் பிள்ளைகளையும்
பச்சை பச்சையாக
கொன்று குவித்த
குரூர சேனைகள்!
▫▫
உலகின்
மிகப் பெரிய
ஜனநாயக நாட்டில்
பிறந்து வந்து
பிணநாயாக
(அ) தர்மத்தை
அனுஷ்டிக்கும்
வேட்டை ஞமலிகள்!
▫▫
எம்மவர்களை
எண்ணிக்கையின்றி
சாகடித்து
சாதனை படைத்த (?!)
சாப ராஜ்யத்து
சக்கரவர்த்திகள்!
▫▫
டேய்!
எப்படியடா
ஒரு குழிக்குள்
இத்தனை பேர்களை
புதைத்தீர்கள்?
▫▫
மனிதர்களை
விதைத்தீர்கள்;
இன்று
எலும்புக்கூடுகளாக
எங்கள்
பார்வைகளுக்கு
உங்கள்
விளைச்சலின்
அறுவடைகள்!
▫▫

மாத்தளை கமால்.

# தேன்கிண்ணம்

# காத்திருப்பு!


சுவாசிக்கச்...
சொல்லி தந்தவனுக்கு...!
நிரம்பி வழியும்
உன்
நினைவுகளோடு...!
ஒவ்வொரு விடியலிலும்
உனக்காக...
பிறக்கிறேன்...!
**
நீ விட்டுச் சென்ற
ஞாபகத் தழும்புகளை
தழுவியபடி...!
நீ.... இல்லாமல்
போயிருந்தால்
எப்போதோ இறந்து...
போயிருப்பேன்...!
**
காணாமல் போனதால்
தான்– இன்னும்.
நான்
காத்துக் கிடக்கிறேன்..!
**

இரமேஸ்குமாரி- நானுஓயா.

# காதலில் நீந்திட சமுத்திரம் கட்டுவோம்?

இளமை வெளிதனில்
உள்ளுக்குள்ளே–மௌனத்தின்
இருட்டு மோசடி!
**
இந்தச் சிறைப் பரப்பினில்
ஊடுருவிப் பாயும்
வெயிலின் விழிபோல்
உலகம் இன்னொரு
கிரகத்தின் கைதி.
**
வாழ்க்கையின் பேரில் உரசிய
கைகளைப் பிடித்துப்
பார்க்கும் நேரமிது.
**
காதல் ஒரு நிழலின்
அளவீடு– அனுமதி இல்லாமல்
ஆதரவு வைக்கும்
தேயத்தின் ஒற்றன்.
**
வந்துபோகும் உச்சிச்
சூரியனாய் வயசுக்குள்ளும்
காதல் நெருப்பே
எரிந்து கொள்கிறது.
**
அகலிகையை கல்லாக்கி
தாஜ்மஹால் எழுப்பி
சோகம் அடித்ததே
காதல் சமுத்திரம்...
**
எனவே நப்பாஷை இன்றி
காதலித்துப் பாருங்கள்–
இனிமையின் எல்லையை
அடையும் வரைக்கும்.

உவைஸ்கனி.



# 1983

↑ 1983ம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றிய நொடியில் கரைபுரண்டோடிய மகிழ்ச்சியே இது. கபில்தேவ் தலைமையில் இந்திய அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இந்தக் காட்சியை இன்னும் எத்தனை காலம்தான் பார்த்து மகிழ்வது? மறுபடி எப்போது கைப்பற்றப் போகிறார்கள்? இம்முறையும் எட்டாக்கனிதான்!

# இந்தவாரம் உங்கள் பலன்

**30.05.99 முதல் 05.06.99வரை**

ஜோதிடர் 'கானா'

**மேடம்:**
கிரகநிலையில் சமபரப்பாக உள்ளதால் எடுத்த விடயங்கள் தாமதித்து நடைபெறும். பண விடயங்களில் சிக்கல்களைக் கொடுக்கும். கல்வியில், தொழிலில் பற்றுக் குறைந்து செல்லும். அச்சுவினி நட்சத்திரம் உள்ளவர்கள் பிரயாண அலைச்சல்களைச் சந்திப்பர்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: இளம் சிவப்பு; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்: 31, 02.

**இடபம்:**
மனதில் சஞ்சலம் கொடுக்கும். எதிர்பார்த்த நண்பர்கள், உறவினர்கள் வருவார்கள், புதிய முயற்சிகள் தொடரும், பெண்களுக்கு முன்னேற்றமாக இருப்பினும் கார்த்திகை நட்சத்திரம் கொண்டவர்களின் புதிய முயற்சிகள் வெற்றிபெறும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இள மஞ்சள்; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 02, 04.

**மிதுனம்:**
சனி, வியாழன் 1ம் இடத்தில் உள்ளதால் நல்ல கால அமைப்பு பலன்களை எதிர்பார்க்க முடியும். புதிய ஸ்தானம், பணம் வந்துசேரும். காரிய சித்தியும், மன மகிழ்ச்சியும், திருமண முயற்சிகளும் கைகூடும். புநர்பூச நட்சத்திரம் உள்ளவர்களுக்கு பண வசதிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 4.
அதிஷ்ட திகதிகள்: 4, 31.

**கடகம்:**
வியாழன் சனி 10லும் 7இல் கேதும் உள்ளதால் அலைச்சல்கள் மனதிற்கு கஷ்டமான விடயங்கள் நடைபெற காலம் இடம்கொடுக்கும். முயற்சிகள் தாமதமடையும். தொழில் சிறப்படையும். ஆயிலிய நட்சத்திரக் காரருக்கு குடும்ப மகிழ்ச்சியுடன் காணப்படுவார்.
அதிஷ்ட நாட்கள்: புதன், சனி.
அதிஷ்ட நிறம்: இள நீலம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 1,5.

**சிம்மம்:**
பாக்கியஸ்தான கிரகபலன் மனதில் மகிழ்ச்சியைத் தரும். சந்தோஷம் ஏற்படும். புதிய மாற்றங்களில் மனம் திருப்திப்படும். தொழில், பண வசதிகளைத் தரும். காதல், திருமண, குடும்ப உறவுகள் நன்மை தரும். மகம், பூர நட்சத்திரக்காரர் நல்ல பலன்களைக் காண்பர்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 1,3.

**கன்னி:**
அட்டமஸ்தானத்தில் கிரக வலுக்குன்றுதலால் ஏமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட கருமமும் தடைப்படும். குடும்பத்தில் சிக்கல்கள் தோன்றும். அத்த நட்சத்திர பெண்களுக்கு சோதனை, எதிலும் நாட்டம் இருக்காது.
அதிஷ்ட நாட்கள்: சனி, திங்கள்
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 3,30.

**துலாம்:**
7ம் இடத்துக்கு வியாழன் செல்லவுள்ளதால், திருப்தியான பலன் கிடைக்கும். எதிர்கால வாழ்வுச் செய்தி மகிழ்ச்சி தரும். தடைப்பட்ட கருமங்கள் கைகூடும். சுவாதி, விசாக நட்சத்திரக்காரர்களுக்கு நற்பலன்கள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 5
அதிஷ்ட திகதிகள்: 30, 5.

**விருச்சிகம்:**
ஓரளவு ஸ்தானச் சிறப்பை இவ்விராசியினர் பெற்றாலும், சில எதிர்பார்த்த விடயங்கள் தாமதிக்கும். நோய் துன்பங்கள் ஏற்படும். பணப்பிரச்சனைகள் தொழில் செய்யும் இடத்தில் சிக்கலைக் கொடுக்கும். கேட்டை நட்சத்திரக்காரர்களுக்கு நற்பலன்களைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 3,5.

**தனுசு:**
5இல் குருபகவானும், 7ல் புதனும் உள்ளதால் புதிய முயற்சிகள் கைகூடும். குடும்பத்தில் புத்துணர்ச்சி தென்படும். பண வருவாய் காணப்படும். பூராடம், உத்திராட நட்சத்திரம் கொண்டோருக்கு மனதில் திருப்தியான நிலை அமையும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: றோஸ்; எண்:1.
அதிஷ்ட திகதிகள்: 30,1.

**மரகம்:**
மனதில் அச்சம் காணப்படும். தொலைதூர செய்திகள் மனதைக் கடிந்து கொள்ளும். திருமணம் நடைபெறாதவருக்கு முயற்சிகள் கைகூடும். தொழில், கல்வி, சீராகத் தொடரும். அவிட்ட நட்சத்திர குடும்பத்தவர்கள் சுபசெய்திகள் ஏதேனும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்
அதிஷ்ட நிறம்: மண்நிறம்; எண்: 5
அதிஷ்ட திகதிகள்: 30,5.

**கும்பம்:**
சனி, வியாழன் 3 இல் உள்ளதால் உடலில் நோய் துன்பங்கள் வந்துபோகும். நண்பர்களின் பண உதவி கிடைக்கும். தெய்வ தரிசனம், பிரயாண அமைப்பு என்பன காணப்படும். சதய நட்சத்திரக்காரர் வீண் சிக்கல்கள் சோலிகளில் மாட்டாது அவதானத்துடன் நடக்கவும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளம்பச்சை; எண்: 3
அதிஷ்ட திகதிகள்: 31, 3.

**மீனம்:**
வியாழன், சனி 2ம் இடத்தில் உள்ளதுவும் சுக்கிரன் 5ம் இடத்தில் சிறப்புப் பெறுவதும், நற்பெயர், புகழ் கிடைக்கும். பண உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் நல்ல செய்தி மனதை திருப்தி அடையச் செய்யும். உத்திரட்டாதி நட்சத்திரம் பெண்களுக்கு அதிஷ்ட வாய்ப்பான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 1, 5.

# முரசின் 300 பரிசுமழையில் வெற்றியீட்டியவர்கள் இவர்கள்தான்!

51. கி. ரவிசாந்தினி
இல. 79/20, குணானந்த மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.
52. டக்ளஸ் ஏபிரகாம்
இல. 4, பார்க் சேர்கஸ், கொழும்பு-5.
53. பி. புஸ்பா
இல. 53/19, ஸ்ரீ பிரியதர்சன மாவத்தை, கொழும்பு-10.
54. ஏ.எம். தேவமலர்
இல. 110/ 13, பஞ்சிகாவத்தை வீதி, கொழும்பு-10.
55. வி. தர்ஷினி
ஈ. 3/6, சமகிபுர தொடர்மாடி, ஜோசப் தெரு, கொழும்பு-14.
56. சுந்தரம் முனியாண்டி
எக்காசு தோட்டம், கீழ்ப்பிரிவு, எட்டியாந்தோட்டை.
57. எம்.எஸ்.எம். மொஹிதீன்
இல. 95, கொலதென்னை, பண்டாரவளை.
58. எஸ். கிருஷ்ணவேணி
இல. 28, லிடஸ்டேல் எஸ்டேட், ஹல்கரனோயா.
59. ஆறுமுகம் கலைச்செல்வி
இல. 05. பிரதான வீதி, கலஹா.
60. எஸ். மணிவண்ணன்
இல. 19, நிவ் மார்க்கட், அவிசாவளை.
61. ஏ.கே. சித்தி சாகிரா
இல. 523, சிராஜ் நகர், தம்பலகாமம்.
62. எ.ஃப். பர்ஸானா
இல. 142/8 ஏ, சிலுமின மாவத்தை, வத்தளை.
62. எஸ். சசிகலா,
இல. 251, கெந்தகொல்ல, மாத்தனை.
64. கி. பார்த்தீபன்
டெமேரியா குரூப், பசறை.
65. எம். யோகலட்சுமி
இல. 50, மீபிட்டிய, நாவலப்பிட்டி.
66. ஜி.எஸ். நடேசன்
வேவல்வத்தை, இரத்தினபுரி.
67. அ. கமலா
போற்றி எஸ்டேட், நோர்வூட்.
68. எஸ். நல்லதம்பி
நற்பிட்டிமுனை-06, கல்முனை.
69. ஏ. மெஹ்றுண்நிசா
இல.7, சேனநாயகா பிளேஸ், தெகிவளை.
70. மகேஸ்வரி குமரன்
பெல்மோறல், அக்கரைப்பத்தனை.
71. த. சந்திரமோகன்
உப தபாலகம், நேரியகுளம், வவுனியா.
72. என். ஜேசுதாசன்
இல. 4/4, 3ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
73. க. வசந்தி
பிரதான வீதி, களுதாவளை-2, களுவாஞ்சிக்குடி.
74. ஏ. சந்திரவதனி
இல. 79/26, தெய்யானாவளை, கண்டி.
75. எஸ். மல்லிகாதேவி
இல. 329, நுவரெலிய வீதி, புசல்லாவ.
76. எம்.எம். முஸ்தரி பேகம்
இல. 3, எம்.சி.எஸ். கட்டடம், தில்லையடி, புத்தளம்.
77. சு. தயானந்தி
கிராம கோர்ட் வீதி, ஏறாவூர்-1, செங்கலடி.
78. போ. சந்திரவதனி
இல. 525, நொக்ஸ் வீதி, மூதூர்-3.
79. பி. தவானந்தன்
6ம் வட்டாரம், தையல்கடை, உடப்பு.
80. சஹறுல் எம். சலாஹுடீன்
இல. 117/2, வத்தேகம வீதி, உக்குவளை.
81. எஸ். ராஜ்கண்ணா
இல. 196, வில்லியம் பிளேஸ், இரத்மலானை.
82. மா. உஷாநந்தினி
புகையிரத விடுதி, 144/23, சைனா வே, திருகோணமலை.
83. எம்.எல்.ஏ. றாபீக்
8/6, தைக்கா வீதி, காத்தான்குடி-6.
84. க. வினோதினி
15/17, கல்லூரி ஒழுங்கை, திருகோணமலை.
85. ஆர். சுபாஷினி
அட்டபாகை தோட்டம், கீழ்ப்பிரிவு, கம்பளை.
86. எஸ்.எம்.எஸ். ஹனீஸா
இல. சி, 207, பதுளுபிட்டிய, பதுளை.
87. மும்தாஜ் யூசுப்
இல. 555, நீரெல்ல, அக்குரனை.
88. எஸ். ஹேமமயூரி
இல. 20/1, ஸ்ரீ பியதிஸ்ஸ புர மாவத்தை, பம்பரகலை, நுவரெலியா.
89. சொ. சிவானந்தன்
பார்க் எஸ்டேட், கந்தப்பளை.
90. தேன்மலர் கனகராஜ்,
5/114, பி. டபிள்யூ வீதி, உடபுசல்லாவ.
91. எஸ். நவமணி
இல. 61, காசல்ரி வீதி, டிக்கோயா.
92. பி. அல்லி புஸ்பம்
இல. 60, கொழும்பு வீதி, பேராதெனிய.
93. கே. மகேந்திரன்
மோட்டார் பணிமனை, காகித ஆலை, வாழைச்சேனை.
94. பாத்திமா முஸ்பிரா
இல. 163, பிரதான வீதி, சின்னக்கிண்ணியா-03.
95. சோ. உமாசுதன்
92/எ.ஃப் எம்/ 40 மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
96. பாத்திமா நஸ்லுன்
56, அரசடி வீதி, மாவடி வீதி, காரைதீவு.
97. எம்.என்.எச். குலாஸ்
புள்ளி விபரக் கிளை கச்சேரி, மன்னார்.
98. சி. விநாயகமூர்த்தி
தபாலக வீதி, காரைதீவு-06.
99. C. PRATHEEPAN
182, NIGHTINGALE MEIGHTS, NIGHTINGALE VALE, WOOL WICH S.E 18, 4 HJ, LONDON.
100. M. ASIYA
HOUSE NO. 272 BLOCK NO.04, STREET NO.08, SABAHIYA, KUWAIT

ஏனையோர் விபரம் அடுத்த முரசில்

# நில்-கவனி-முன்னேறு

ஐந்து இலட்சம் ரூபாயைச் செக்காக எழுதித் தரும் பணக்காரருக்கு, ஐந்நூறு ரூபாயை நோட்டாக ஒருத்தருக்குத் தர மனசு வராது. பணத்தை நேரில் காணும் போது ஏற்படுகிற கவர்ச்சி, தோற்றம் ஆர்வம் அத்தகையது.

பணப்பற்று உங்களுக்கு அதிகமிருந்து, அதிலிருந்து விடுபட வேண்டுமென்ற நல்லெண்ணம் இருந்தால் பிறருக்கு நீங்கள் தரும் பணத்தைச் சிறு தொகையானாலும் செக்காகக் கொடுங்கள். 'ஐயோ கொடுக்கிறோமே' என்ற கஞ்சத்தனம் இராது.

**

கிழிசலும் அழுக்குமான ரூபாய் நோட்டுக்களை நமது தலையில் யாராவது கட்டிவிட்டால் அதை நாம் வேறு யார் தலையில் கட்டுவது? கஷ்டமான காரியம். நாலுபேரிடம் கெஞ்ச வேண்டும். ஆனால் நான் ஒரு சுலபவழி கண்டு பிடித்து விட்டேன்.



வீட்டிலிருக்கும் சாமி உண்டியலில் போட்டுவிடுவேன்.

வருஷ முடிவில் வீட்டு உண்டியலில் சேர்ந்ததை கோயில் உண்டியலில் போட்டு வந்தாயிற்று.

பின்னர் வங்கியிலிருந்து ஆயிரம் ரூபாய் எடுத்தேன். அத்தனையும் பத்து ரூபாய் நோட்டு. புத்தம் புது பளிச் நோட்டு.

செலவுக்குப் பிரித்தபோது மேலே சிலவும் கீழே சிலவும் மட்டும் புது நோட்டு. உள்ளே ஏழு நோட்டுக்கள் படுபடு கிழிசல், அழுக்கு.

சாமி உண்டியலில் இதுவரை நான் போட்ட ஏழு அழுக்குக் கிழிசல் நோட்டுகள் எப்படி என்னிடமே வந்துவிட்டன?

மறுபடியும் சரியாக எண்ணிப் பார்த்தேன். 'எட்டு' இருந்தது. வட்டியோடு திருப்பி விட்டார் சாமி.

**

எறும்புகள் ஜீவிக்கட்டும் என்று காலையில் கோலம் போடுகிறோம். ஆனால் காலைக் கடிக்கிறது என்று மாலையில் மருந்தடிக்கிறோம். இதென்ன முரண்பாடு?

**பிரகஸ்பதி**



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்



## விதம் விதமான வகிடு

**வ**கிடு எடுப்பது ஃபாஷனாக இருந்த காலம் மாறி, விதம் விதமாக வகிடு எடுப்பது இப்போதைய ஃபாஷனாகி விட்டது. 'T', 'வேவ்', 'ஸிக்ஸாக்', 'குரோஸ்', 'சைட் போர்ட்டிங்' போன்றவை சமீபத்திய ஃபாஷன் வகிடுகள்.






★ **T:** மிக அகலமான முகம் உள்ளவர்களுக்கு இது அட்டகாசமாகப் பொருந்தும். புடவை, நவீன ஆடைகள் அனைத்திற்கும் அம்சமாக இருக்கும்.




★ **வேவ்:** நீளமான, ஒல்லியான முக அமைப்பு உள்ளவர்களுக்கு இந்த வகிடு அழகு. வகிடின் நீள, அகலங்கள் சரியாக இருக்க வேண்டும். இது நவீன ஆடைகளுக்குத்தான் பொருத்தம் என்றாலும், ஒரு சிலரது முகவாகிற்கு ஏற்ப புடைவைக்கும் பொருந்தும்.

★ **ஸிக்ஸாக்:** வேவ் வகிட்டையே கொஞ்சம் வளைத்து விட்டால் ஸிக்ஸாக். இது வட்டமான முகங்களுக்கு அழகாக இருக்கும்.



★ **குரோஸ்:** முன்னந் தலையின் ஓர் ஓரத்திலிருந்து இன்னொரு ஓரத்திற்கு ஒரே நேர்கோடாகப் போடுவதே குரோஸ் வகிடு. நீளமான, கொழு கொழு முகங்களுக்கு இது பொருந்தும்.



★ **சைட் போர்ட்டிங்:** கோணல் வகிடு கேள்விப் பட்டிருப்பீர்கள். இதுவும் கிட்டத்தட்ட அதே மாதிரித் தான். முன் தலையின் ஓரமாக, அதாவது புருவம் முடிகிற இடத்தில் இருந்து எடுக்கப்படுவது. இதுவும் நீளமுகங்களுக்கே அழகாக இருக்கும்.

**வகிடு பற்றிய மேலும் சில தகவல்கள்:**

• வகிடு எடுக்காமல் தலை வாருவது நல்லதல்ல. ஒரு மாறுதலுக்காக என்றாவது ஒருநாள் வாரலாம்.

• ஒரே இடத்தில், ஒரே மாதிரி வகிடு எடுக்கக்கூடாது. நாளடைவில் அந்த இடத்தில் மட்டும் முடி கொட்டிப் போகும். மாற்றி மாற்றி இட, வலப்பக்கங்களில் வகிடு எடுப்பது இரத்த ஓட்டத்தைச் சீராக்கும். முடியும் நன்றாக வளரும்.

• வகிடு எடுக்காமல் முன்னந்தலையை மேல் நோக்கி வாருவது தவிர்க்கப்பட வேண்டும். நெற்றிப் பக்கம் உள்ள மெல்லிய முடிகள் உதிர்ந்து, நெற்றி பெரிதாக இது வழிவகுக்கும்.

## பிரசவம் கடினமா?

**உ**யரம் குறைவானவர்களுக்கு பிரசவம் மிகவும் கடினம் என்றும் அவர்களுக்கு 'சிசேரியன்' சத்திரசிகிச்சை மூலம் பிரசவம் நடக்கும் என்றும் பலர் கூறுவார்கள்.

இது முற்றிலும் உண்மையல்ல. உயரம் குறைவான பல பெண்களுக்கு சுகமான பிரசவம் நடந்திருக்கிறது.



'உயரத்திற்கும் பிரசவத்திற்கும் அவ்வளவு தொடர்பு கிடையாது' எனப் பல புகழ்பெற்ற மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உயரம் குறைந்த பெண்கள் அதிக நிறையுள்ள குழந்தையை சுகமாகப் பெற்றிருக்கிறார்கள். உயரமான பெண்கள் நிறை குறைவான குழந்தையைப் பெறவே மிகவும் சிரமப்படுவதும் உண்டு.

பிரசவ காலத்தில் சிலருக்குக் கர்ப்பப்பை தேவையான அளவு விரிவடையாது. சிசு வழக்கத்திற்குப் பெரிதாக இருப்பது, அடிக்கடி கருக்கலைந்து பாதிக்கப்படுதல் போன்ற பல காரணங்களால் சிசேரியன் செய்யப் படுகிறது.

சிசுவின் இதயத்துடிப்பு முறையற்ற நிலையில் இருந்தாலும் சிசேரியன் அறுவைச் சிகிச்சை தேவைப்படும்.

முதல் குழந்தை சிசேரியன் என்றால் அடுத்தடுத்துப் பிறக்கும் குழந்தைகளும் சிசேரியனாகத்தான் இருக்கும் என்பதும் தவறான எண்ணம் என்கிறார்கள் சில மருத்துவர்கள்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** FU

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-06-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 89

**புவனா**

டயானாவும், டோடியும் வின்சர் மாளிகையை சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டனர்.

அரச குடும்பத்துக்குச் சொந்தமான அந்த மாளிகை டோடி குடும்பத்தின் கைக்கு வந்த பின்னர் எப்படி இருக்கிறது என்று பார்க்க டயானா ஆசைப்பட்டார்.

அது மட்டுமன்றி, டோடியுடன் பாரிசில் ஒன்றாக வாழப் போகும் மாளிகை அதுதான் என்பதால், அதனைப் பார்வையிட வேண்டும் என்று மனதும் குறுகுறுத்தது.



வின்சர் மாளிகையில் சுமார் நாற்பது நிமிடங்கள் டோடியும், டயானாவும் செலவிட்டனர்.

அந்த மாளிகையின் உள்-வெளித் தோற்றங்களைக் கண்டு டயானா வியந்தார்.

ஓர் இளவரசி தன் காதலனுடன் வாழ்வை அனுபவிக்க-களிப்படைய ஏற்ற மாளிகை தான் அது என்று டயானா கருதினார்.

தன் காதலிக்காக அரச போகத்தைத் துறந்து வாழ்ந்த யோக் கோமகனை இளவரசி நினைத்துக் கொண்டார். தனது நிலையும் அவ்வாறானதே என்று அவர் மனது நிச்சயம் எண்ணியிருக்கும்.

வின்சர் மாளிகையை சுற்றிப் பார்வையிடும் போது டோடியின் கைகளை டயானா பற்றிக் கொண்டார். அவ்வாறு பற்றிக் கொள்வது அவருக்கு அளவற்ற ஆனந்தமாக இருந்தது.



ஹோட்டலின உளளே

"எப்போதும் இப்படியே இருப்போம் அல்லவா?" என்று டயானா டோடியிடம் கேட்டார்.

"நிச்சயமாக! அதில் என்ன சந்தேகம்!" என்று டோடி டயானாவின் கையை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டார்.

"எனக்கு இந்த மாளிகையை விட்டு வருவதற்கு மனமில்லை. என்னை யாரோ இழுத்துப் பிடிப்பது போல இருக்கிறது!" என்று டயானா டோடியிடம் கூறியதாக அவர்களுக்கு அருகில் நின்ற மாளிகை உதவியாளர் பின்னர் கூறினார்.

டயானா உணர்ச்சிமேலீட்டால் அவ்வாறு கூறியதும்; "இங்கேதானே வரப்போகிறோம். இது உங்கள் மாளிகை!" என்று டோடி கூறினார் என்றும் அந்த உதவியாளர் தெரிவித்திருக்கிறார்.

மரணத்திற்கு முன்னர் அதற்குரிய உள்ளுணர்வுகள் சிலரது வாழ்வில் நடப்பதுண்டு.

அதேபோல டயானா வின்சர் மாளிகையில் கூறியவற்றை ஒவ்வொருத்தரும் தம் உணர்வுக்கும், அறிவுக்கும் ஏற்ப எடுத்துக் கொள்ளலாம்.

### மாலை 4.30

வின்சர் மாளிகையில் இருந்து புறப்பட்ட டோடியும், டயானாவும் மாலை 4.30 மணிக்கு டோடி குடும்பத்துக்குச் சொந்தமான ரிட்ஸ் ஹொட்டலை அடைந்தனர்.

அவர்கள் சென்று இறங்கும்போதே படப்பிடிப்பிடிப்பாளர்கள் அங்கு குழுமி இருந்தனர்.

டோடியும், டயானாவும் இதனை எதிர் பார்க்கவில்லை. காரை படப்பிடிப்பாளர்கள் சூழ்ந்து கொண்டதும் டோடி பொறுமை இழந்து விட்டார்.

டயானாவுக்கு இத்தகைய அனுபவம் புதிதல்ல. டோடிக்கு புதிது. கண்ணைக் கூச வைக்கும் கமரா வெளிச்சங்கள் அவரை எரிச்சலடையச் செய்தன.

டோடியின் தந்தையான அல்.ஃபாயிட் அப்போது ஹொட்டலின் உள்ளேதான் இருந்தார்.

படப்பிடிப்பாளர்கள் வெளியே காத்திருப்பதை அவர் அறியாமலில்லை. டோடி, டயானா காதல் விவகாரம் பரபரப்பாக உலகெங்கும் அடிபடுவதை அவர் உள்ளூர விரும்பினார்.

பிரிட்டிஷ் அரச குடும்பம் இத் திருமணத்தைத் தடுத்துவிடக்கூடும் என்று அவர் கருதினார்.

ஆகவே, அப்படியொரு முயற்சிக்கு இடம்கொடாத வகையில், அவர்களது நெருக்கத்தை உலகுக்குத் தெரிவிக்க அவர் விரும்பினார். அதனால் படப்பிடிப்பாளர்கள் அங்கு குழுமியிருக்கும் தகவலை முன்கூட்டியே டோடிக்கு தெரிவிக்காது இருந்துவிட்டார்.

பாரிசில் அல்.ஃபாயிட் குடும்பத்தின் ரிட்ஸ் ஹொட்டல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புகளுக்கு தனியான பாதுகாப்பு அமைப்பு ஒன்றும் இருந்தது.



அதன் உதவியைக்கூட அல்.ஃபாயிட் பெற விரும்பவில்லை. டோடியையும், டயானாவையும் காரிலிருந்து வரவேற்று அழைத்து வர, ஹொட்டலின் இயக்குநரான ஃபிராங் கிளிங்கின் உதவியாளர் தயாராக நின்றிருந்தார்.

டோடியையும், டயானாவையும் அவர்தான் கார்க் கதவைத் திறந்து அழைத்து வந்தார்.

படப்பிடிப்பாளர்களிடம் சிக்காது இருவரும் ஒரே ஓட்டமாக ஹொட்டலின் உள்ளே புகுந்து கொண்டனர்.

அதன் பின்னர் படப்பிடிப்பாளர்கள் உள்ளே செல்ல முடியாமல் ஹொட்டல் பாதுகாவலர்களால் தடுக்கப்பட்டனர்.

ஹொட்டலின் சக்திமிக்க வீடியோ கமராக்கள் எப்போதும் பொருத்தப்பட்டிருக்கும். ஹொட்டலின் ஒவ்வொரு பகுதியையும் இயக்குநரும் பாதுகாவல் பிரிவினரும் கவனிக்க வசதியாகவே அந்த கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. நிகழ்ச்சிகளை பதிவு செய்யும் வசதிகளும் இருந்தன.

டயானாவும் டோடியும் உள்ளே சென்றதில் இருந்து ஒவ்வோர் அசைவும் படமாக்கப் பட்டுக் கொண்டிருந்தன.

உலகப் புகழ்பெற்ற இளவரசியின் இறுதிக் கட்டக் காட்சிகள் சிலவற்றை தாம் படமாக்கிக் கொண்டிருப்பதை அக் கமராக்கள் அறிந்திருக்க முடியாதல்லவா?

## கண்டதும் மொய்த்தனர்

### திடீர்மாற்றம்

ரிட்ஸ் ஹொட்டலுக்குள் அல்.ஃபாயிட் அவர்களை இன் முகத்தோடு வரவேற்றார். இருவரும் அவருடன் சிறிது நேரம் உரையாடிவிட்டு, அங்குள்ள உல்லாசப் பிரிவுக்கு சென்று விட்டனர்.

ரிட்ஸ் ஹொட்டலில் இருந்து தன் நண்பிகள் சிலருடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டார் டயானா.

அவர்கள் மூலம் அவர் அறிந்த செய்தி அதிர்ச்சியளித்தது.

"டயானா கருவுற்றுள்ளார். டோடியும், டயானாவும் திருமணத்தின் முன்னரே கூடிக் களித்ததில், டயானா கர்ப்பம் தரித்துவிட்டார்" என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

அதனையடுத்து தன் நம்பிக்கைக்குரிய பிரிட்டிஷ் பத்திரிகையாளர்களில் ஒருவரான ரிச்சார்ட் கே என்பவருடன் தொலைபேசியில் உரையாடினார்.

அதுபற்றி நினைவு கூர்ந்து பின்னர் 'கே' இவ்வாறு எழுதியிருந்தார்:

"தனது வாழ்க்கையில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக என்னிடம் இளவரசி கூறினார்.

தான் ஆரம்பித்து வைத்த கண்ணி வெடிகளுக்கு எதிரான இயக்கப் பணிகளையும், ஏனைய பொதுப் பணிகளையும் நிறைவேற்றிவிட்டு நவம்பர் மாதத்தில் பொது வாழ்வில் இருந்து ஒதுங்கிக்கொள்ளப் போவதாக டயானா சொன்னார்.

இவ்வாறு எழுதிய 'கே', "சனிக்கிழமை என்னுடன் தொடர்பு கொண்டபோது நான் இதுவரை அறிந்திராத உற்சாகமும் மகிழ்ச்சியும் அவரிடம் குடிகொண்டிருப்பதை அவதானித்தேன்" என்று எழுதியிருந்தார்.

அந்த மகிழ்ச்சிக்கும், உற்சாகத்திற்கும் பெரும் சவால் காத்திருந்தது.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**பொத்துவில் வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | இ.சந்திரா, குண்டுமடு, பொத்துவில்-03. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


**அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்**

## வைர மோதிரப் போட்டி

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு 9 வைர மோதிரப் போட்டி

www.padippakam.com





சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சாதனைகள் யாவினையுங் கூடும்
- கையைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு - அது
சக்தியுற்றுக் கல்லினையுஞ் சாடும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# இன்னா செய்தாரை....

ஞானி ஒருவர் ஒருநாள் இரவு நேரத்தில் வீதியால் வந்து கொண்டிருந்தார். வழியில் ஒரு குடிகாரன், ஓர் இசைக் கருவியை வைத்து அதை மீட்டிக்கொண்டிருந்தான்.

அது மட்டுமன்றி அந்த இசைக்கருவியால் வீதியால் சென்று கொண்டிருப்பவர்களை அடித்துக் கொண்டிருந்தான்.

ஞானி அவனருகில் செல்ல, கையில் வைத்திருந்த இசைக்கருவியால், அவரது தலையில் ஓங்கி அடித்தான்.

இதனால் ஞானியின் மண்டையில் இரத்தக் காயம் ஏற்பட்டது. அவனது இசைக் கருவியும் இரண்டாக உடைந்து விட்டது.

இவ்வளவு நடந்தும் அந்த ஞானி ஒன்றும் பேசாமல் தலையைப் பிடித்துக்கொண்டு போய் விட்டார்.

மறுநாள் அந்த ஞானி, தனது உதவியாளர் மூலமாக அந்தக் குடிகாரனுக்கு கொஞ்சம் பணத்தை அனுப்பி வைத்தார்.

ஞானியின் உதவியாளர், குடிகாரனுக்கு பணத்தைக் கொடுத்தார். குடிகாரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன விஷயம் என்று கேட்டான் குடிகாரன்.

உடனே ஞானியின் உதவியாளர் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அந்தக் கடிதத்தை ஞானி எழுதியிருந்தார். அதில்,

'உங்களுடைய இசைக் கருவி உடைவதற்கு எனது தலை காரணமாக இருந்தது. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். நான் அனுப்பியிருக்கும் பணத்தில் புதிதாக ஓர் இசைக் கருவியை வாங்கிக் கொள்ளுங்கள்.' என்று எழுதப்பட்டிருந்தது.

இதைப் படித்த குடிகாரன் வெட்கித் தலைகுனிந்தான்.

சிறிது நேரத்தில் தன் நண்பர்கள் சிலரை அழைத்துக்கொண்டு அந்த ஞானி இருக்கும் இடத்திற்குச் சென்றான்.



அவரிடம் தான் முறைகேடாக நடந்து கொண்டமைக்காக மன்னிப்புக் கேட்டான்.

"ஐயா பெரியவரே! உங்களுக்கு நான் தீங்கிழைத்தும் அதை நீங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், எனக்கு நன்மை செய்தீர்கள். உங்களது இந்தச் செயலால் நான் திருந்திவிட்டேன். நான் செய்த இந்தப் பாவச் செயலை மன்னித்து விடுங்கள்."

என்று அவரிடம் மன்னிப்புக் கேட்டு மனம் திருந்தி வாழ்ந்தான்.

**'இன்னா செய்தாரை ஒறுத்தல் , அவர் நாண**
**நன்னயம் செய்து விடல்'**

என்ற வள்ளுவரின் வாக்கின்படி, அந்தக் குடிகாரனை தண்டிக்காமல், அவனே நாணும்படி அவனுக்கு நன்மை செய்து அவன் திருந்தி வாழ வழிவகுத்தார் அந்த ஞானி.

## அதிசயம் - ஆனால் உண்மை!





➡ **போ**ர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த ப்ரைட்ஸ் டி அல்மேடா என்ற ரொட்டி சுடும் பெண், அல்ஜுபரோடா போரில், ரொட்டி சுடும்நீள் கரண்டியால் 7 சிப்பாய்களை அடித்துக்கொன்றாள்.



➡ **கா**ங்கோ நாட்டு முருண்டி என்ற பழங்குடிப் பெண்கள் தமது காலின் மீது நூற்றுக் கணக்கான மீட்டர் இரும்புச் சரடைச் சுற்றிக்கொள்வார்கள். இதனால் அவர்களின் கால்கள் 5 மடங்கு பெரிதாகத் தோன்றும். இதை அவர்கள் அழகு என்று கருதுகிறார்கள்.

⬆ **ஸ்**பெயின் ஆதிக்கத்தில் இருந்த கயானாவை ஆண்ட புபிஸ் என்ற மன்னன் தனது ஆட்சிக் காலத்தில் தினமொரு சிங்காசனத்தில் அமர்வான். ஒவ்வொரு இரவும் அவருக்காக ஒரு புதுச் சிங்காசனம் தயாராகும்.

## என்ன காரணம்?



**க**டுமையாக வேலை செய்தாலோ அல்லது விளையாடினாலோ எமக்குக் களைப்பு ஏற்படுகின்றது. இதற்கு என்ன காரணம் என்று தெரியுமா?

எமது உடலில் இருக்கும் லாக்டிக் எனப்படும் அமிலம் கடுமையாக வேலை செய்தாலோ அல்லது விளையாடினாலோ எமது தசைத் திசுக்களில் கலந்து விடுகிறது. எமக்குத் தெரியாமலேயே இது தசைகளைச் சுருக்கி, சில நிமிடங்கள் எம்மை இயங்க விடாமல் ஓய்வெடுக்க வைத்து விடுகின்றது.

## தாய்ப்பாசம்




**தா**ய்ப்பாசம் மனிதர்களுக்கு மட்டுமன்றி எல்லா உயிர்களுக்கும் பொதுவானதுதான்.

கங்காருவை எதிரிகள் துரத்தும் போது வேகமாக ஓடித் தப்பி விடும். சில வேளைகளில் தப்பி ஓடும்போது தம்மால் தப்ப முடியாது என்று தெரிந்தால், தமது வயிற்றுப்பையில் இருக்கும் குட்டிகளை எடுத்து அடர்ந்த புதர்ச் செடிகளுக்குள் வீசி விட்டு ஓடும்.

தான் எதிரிகளிடம் அகப்பட்டு உயிரை விட்டாலும் தன் குட்டியாவது பிழைத்துக் கொள்ளட்டுமே என்று தாய்ப் பாசத்தில்தான் அவை இப்படிச் செய்கின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **05.06.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 298**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 296

**பரிசுக்குரியவர்:**
முத்துலிங்கம் பிரிதிகலா,
ப/ கோணக்கலை த.வி., பசறை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே. ஷிரான் அஹமட், இ/ தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | வை. சியாட், அநு/ நேக முஸ்லிம் மகா வித்தியாலயம், நேகம்பஹா. |
| மோகன் பிரசாந்தன், புளியாவத்தை த.ம.வித்தியாலயம், டிக்கோயா. | தி. சஞ்ஜீவன், றோயல் கல்லூரி, கொழும்பு-7. |
| எ.ஃப்.எம். பா்ஹான், மட்/ மில்லத் ம.ம.வித்தியாலயம், காத்தான்குடி-3. | புஷ்பராஜா. ரிஸ்ந்தன், சாரதா வீதி, காரைதீவு-05. |
| பா. ஜீவராசா, மட்/ விநாயகர் வித்தியாலயம், கிரான்குளம். | மோ. நிரோஷினி, விவேகானந்தா பாடசாலை திருகோணமலை. |
| தர்ஷினி லெஸ்லி ரவீந்திரன், இல.45, புகையிரத விடுதி, திருகோணமலை. | நிஷாந்தினி ரட்னம், இ/ப தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. |

## நாடுகளும் அடையாளங்களும்

சில நாடுகளும், அவற்றின் அடையாளங்களும், அந்த அடையாளங்கள் அமைந்துள்ள இடங்களும் பின்வருமாறு:

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா | - சிட்னி ஒபரா ஹவுஸ் (சிட்னி) |
| பிரேஸில் | - ரெடிமேர் சிலை (ரியோ டி ஜெனிரோ) |
| சீனா | - சீனப் பெருஞ்சுவர் |
| எகிப்து | - பிரமிட்கள் |
| ஃபிரான்ஸ் | - ஈஃபில் கோபுரம் (ஃபாரிஸ்) |
| இந்தியா | - தாஜ்மஹால் (ஆக்ரா) |
| இத்தாலி | - சாய்ந்த கோபுரம் (பைசா) |
| ஜப்பான் | - இம்பீரியல் அரண்மனை (டோக்கியோ) |
| அமெரிக்கா | - சுதந்திர தேவி சிலை (நியூயோர்க்) |

## எறும்பு தின்னித் தாமரை



**தெ**ன்னமெரிக்காவில் உள்ள கயானாவில் எறும்பு தின்னித் தாமரை என்ற செடி ஒன்று உள்ளது. இதன் பூவில் சுரக்கும் தேன், பூச்சிகளை கவரக்கூடிய நறுமணம் கொண்டது. அந்த நறுமணத்தில் மயங்கி, தேன் உண்ண வரும் பூச்சிகளை வெளியேறாதவாறு, கொன்று உணவாக்கிக் கொள்கிறது.

இதனால் இந்தத் தாவரத்தைச் சாவுத் தாவரம் (DEATH PLANT) என்று அழைக்கிறார்கள்.

## பூச்சிகளின் வேகம்

**சி**ல பூச்சிகளின் பறக்கும் வேகத்தைப் பாருங்கள்.


குளவி (மணித்தியாலத்திற்கு) - 18 கிலோ மீட்டர்

தேனீ (மணித்தியாலத்திற்கு) - 18 கிலோ மீட்டர்

வண்ணத்துப் பூச்சி (மணித்தியாலத்திற்கு) - 18 கிலோ மீட்டர்

குதிரை ஈ (மணித்தியாலத்திற்கு) - 37 கிலோ மீட்டர்.

## அதிக ஆயுட்காலம்



**'சீ** அனிமோன்' என்னும் கடற்பிராணி அதிக நாட்கள் உயிர் வாழக் கூடியது. கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து வாழும் இந்தக் கடற்பிராணி 100 வருடங்களுக்கும் அதிகமாக உயிர்வாழக் கூடியது.

இதில் இன்னொரு அதிசயம் என்னவென்றால் இப்பிராணி இறந்துவிட்டால் அதை யாராலும் சுலபமாகக் கண்டு பிடிக்க முடியாது.

## முதலை வகைகள்

**மு**தலைகளில் மூன்று வகை உள்ளன.

1. மக்கர் இனம்:
இவற்றின் தலை சின்னதாகவும் முகம் சிறிதாகவும் இருக்கும்.
2. கேரியால் இனம்:
இவற்றின் முகம் நீளமாகவும், கொடூரமாகவும் இருக்கும்.
3. அலிகேட்டர் இனம்:
இவற்றின் முகம் மிக நீண்டதாக இருக்கும்.

## இறப்பரைக் கண்டு பிடித்தவர்கள்



**உ**லகிலேயே முதன் முதலாக இறப்பரைக் கண்டு பிடித்தவர்கள் இலத்தீன் அமெரிக்காவில் வாழ்ந்த மாயர் என்ற பழங்குடியினர்.

இவர்கள் இறப்பர் மரத்தில் இருந்து கிடைத்த பாலைப் பாத்திரத்தில் பிடித்து அந்தப் பாத்திரத்தினுள் தங்கள் கால்களை நனைத்தார்கள். பின் அதை உலர வைத்து இறப்பர் செருப்புக்கள் போல் உருவாக்கினார்கள்.

## குட்டிச் செய்திகள்

• **யா**னைக் குட்டிக்கு அதன் தாய் யானை மட்டும் பால் கொடுப்பதில்லை. பாலுள்ள எல்லா யானைகளுமே பால் கொடுக்கும்.

• மனிதனுக்கு இன்னொரு மனிதனின் இரத்தத்தைச் செலுத்தலாம் என்று கண்டு பிடித்துச் சொன்னவர் ஜேம்ஸ் ப்ளேன்ட்ஸ் என்பவர்.

• உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும், எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் வளரக்கூடிய ஒரே பிராணி நாய்.

## தற்செயலான கண்டுபிடிப்பு



**ப**ல இரசாயனப் பொருட்கள் தற்செயலாகத்தான் கண்டுபிடிக்கப்பட்டன.

உதாரணத்திற்கு, வில்லியம் பெர்கின் என்ற விஞ்ஞானி குயினைன் என்ற மருந்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது, தற்செயலாக செயற்கைச் சாயத்தைக் கண்டுபிடித்தார்.


படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை**

பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனை காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். பொலிஸ் விசாரிக்கிறது. **இனி...**

சப்-இன்ஸ்பெக்டர் ஜேக்கப் சொன்னதைக் கேட்டு இன்ஸ்பெக்டர் பலராமன் கண்களை வியப்பில் விழித்தார்.

"பூவிழி மர்டர் சம்பந்தமாய் ஒரு முக்கியமான தகவல் மாட்டியிருக்கா....?"

"ஆமா... ஸார்..."

"என்ன..?"

"பூவிழி கத்தியால் குத்தப்பட்டுக் கிடந்த ஹைவேஸ் ரோட்டுப் பகுதிக்கு மோப்பநாயைக் கொண்டுபோய் ஸ்மெல் பண்ண விட்டதில் நாய் அந்த இடத்தை மோப்பம் பிடிச்சுட்டு ஒரு ஒற்றையடிப் பாதை வழியா ஓடியிருக்கு. சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் ஓடினதும் பொட்டல் வெளியில் முள் வேலிக்குப் பக்கத்துலே போய்ப்படுத்துருக்கு... ஸார்."

"தென்...?"

"இந்த முள்வேலி இருந்த இடம் ஒரு ஹாஸ்பிடலுக்குச் சொந்தமான நிலம்... ஹாஸ்பிடல் கட்டறதுக்காக வாங்கிப் போடப்பட்ட நிலம் அது..."

"அது எந்த ஹாஸ்பிடல்...?"

"ஜேஸ்மின் ஹாஸ்பிடல் ஸார்."

"சரி... முள்வேலிக்குப் பக்கத்துல போய்படுத்துக்கிட்ட நாயோட அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்னவாக இருந்தது ஜேக்கப்..."

"நாய் படுத்துக் கிடந்த இடத்தைச் சுத்தி சீன் ஆஃப்க்ரைம் பார்த்ததில் முள் வேலியின் ஒரு இடத்தில் முறுக்கிய முள் கம்பியில் சில தலைமுடிகளும் லேசா ரத்தக்கறையும் இருந்திருக்கு ஸார்...."

இன்ஸ்பெக்டர் பலராமன் தன் தாடைக்குக் கையைக் கொண்டு போனார்.

"நீங்க சொல்றதைப் பார்த்தா பூவிழியை அந்த இடத்துல வெச்சுத்தான் யாரோ கத்தியாலே குத்தியிருக்கணும். அதுக்கப்புறம் அவ செத்துட்டாள்னு நினைச்ச பாடியை ஹைவேஸ் ரோட்டுக்குப் பக்கத்துல கொண்டு வந்து போட்டுட்டுப் போயிருக்கணும்..."

"மே...பி... ஸார்..."

இன்ஸ்பெக்டர் பலராமன் சில விநாடி யோசனைக்குப் பின் தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த நீலமேகத்தை ஏறிட்டார்.

"ஜேஸ்மின் ஹாஸ்பிடலைப் பத்தி நீங்க கேள்விப்பட்டிருக்கீங்களா?"

"ம்.. கேள்விப்பட்டிருக்கேன்."

"ஹாஸ்பிடலுக்குப் போனதில்லை...?"

"இல்லை..."

"பூவிழிக்கு நெருக்கமான ஃப்ரண்ட்ஸ் யார் யார்னு சொன்னீங்க...?"

"அருணா... சங்கரி..."

"இவங்க அட்ரஸ் என்ன...?"

நீலமேகம் அட்ரஸ்களைச் சொல்ல இன்ஸ்பெக்டர் பலராமன் தன் சிறிய டயரியில் அவைகளைக் குறித்துக் கொண்டு சப்-இன்ஸ்பெக்டர் ஜேக்கப் போடு ஹாஸ்பிடலுக்கு வெளியே நிறுத்தியிருந்த ஜீப்பை நோக்கி நடந்தார்.

"ஜேக்கப்..."

"ஸார்...."

"பூவிழியோட மர்டர் என்ன காரணத்துக்காக நடந்ததுன்னு தெரியலை. உங்களால ஏதாவது கெஸ் பண்ண முடியுதா?"

"பொண்ணு அழகாயிருந்திருக்கா. அவ உடம்பைத் தொட யாராவது ஆசைப் பட்டிருக்கலாம்."

"அவ பலாத்காரப்படுத்தப்பட லைன்னு டாக்டர் சொல்றாரே... ஜேக்கப்... 'நீங்க சொல்ற மாதிரி கொலையாளியோட நோக்கம் அதுவாக இருந்தா பூவிழியோட உடைகள் கிழிபட்டு அவள், அரை நிர்வாணமாகவோ, முழு நிர்வாணமாகவோ இருந்திருக்கணும். அவ உடம்புல விழுந்திருக்கிற கத்திக் குத்துக்களைப் பார்க்கும்போது கொலையாளியோட நோக்கம் அவளைக் கொலை செய்யறது மட்டுமாகத்தான் இருந்திருக்கணும்."

வாசலுக்கு வந்து ஜீப்பில் ஏறினார்கள்.

ஜேக்கப் கேட்டார்:

"இப்ப நாம எங்கே போறோம் ஸார்...?"

"பூவிழி வேலை பார்த்த 'கன்சல் டன்ஸிக்யூப்' கம்பெனிக்குப் போறோம்... பூவிழி இன்னிக்கு ஆபீசுக்கே போகலை. ஆபீசுக்குப் போறதா சொல்லிட்டு வேற எங்கேயோ போயிருக்கா... ஆனா பூவிழியோட ஃபாதர் நீல மேகம் வேற விதமா சந்தேகப்படுகிறார்..."

ஜீப் கிளம்பியது.

"அவரோட சந்தேகம் என்ன ஸார்...?"

"இன்னிக்கு பூவிழியைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றதா ஏற்பாடாகியிருந்தது. நீலமேகம் பூவிழியோட ஆபீசுக்கு ஃபோன் பண்ணி அவளை சீக்கிரமா அனுப்பி வைக்கும்படி கேட்டிருக்கார். அதுக்கு அந்தக் கம்பெனி டெலிஃபோன் ஆபரேட்டர் பூவிழி ஸ்டாஃப் மீட்டிங்கில் இருக்கிறதாச் சொல்லியிருக்கார். நீலமேகம் மறுபடியும் ரெண்டு மணி நேரம் கழிச்சு ஃபோன் பண்ணிக் கேட்டபோது கம்பெனி ஏ.ஓ.பேசியிருக்கார். பூவிழி காலையிலிருந்து ஆபீசுக்கு வரலைன்னு சொல்லியிருக்கார். ஸோ பூவிழி விஷயத்துல குளறுபடி கம்பெனியிலிருந்தே ஆரம்பமாகியிருக்கும்னு நீலமேகம் சந்தேகப்படறார். நம்ம என்கொயரியை 'கன்ஸல்டன்ஸி க்யூப்'பிலிருந்தே ஆரம்பிச்சாத்தான் சரியான வழியிலேயே போக முடியும்."

"கம்பெனி எங்கே ஸார் இருக்கு...?"

"ராயப்பேட்டை லாய்ட்ஸ் ரோட்ல ராஜேஸ்வரி டவர். ஐந்தாவது ஃப்ளோர்..."

"கம்பெனியோட வேலைநேரம் முடிஞ்சு எல்லாரும் இந்நேரத்துக்கு வீட்டுக்குப் போயிருப்பாங்களே ஸார்..."

"போய்ப் பார்க்கலாம்."






# கையில் சிக்கிய மின்னல்

## க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

ஜீப் சென்னையின் அந்த மாலை-கம்-ராத்திரி நேரத்தில் ரோடுகளைத் தேய்த்துக் கொண்டு லாயிட்ஸ் ரோட்டைத் தொட்டு, ஒரு வளைவில் இருந்த ராஜேஸ்வரி டவருக்கு முன்பால் நின்றது.

டவரின் முதல் நான்கு மாடிகள் ஷாப்பிங் காம்ப்ளக்ஸுகளாய் மாறியிருக்க ஐந்தாவது மாடியின் எல்லையில் 'கன்ஸல்டன்ஸி க்யூப்' என்ற பெயர்ப்பலகை இரத்த நிற நியான் விளக்கில் ஒளிர்ந்தது.

இருவரும் ஜீப்பை விட்டு இறங்கி முதல் மாடி லிஃப்ட்டுக்கு வந்து ஐந்தாவது மாடிக்கு உயர்ந்தார்கள்.

கம்பெனியின் ஷட்டர் இழுபட்டிருக்க ஸ்ரூலில் உட்கார்ந்தபடி ஒரு பீடியை புகையாக மாற்றிக் கொண்டிருந்தான் வாட்ச்மேன்.

போலீஸ் யூனிஃபார்களைப் பார்த்ததும் பீடியை அவசர அவசரமாய் அணைத்து பக்கத்தில் இருந்த வேஸ்ட் பின்னில் போட்டு விட்டு எழுந்து நின்றார்.

ஜேக்கப் கேட்டார்.

"கம்பெனியில் இப்ப யார் இருக்காங்க?"

"யாரும் இல்ல ஸார்.. எல்லாரும் போயிட்டாங்க..."

"வழக்கமா கம்பெனி எத்தனை மணி வரைக்கும்...?"

"ஆறு மணி வரைக்கும் ஸார்...."

இன்ஸ்பெக்டர் பலராமன் குறுக்கிட்டுக் கேட்டார். "இந்தக் கம்பெனியில் பூவிழின்னு ஒரு பொண்ணு வேலை செய்யுதே தெரியுமா...?"

"தெரியும் ஸார்..."

"அந்தப் பொண்ணு இன்னிக்கு வேலைக்கு வந்ததா?"

"எனக்குத் தெரியாது ஸார். ஏன்னா எனக்கு சாயந்திரம் ஆறு மணியிலிருந்து மறுநாள் காலை ஆறு மணி வரைக்கும்தான் ட்யூட்டி. பகல் நேரத்துக்கு வேறு வாட்ச்மேன் வருவார்."

"யார் அந்த வாட்ச்மேன்... பேர் என்ன?"

"முனுசாமி... ஸார்..."

"முனுசாமிக்கு வீடு எங்கேன்னு தெரியுமா?"

"தெரியும் ஸார்... நெம்பர் இருபத்தேழு, பட்டி வீரன் கோயில் தெரு, சிந்தாதிரிப் பேட்டை ஸார்."

ஜேக்கப் அந்த அட்ரஸைக் குறித்துக் கொண்டிருக்கும் போதே-

அந்தச் சத்தம் கேட்டது. 'ட்ர்ர்ர்ர்' நாற்காலி இழுபடும் சத்தம்.

சாத்தப்பட்டிருந்த ஷட்டருக்குப் பின்னாலிருந்து கேட்ட அந்தச் சத்தம் பலராமனையும் ஜேக்கப்பையும் துணுக்குற வைத்தது.

வாட்ச்மேன் முகத்தில் இன்ஸ்டன்ட் வியர்வை.

***

"வாங்க டாக்டர்!"

வர்ணா வாசற்படியிலேயே நின்று வரவேற்க டாக்டர் ரத்னவேல் உள்ளே வந்தார்.

சோபாவில் படுத்திருந்த பிங்கி டாக்டரைப் பார்த்துவிட்டு சின்னதாய்க் குரைத்துக் கொண்டே ஓடிவர ரத்னவேல் அதை வியப்பாய்ப் பார்த்தார்.

"அந்த நாயா இது..?"

"ஆமா டாக்டர்..."

நாயிடம் குனிந்தார். அதன் காதுகளைப் பிடித்துத் தூக்க அது வலியில் திமிறிக் கத்தியது.

"ஃபென்டாஸ்டிக்....! என்னோட வெடிரினரி ட்ரீட்மெண்ட் சர்வீஸ்ல இப்படியொரு அற்புதத்தை நான் பார்த்தது கிடையா. ஏறக்குறைய மரணவாசலுக்கே போயிட்ட ஒரு நாய் எந்தவிதமான மெடிக்கல் ட்ரீட்மெண்ட்டும் இல்லாமே உயிர் பிழைத்து இப்படித் துள்ளி விளையாடறது அதிசயமான விஷயம்... நாய்க்கு நீ ஏதாவது ட்ரீட்மெண்ட் கொடுத்தியாம்மா?"

"இல்ல டாக்டர்..."

நடந்தவற்றை வர்ணா விவரித்தாள். பிறகு, "பிழைக்கவே பிழைக்காதுன்னு சொன்ன நாய் எப்படி டாக்டர் பிழைச்சது...? இதுக்கு என்ன காரணம் இருக்க முடியும்னு நீங்க நினைக்கறீங்க...?" என்றாள்.

ரத்னவேல் வர்ணா கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிவிட்டுத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த நாயை மறுபடியும் பார்த்தார்.

பார்வையில் இப்போது ஒரு புதிய பயம்.

(தொடர்ந்து வரும்)

# நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்

# 90 ஷ கதை

நேத்திக்கு உங்க வீட்டுக்கு ஷூட்டிங்குக்குத் தேவையான காஸ்ட்யூம்ஸோடு போனோம். 'அவ இங்கில்லை. அவ வீட்டை விட்டு ஓடிட்டா. எங்கிருக்கான்னு எனக்குத் தெரியாது. எங்கயாவது போய் தேடிக்கோங்க'ன்னு சொல்லி, 'பட்'டுன்னு கதவைச் சாத்திட்டார்ம்மா உங்க வீட்டுக்காரர்"ன்னு சொன்னார்கள்.

அப்புறம் டி.ராஜேந்தர் என்னுடன் ஃபோனில் பேசினார். நடந்ததைக் கேள்விப்பட்டதும் அவருக்கும் ஒரு பதற்றம். "என்னம்மா இது?... ஷூட்டிங் வேற வெச்சுட்டேன்; எல்லோருக்கும் வேற சொல்லிட்டேன். முதல் ஷாட்டே உங்க முகத்துலதான். இந்தச் சூழ்நிலையில் எப்படி வருவீங்க?" என்று அக்கறையோடு கேட்டார்.

"நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க. என் காஸ்ட்யூமை மட்டும் கொடுத்து அனுப்புங்க. நான் வந்துடுவேன்." நான் இப்படிச் சொன்னதை அவரால் நம்ப முடியவில்லை. கொஞ்ச நேரத்தில் என் காஸ்ட்யூமர் லீலா வந்தார். என்னைக் கட்டிக் கொண்டு அழுதார்.

அன்றைக்கு நான் படப்பிடிப்புக்குப் போனேன். அங்கே ஜார்ஜின் டிரைவர் வந்தார்.

"ஸார் அந்த ஓரத்தில நிக்கறார்" என்றான்.

"எதுக்கு இப்ப வந்திருக்காரு?"

"செலவுக்குப் பணம் இல்லையாம். உங்ககிட்ட கேட்க வந்திருக்காரு."

"என்ன விளையாடறாரா? எங்கிட்ட எங்கே பணம் இருக்கு? வீடு, வாசல், கொத்துச் சாவி எல்லாமே அவர் கிட்டதானே இருக்கு? 'எல்லாம் முடிஞ்சு போச்சு. இங்க வந்து தொந்தரவு பண்ண வேண்டாம்'னு சொல்லு."

**பணம் வேண்டும்**

அவனைப் பேசி அனுப்பிவிட்டேன். மறுபடியும் அடுத்த நாள் காலையில் மீண்டும் டிரைவர் எங்கண்ணா வீட்டுக்கு வந்தான். "எலக்ட்ரிக் பில் கட்டக்கூட பணம்இல்லையாம்" என்றான். "பில்லைக் கொண்டு வா; நான் கட்டிக்கிறேன்."

"ரோவர் காரை வேணும்னா உங்களை எடுத்துக்கச் சொல்றாரு" என்றான்.

"எனக்கு ரோவரும் வேண்டாம்; ஒண்ணும் வேண்டாம். எனக்கு ஆட்டோவில போகக் கூட தெரியும்" என்று சொல்லி அவனை அனுப்பினேன். அப்போது தான் வெளியே சென்றிருந்த என் அண்ணன் வந்தான்.

வந்தவன், "ஜார்ஜ் இங்கே வந்தாரா?" என்று விசாரித்தான். "டிரைவர்தான் வந்தார்" என்கிற விவரத்தைச் சொன்னேன். அண்ணன் அப்படிக் கேட்டதற்கு காரணம் பிறகுதான் தெரிந்தது. டிரைவர் தனியாக வரவில்லை, ஜார்ஜ்தான் அழைத்து வந்திருக்கிறார். டிரைவரை மட்டும்அனுப்பிவிட்டுதான் கீழேயே நின்று கொண்டிருந்திருக்கிறார்.

அதற்குள் அன்றைய காலைப் பத்திரிகைகளில் எங்கள் விவகாரம் வெளிவந்துவிட்டது. என் அண்ணனைப் பார்த்ததும். "என்ன... பேப்பரிலெல்லாம் கொடுத்து என்னை அவமானப்படுத்தறீங்களா?" என்று சண்டைக்கு வந்திருக்கிறார்.

பக்கத்திலிருந்த குடிசைவாசிகளுக்கு விஷயம் தெரிந்திருந்தது. அதனால் அவர்கள் என் அண்ணனுக்கு ஆதரவாகப் பேசி அவரை விரட்டி அடித்திருக்கிறார்கள்.

ஆனால், என் கைவசம் படங்கள் இருந்ததால்.. கையில் காசில்லாமல் இருந்த எனக்கு, நடித்த படங்களில் வர வேண்டியப் பணம் வந்துவிட்டது. நான்கைந்து மாதங்கள் என் தொழிலில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன். எனவே 'திட்டமிட்டு ஏமாற்றப்பட்ட நான், என்ன செய்யவேண்டும்?' என்று யோசிக்க ஆரம்பித்தேன்.

**பழைய நினைவு கள்**

'இனி என்ன செய்ய வேண்டும்?' என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே பழைய நினைவுகள் மனத்திரையில் வந்து கொண்டேயிருந்தன. 'மின்னலாய் ஒரு மனிதர் வாழ்க்கையில் குறுக்கிட்டு என்னை மணந்து, என்னைத் துரத்தி என்னை இந்த நிலைக்குத் தள்ள முடியுமா?' என்பதை யோசித்தேன். விரக்தியின் விளிம்பில், ஒரு காதல் தோல்வியின் சலிப்பில், நானே தேடிக் கொண்ட இந்த முடிவுக்கு நான் கொடுக்கும் மிகப் பெரிய பரிசு இது என்று என்னை நானே நொந்து கொண்டேன்.

நான் காதல் வயப்பட்டு, வாழ்க்கை அமைத்துக் கொண்ட அந்த நம்பிக்கையான நாட்களைப் பற்றி சொல்லியே ஆகவேண்டும். அதற்குக் காரணமிருக்கிறது.

என் திருமண முறிவுக்குப் பிறகு சினிமாவிற்கு சம்பந்தமில்லாத ஒரு நண்பர் என்னிடம் கேட்டார்: "வித்யா! ஒரு சின்ன சந்தேகம். நீங்கள் ஒரு பாப்புலர் ஆர்ட்டிஸ்ட் உங்களுக்கு பல ரசிகர்கள். பல பெரிய கதாநாயகர்களோடு நடித்த அனுபவம் உங்களுக்கு உண்டு. ஆனால் உங்கள் கணவருக்கு அந்த அளவிற்கு புகழும், பணமும் இல்லை. அதனால்தானே அவரை விட்டுப் பிரிந்தீர்கள்?" என்றார்.

அவர் கேட்டதில் நியாயமிருந்தது. சினிமா நடிகை என்றால் நம் மக்கள் மனதில் பதிந்துவிட்ட இமேஜ் அது. அவரைப் போலவே வாசகர்களுக்கும் அந்தச் சந்தேகம் எழலாம்.

ஆனால் உண்மை அதுவல்ல. பணமும், புகழும் நான் சின்ன வயதிலேயே பார்த்துவிட்டவள். நான் ஏங்கியதெல்லாம் கௌரவமான குடும்ப வாழ்க்கை, அன்பான கணவன், அழகான குழந்தைகள்தான். அப்படி ஒரு வாழ்க்கை கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பில்தான் அந்த நடிகரோடு காதலில் இருந்தேன். "இவ என் வுட் பி" என்று அந்த நடிகரே என்னைப் பலருக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

அவருடைய மனைவி ஆகப்போகிறேன் என்கிற கனவில் இருந்தபோதுதான் 'அவர் வேறு ஒருவரைத் திருமணம் செய்துக்கொள்ளப் போகிறார்' என்கிற செய்தி, பேரிடியாகக் காதில் விழுந்தது. அந்தக் காதல், தோல்வியில் முடிந்தது. அந்தச் சமயத்தில் தான் ஜார்ஜ் என்னைச் சந்தித்தார்.



**சந்திப்பு**

'தீக்கனல்'ங்கிற மலையாளப் படத்தில் நான் நடிக்க வேண்டும் என்பதற்காக கால்ஷீட் கேட்க வந்தார். பிரபல மலையாள நடிகர் மதுதான் படத்தின் கதாநாயகன். "என்னுடைய பார்ட்னர் சவேரா ஓட்டலில் தங்கியிருக்கிறார். நீங்கள் அவரை அங்கு வந்து சந்திக்க முடியுமா?" என்று கேட்டார்.

"ஓட்டலுக்கெல்லாம் வந்து அவ யாரையும் பாக்கறதில்லே. ஒரே ஒரு தடவைதான் பாலசந்தர் சாரை அவர் ஆபீஸ்லதான் சந்திச்சிருக்கோம்" என்றார் என் அம்மா.

அதற்குப் பிறகு நடிகர் மதுவே என்னிடம் பேசினார். "ஓட்டலுக்கெல்லாம் நீங்க போகவேண்டாம். அவங்க பம்பாய் லேந்து வந்துருக்காங்க. அதனால அப்படிப் பேசிட்டாங்க. நாம எவ்வளவு கன்ஸர்வேடிவ்ன்னு அவங்களுக்குத் தெரியாது. நான் பேசிக்கிறேன். நல்ல காரெக்டர் உனக்கு. நீ இந்தப் படத்தை ஒத்துக்கோ" என்றார் மது.

அப்படிதான் ஜார்ஜ் எனக்கு அறிமுகம் ஆனார். அடுத்த மாதமே படப்பிடிப்பு ஆரம்பானது. என்னுடைய பழைய காதல் முறிந்து போனாலும் அந்த நடிகர் என்னுடன் ஃபோனில் பேசிக் கொண்டுதானிருந்தார். மறுபடியும் எங்களுக்குள் ஏதாவது சமரசம் ஏற்படுமா என்கிற முயற்சியில் அவர் இருந்தார்.

ஸ்டெர்லிங் ரோட்டில் ஒரு வீட்டில் தான் படப்பிடிப்பு. லட்சுமியின் முன்னாள் கணவர் மோகன்தான் எனக்கு ஜோடி. விதுபாலாவும் அதில் நடித்துக்கொண்டிருந்தார். படப்பிடிப்பு நடக்கும் போது அந்த நடிகரிடமிருந்து எனக்கு ஃபோன் வரும். இவர்தான் ஃபோனை எடுப்பார்.

**ஸ்ரீவித்யா**

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

## 04

"போ!- போயேன்... யாருடி வேண்டாம்னு உன் காலைக் கட்டிக்கிறா? போ.... போ..! எனக்கு ஒண்ணும் நஷ்டமில்லே... நாளைக்கே... எஸ்... நாளைக்கே நான் வேறொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்குவேன்... இந்தப் பத்து வருஷமா..." அதைச் சொல்லும்போது அவன் குரல் அழுதது- "இந்தப் பத்துவருஷமா ஏற்பட்ட நஷ்டத்தை எல்லாம் என்னால் ஈடுகட்ட முடியும்- யூ...யூ ஆர் தி லூஸர்- உனக்குத்தான் நஷ்டம்!" அவனது உதடுகளும் உடம்பும் நெஞ்சு எல்லாம் ஒரு சேரப் படபடத்தன.

கையிலொரு பாத்திரத்துடன் பாத்ரூம் வாசற்படியைத் தாண்டி ஓரடி எடுத்து வைத்த கோகிலா நின்று திரும்பிப் பார்த்தாள்: "ஓ...மிஸ்டர் அனந்தராமன்."

'இது கோகிலா அல்ல' என்று அவனுக்குத் தோன்றிற்று.

அவள் நிதானமாக ஒரு அன்னியரிடம் பேசுவது போன்ற தோரணையில் சொன்னாள்: "நீங்க எந்த லோகத்திலே வாழ்ந்துண்டிருக்கேள்? நீங்க சொன்ன மாதிரி நானும் சொல்ல முடியும் தெரியுமோ?- விரும்பினா செய்யவும் முடியும்- என்னைப் பெத்து வளர்த்தவா தடுத்தப்போ அவா பேச்சையெல்லாம் உங்களுக்காக மீறி வந்தேனே. அதைவிடப் பெரிய காரியமோ உங்க உறவை முறிச்சுண்டு போறது?" அவனை முகத்தில அறைந்தாற் போல் ஸ்பஷ்டமாகக் கூறிய பின்னும் கோபத்தோடு தன்னுள்ளேயே ஏதோ முனகியவாறு அவள் பாத்ரூமுக்குள் மறைந்தாள்.

அனந்தராமன் அப்படியே சிலையாய்ச் சமைந்திருந்தான். இது போன்ற சச்சரவுகள் எத்தனையோ முறை நடந்திருப்பினும் இந்த முறை இந்த நிலைமை புதிதாக ஏதோ விபரீதமான எல்லையைத் தொட்டுவிட்டது என்று அவனுக்குப் புரிந்தது.

'சீ! இவளிடம் பேச்சுக் கொடுத்தால் இவள் எந்த எல்லைக்கும் போவாள் என்று தெரிந்தும் இவளிடம் பேச்சுக் கொடுத்தது என் தப்புத்தான்' என்று தன்னைத் தானே நொந்து கொண்ட அவன் மனம் அவளது வார்த்தைகளின் உள் அர்த்தத்தை நம்ப மறுத்தது.

தனது சுபாவப்படி ஆபீசுக்குப் போகும் வழி நெடுக காலை நடந்த சம்பவம் பற்றி யோசித்துக் கொண்டிருந்துவிட்டு ஆபீஸ் அலுவல்களில் அதை முற்றாக மறந்தே விட்டான் அனந்தராமன்.

இன்று ஏனோ அதிகாலை நேரத்திலேயே 'அவன்' அனந்தராமன் வீட்டுக்கு வந்திருந்தான். இதுபோல் நேற்று மாலையும் அதற்குமுன் தினமும் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு வேளையில் அவன் அங்கு வந்து கொண்டுதானிருந்தான்.

அவன் வருவது தன்னைப் பார்ப்பதற்காக அல்ல என்பதால் ஆரம்பத்தில் அவனது வருகையை அதிகம் பொருட்படுத்தாமல் கோகிலாவோடு பேசிக் கொண்டிருக்கும் அவனை எதிர்கொள்ளவோ கடக்கவோ நேரிடுகையில் 'ஹலோ' என்ற தலையசைப்பிலோ ஒரு மௌனமான புன்னகையிலோ அவனது பிரசன்னத்தை அங்கீகாரம் செய்து விட்டுத் தன் காரியத்தைக் கவனித்துக் கொண்டிருப்பான் அனந்தராமன்.

'அவன்' கோகிலாவுக்குத் தூரத்து உறவுக்காரனோ, குடும்ப நண்பனோ, பள்ளித் தோழனோ-அல்லது இது எல்லாம் சேர்ந்த பாத்தியதை உள்ளவனோ ஆவான் என்ற அளவில் அவனைப் பற்றி அனந்தராமனுக்குத் தெரிந்திருந்தது.

> தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன்.
> அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை.
> பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.
> ஒரு காலத்தில் ஒய்வே இல்லாது வெகுஜன சஞ்சிகைகளிலும் எழுதிக் குவித்தார்.
> இப்போது அவர் எழுதுவதில்லை.
> எத்தனை கோடி தந்தாலும் கதை எழுத மாட்டேன் என்று சபதம்.
> அந்த மாபெரும் எழுத்தாளரது படைப்புக்களில் ஒன்றுதான் இது!
> உங்கள் வரவேற்பை நிச்சயம் பெறும்.

பத்து வகுப்புவரை அவன் கோகிலாவோடு ஒன்றாகப் படித்தது. பின்னர் மேல் படிப்பை முன்னிட்டு அவன் காசிக்கோ பம்பாய்க்கோ அத்தை வீட்டோடு போனது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அவன் ஒரு 'ஏர் பைலட்' ஆக மாறித் திரும்பி வந்தது. முப்பத்தைந்து வயதாகியும் தகுந்த பெண் கிடைக்காததால் இன்னும் கலியாணம் செய்து கொள்ள மறுத்துக் கொண்டிருப்பது போன்ற- தனக்கு ஈடுபாடில்லாத, சாரமற்ற- பல விஷயங்களை சதா நேரமும் அவனைப் பற்றிச் சளசளத்துக்கொண்டிருக்கும் கோகிலாவின் மூலமே அனந்தராமன் தெரிந்து கொள்ள நேர்ந்தது.

ஆரம்பத்தில், அனந்தராமனை மணந்து கொள்வதற்காகக் கோகிலா தனது பெற்றோர்களையும் விரோதித்துக் கொண்டாள் என்பதை அறிந்து அவள் மீது அவளது பெற்றோர் பாராட்டிய விரோதத்தை மாற்றி அவர்களுக்கு இடையே சுமுகமான ஓர் உறவை ஏற்படுத்த வேண்டுமெனும் நோக்கம் கொண்ட தூதுவனாகவே அவன் வந்து போய்க் கொண்டிருந்தான்.

உண்மையிலேயே கோகிலாவின் பெற்றோர் அவள் மீது பாராட்டிய துவேஷம் அவனுக்கு நகைப்புக்கிடமானதாய் இருந்தது.

'கோகிலா என்ன செஞ்சுட்டா தெரியுமோ? ஜாதி விட்டு ஜாதி ரிஜிஸ்டர் கல்யாணம் பண்ணிண்டு இந்த வம்சத்துப் பெருமையை எல்லாம் சீரழிச்சுட்டா!' என்று கோகிலாவைத் தேடிக்கொண்டு அவள் வீட்டுக்குச் சென்ற அவனிடம் கோகிலாவின் தாய் அங்கலாய்த்தபோது-ஏதோ போர்னியோ நாட்டுக் காட்டுமிராண்டியைப் போய் அவள் கல்யாணம் செய்து கொண்டு விட்டாளோ என்று ஐயம் கொள்ளும்படியாய் இருந்தது அவனுக்கு. கடைசியில் பார்த்தால் கோகிலா மணந்து கொண்டிருக்கும் அனந்தராமன், ஐயங்கார் இல்லையாம், ஐயராம் என்று அறிய நேர்ந்தபோது அவன் சிரித்திருக்கிறானே ஒரு சிரிப்பு!

ஒரு நாள் மாலை கோகிலாவுடன் முன் ஹாலில் உட்கார்ந்து கொஞ்சம் கூட நாகரிகம் தெரியாதவனாய்க் கூக்குரலிட்டுச் சிரித்தவாறு-ஓர் அந்நிய ஸ்திரீயிடம் அப்படிச் சிரிப்பதென்றால் அதற்கு ஒரு பாத்தியதையோ ஒரு சொந்தமோ இருக்க வேண்டும் அல்லவா?-இவளும் அதே மாதிரி அவனுடன் சேர்ந்து அந்த ஹாஸ்யத்தை இருவரும் பகிர்ந்து கொண்டிருக்கையில் முதன் முதலில் அவனைச் சந்தித்தான் அனந்தராமன். அதனாலேயே அந்த முதல் பார்வையிலேயே அவனைக் கட்டோடு பிடிக்கவில்லை அனந்தராமனுக்கு. அவனைத் தனக்குப் பிடிக்கவில்லை என்பதை அவளிடம் காட்டிக் கொள்ளாமல் அனந்தராமன் எவ்வளவுதான் மறைத்த போதிலும் அவன் வந்து போகும் ஒவ்வொரு சமயத்திலும் தன் கணவன் என்னமோ போல் ஆகிவிடுவதை அவளால் உணர முடிந்தது. அவளைப் பொறுத்தவரை தன் கணவன் அடிக்கடி இதுபோல் என்னமோ போல் ஆகிவிடுவது ஒரு புதிய அனுபவம் அல்ல என்பதால் உள்ளூரத் தன் தலைவிதியை நொந்துகொண்டு அதனைப் பொருட்படுத்தாதவள் போல இந்தப் பத்து வருஷ தாம்பத்திய வாழ்க்கையில் அவள் பயின்றுவிட்ட பொய்யான நடிப்பில் ஒரு புதிய கட்டத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.


கணவனின் உணர்ச்சிகளை அவள் மதிக்காதவள் என்பதல்ல; அவனது பலவீனத்திற்கு ஓர் அழுத்தம் தந்து, தனது வாழ்க்கையையே ஓர் அவமானமாக்கிக் கொள்ளக்கூடாதென்று விவேகத்தோடு அவனது போக்குக்கெல்லாம் வளைந்து கொடுத்தே அவள் வாழப்பயின்று விட்டாள்.

அனந்தராமனோடு அதே அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அவள், அனந்தராமனின் புகழ் வெளிச்சத்தில் மயங்கினாள். அவனுக்குத் தான் ஓர் 'இன்டலக்சுவல்' துணையாக இருக்க வேண்டும் என்று கனவு கண்டாள். இப்படிப்பட்ட நவீன கால அறிவுலகப் பிரதிநிதி ஒருவனுக்குத் தன்னை ஒரு நிவேதனமாக்கிக் கொள்ள நெடு நாட்களாய் ஓர் ஆசைத் தீயில் தன்னையே அவள் எரித்துக் கொண்டு தவித்தாள். தன் கைக்கு எட்டாத உயரத்தில் கனிந்து நிற்கும் அந்தக் கற்பனைக் கனி தன் கையிலே வந்து விழுமென்று ஒரு தபசியின் வைராக்கியத்தோடு கையேந்திக் காலமெல்லாம் காத்திருக்கவே அவள் சித்தமாயிருந்தாள். அந்த நம்பிக்கை மெய்யாகுமென்று அவள் கனவுகூடக் கண்டதில்லை. எனினும் அந்த நம்பிக்கையை அவள் தன்னுள் போற்றி வளர்த்துக் கொண்டிருந்தாள். சில சமயங்களில் அந்தப் பொய்யான சுகத்திலேயே வாழ்க்கையைப் போக்கிக் கொள்வது விவேகம் தானா?' என்று அவள் சலிப்பும் அடைந்ததுண்டு.

ஆனால் அந்த நம்பிக்கை மெய்யான பின்புதான் அது எவ்வளவு பெரிய பொய் என்று புரிந்து கொண்டாள். எனினும் அது பொய்யாகக் கூடாது என்று அவள் வெகுவாகப் பாடுபட்டாள். அவள் சரணடையத்தான் ஆசைப்பட்டாளே தவிர, தோல்வியுறத் தயாராக இல்லை. அழகான ஒரு மலரைப் போல் அவன் பாதங்களில் தன்னைச் சமர்ப்பித்துக் கொள்ளவே அவள் சித்தமானாள்... எனினும் அவன் காலில் சற்றும் நளினமற்று மிதிபடும்போது தன்னை அறியாமலேயே அவள் ஒரு முள்ளாகிப் போனாள்.

அவள்தான் அவனது போக்குக்கெல்லாம் எவ்வளவு தூரம் வளைந்து கொடுத்தாள்! அவனுக்காகத் தனது பெற்றோரைத் துறக்கும்போதோ, அவனுக்காகத் தனது வேலையை ராஜிநாமா செய்தபோதோ, அவனுக்காகத் தனது இரட்டைப் பின்னலைப் பின்னாமலேயே முடிந்து கொண்ட போதோ, தன்னை அந்த மாடி வீட்டின் ஒற்றை அறையில் அடைத்துக் கொண்டு வெளிறிச் சாம்பிய போதோ-அவை யாவும் அவனுக்காக என்ற உண்மையை எண்ணிப் பார்க்கக்கூட அவள் அஞ்சிக் கிடந்ததுண்டு. எனினும் கொஞ்ச காலத்தில் அவள் அந்த உண்மையை விழுங்கித் தீர்க்க வேண்டி இருந்தது.

(கோகிலா.... தொடரும்)



ஜெயகாந்தன்

---

# அரங்கம் அந்தரங்கம்

> தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.
>
> 13

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> -கண்ணதாசன்-

வரதராஜன் மாஜிஸ்திரேட்டைப் பார்த்து சொன்னார்.

"யுவர் ஆனர்! ஐந்து மணிக்கு ரிமாண்டில் வைக்கப்பட்டவர்கள், ஏழு மணிக்குக் குடிசையைக் கொளுத்தி இருக்கிறார்கள் என்றால், பொலிஸ்காரர்களே கூட்டிக் கொண்டு போய் கொளுத்தச் சொன்னால் ஒழிய, இது நடந்திருக்க முடியாது. இல்லை என்றால், ஐந்து மணிக்கு லாக்கப்பில் இருந்தவர்கள் ஏழு மணிக்கு எப்படிக் குடிசையருகே வந்திருக்க முடியும்?"

அந்த வழக்கிலும் குற்றவாளிகள் விடுதலையானார்கள்.

எதிர்க்கட்சிக்கு வரதராஜன் ஆஜராகிறார் என்றால், பொலிஸ்காரர்களே நடுங்குவார்கள்.

பெரும்பாலும் பொய் வழக்கே போட்டுப் பழக்கப்பட்டுப்போன பொலிஸ் இலாகா, உண்மை வழக்கையும் கோட்டை விடுகிறதென்றால், எல்லா அதிகாரிகளும், ஆறு நாட்களுக்கு ஒருமுறை மாற்றப்படுவார்களே!

அதனால் பொலிஸார் ஒரு வேலை செய்வதுண்டு.

எதிரிகள் வரதராஜனைப் பிடித்துக் கொள்கிறார்கள். என்றால், பொலிஸார் இரகசியமாக அவரது ஜூனியர் ரங்கராஜனைப் பிடித்துக் கொள்வார்கள்.

ரங்கராஜன் சொல்வதைக் கேட்டுத்தானே வரதராஜன் வாதாடுகிறார்?

முக்கியமான வழக்குகளில் ரங்கராஜனைப் பிடிப்பதன் மூலம், பொலிஸார் ஜெயித்து விடுவார்கள்.

ரங்கராஜனிடம் வரதராஜனுக்குக் கொஞ்சம் பயம் உண்டு. காரணம் அவரது பலவீனமே!

'ரங்கராஜனின் மனைவி ரங்கநாயகிக்கும், வக்கீல் வரதராஜனுக்கும் தொடர்பு உண்டு' என்பது, லோ சேம்பருக்கு நன்றாகத் தெரிந்த விஷயம்.

"அத வெறும் ஆத்மார்த்தத் தொடர்புதான் என்றும் வேறொன்றும் இல்லை" என்றும் வரதராஜன் கூறுவார்.

அவர் குடிக்க ஆரம்பித்து விட்டாலே அதைத்தான் உளறுவார்.

ரங்கநாயகியை அவர் தனக்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளவில்லை; சில வழக்குகளில் ஜெயிப்பதற்கும் பயன்படுத்திக் கொண்டார்.

இல்லையென்றால் ஐநூறு ரூபாய் வாங்கும் ஒரு ஜூனியரின் மனைவி, ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு நகை போட முடியுமா?

ரங்கநாயகியோடு வரதராஜனுக்கு உள்ள தொடர்பு. வரதராஜனின் மனைவி வனஜாட்சிக்கும் நன்றாகவே தெரிந்திருந்தது.

இரண்டு வீட்டுக்கும் காய்கறி கொடுப்பவள் ஒரே கூடைக்காரியாக இருந்ததால், செய்திகள் உடனுக்குடன் தாமதமில்லாமல் கிடைத்துக் கொண்டிருந்தன.

ரங்கநாயகி சாகஸக்காரி-வனஜாட்சி பொல்லாதவள்.

அவள் ஒரு நாள் ரங்கராஜனையே கூப்பிட்டு, "உன் மனைவியை மரியாதையாக இருந்து கொள்ளச் சொல்!" என்று கூறி விட்டாள்.

ரங்கராஜன், 'என்ன' தன் கணவனிடமே, "இதோ பாருங்கள்! இனியும் நீங்கள் இப்படி நடந்தால் நான் ஊரை நாறடித்து விடுவேன்! அதுதான் கண்ட கழிசடைகளோடெல்லாம் ராத்திரிப் பகலாகக் கூத்தடிக்கிறீர்களே. இது வேறு என்ன வேலை?" என்றுகேட்டு விட்டாள்.

ரங்கராஜன் தன் மனைவியினால் ஏற்பட்ட நிம்மதிக்குறைவுதான் தான் அடிக்கடி குடிப்பதற்குக் காரணம், என்று அடிக்கடி சொல்லுவார்.

பெரிய பதவி வகிப்பவர்கள், பெரிய வீடு கட்டிக் கொள்கிறார்கள். அந்த வீடுகளுக்குள் நுழைந்து பார்க்கும் ஏழை எளியவர்கள், 'இதல்லவா வீடு! இதல்லவா வாழ்க்கை!' என்று கருதுவார்கள்.

அந்த வீடுகளுக்குள் நுழைந்து பார்ப்பவர்கள், அவர்கள் வாழ்க்கையினுள்ளும் நுழைந்து பார்த்தால், "சீ! இதுவா வாழ்க்கை? மீன் மார்க்கெட் தேவலை போலிருக்கிறதே!" என்று கருதுவார்கள்.

கிராமங்களில் சில பிரபலமான பழமொழிகள் உண்டு.

'ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனாம்' என்பார்கள்.

கட்டடம் பெரிதாக இருப்பதால், காட்சிகள் மறைந்து போகின்றன.



மனைவியின் கையை ஒருவன் தொட்டுவிட்டான் என்பதற்காக, அவனைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்ட ஏழை உண்டு.

அண்ணியின் மேல் மோதிக் கொண்டு போனவனை, அலங்கோலப் படுத்திய கொழுந்தன் உண்டு.

ஆனால் வசதிகள் அதிகமான இடத்தில், காமமே ஒரு வகை நாகரிகம்.

ஆள் மாற்றி ஆள் பிடிக்கும் ஆனந்தக் கூத்துக்கு, பல மாளிகைப் பெண்களே உதாரணம்!

இரண்டு வகையான எல்லைகளையும் அங்கே காணலாம்.

ஒன்று, பிற ஆடவர்களின் காற்றுக் கூடப் படாத உத்தமிகள்; மற்றொன்று, எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்தக் காற்றையும் சுவாசிக்கும் சரஸகலா ராணிகள்!

முதல் வகை, வனஜாட்சி; மறுவகை, ரங்கநாயகி.

பொலிஸ் அதிகாரி கமலநாதனால் கமலா ஒட்டலில் பிடிக்கப்பட்ட பெண்களில் ஒருத்தி, ரங்கநாயகிக்குத் தூர பந்து, அவள் பெயர் லீலா.

கோர்ட்டிலே நிறுத்தப்பட்டு ஜாமீனிலே விடுதலையானதும், லீலா ரங்கநாயகியிடம் வந்து அழுதாள்.

ரங்கநாயகி உடனே வரதராஜனுக்கு டெலி;போன் செய்து உடனே புறப்பட்டு வரச் சொன்னாள்.

வரதராஜன் கோர்ட்டுக்குத் தாமதமாகப் போனாலும் போவார்; ரங்கநாயகி கூப்பிட்டால் அடுத்த கணமே பிரத்தியட்சமாவார்!

"லீலாவை எப்படியாவது நீங்கள்தான் காப்பாற்றியாக வேண்டும்!" என்றாள் ரங்கநாயகி.

அவர் அப்போதுதான் லீலாவைப் பார்த்தார். அதுவரை அவர் பாராத உருப்படிகளில் அதுவும் ஒன்று.

"இந்த வழக்கில் நான் ஆஜர் ஆக முடியாதே!" என்று இழுத்தார் வரதராஜன்.

"ஏன்?" என்று கேட்டாள் ரங்கநாயகி.

(அந்தரங்கம் வரும்)

கவியரசு கண்ணதாசன்



படிப்பகம்

www.padippakam.com

# சுபாவம்

ஜன்னலை மெதுவாகத் திறந்து வெளியே எட்டிப் பார்க்கிறான் சுரேஸ். சில்லென்ற குளிர் காற்று அவன் முகத்தில் ஊசியாய் குத்தியது. இரவு முழுவதும் கொட்டிய பனி எங்கும் வெண்மையாய், காட்சியளித்தது.

'சேரனை சந்திக்கப்போகிறேன்' என்ற உணர்வு அவனுள் ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்த, சேரனின் விலாசத்தை ஒருமுறை சரிபார்த்துவிட்டு வெளியே வந்தவன், மூடியிருந்த பனியை சிரமப்பட்டு அகற்றிவிட்டு காரை எடுக்கிறான். இரவு கொட்டிய பனியால் வீதியில் வாகனங்கள் மெதுவாகச் சென்று கொண்டிருக்கின்றன.

'சேரனைப்பார்த்து எவ்வளவு நாளாச்சுது. ஊரில எப்பிடி எல்லாம் சந்தோசமா இருந்தனாங்கள். இப்ப கனடாவில் ஆளுக்கொரு பக்கமா, ஒரே நாட்டில இருந்து கொண்டே சந்திக்க முடியாத இயந்திர வாழ்க்கை. பாவம் சேரன், சுபாவோட கதைக்க எவ்வளவு கஷ்டப்பட்டவன். இப்ப எப்படியோ கனடா வந்து சுபாவையும், பிள்ளையையும் கூப்பிட்டுட்டான். அவன்ர பிள்ளையும் இப்ப வளர்ந்திருக்கும். ரெண்டு வருசத்துக்கு முந்தி ஒருக்கா ஃபோன் கதைக்கைக்க சுபாவும், பிள்ளையும் வந்திட்டினம் எண்டு சொன்னவன். அதுக்குப்பிறகு தொடர்பே இல்லாமப்போச்சுது...' கடந்த கால நிகழ்வுகளை அசைபோட்டுக்கொண்டிருந்த சுரேசுக்கு சேரனின் குழந்தையின் ஞாபகம் வரவே அருகிலுள்ள கடையில் காரை நிறுத்தி கையில் கிடைத்த ஒரு பிஸ்கட் பெட்டியை வாங்கிக்கொண்டான். கார் இப்போது ரொறன்ரோ நகர வீதியைக் கடந்து நெடுஞ்சாலையில் பிரவேசிக்கிறது.

'மொன்றியலில் இருக்கைக்க சேரன் எத்தினதரம் கூப்பிட்டவன் இங்க வாடா எண்டு...., நான்தான் கேக்கையில்ல. இப்ப நான் இங்க வந்திட்டன் எண்டா எவ்வளவு சந்தோசப்படுவான். எப்பிடியோ கஷ்டப்பட்டு அவன்ர விலாசத்தைக் கண்டு பிடிச்சாச்சு. ஆனாலும் அவனோட கதைக்க ஏலுதில்லை. எப்ப ஃபோன் எடுத்தாலும் ஆள் இல்லை. சுபாவும் இப்ப முந்திமாதிரி கலகலப்பா கதைக்கிறாள் இல்லை. ஏனெண்டு தெரியல்லை....' மனதில் பல கேள்விகள் தோன்ற நெடுஞ்சாலையை விட்டு வெளியேறி சிலநிமிட பயணத்தின் பின் சிரமப்பட்டு சேரனின் வீட்டைக்கண்டு பிடித்து காரை பாக்கிங்கில் நிறுத்திவிட்டு இறங்கிச்சென்று வாசற்கதவை மெதுவாகத் தட்டுகிறான்.

உள்ளே குழந்தை ஒன்று எதையோ கேட்டு அழுதுகொண்டிருந்தது. சிலவினாடிகளில் கதவு திறக்கிறது. அங்கே அடையாளமே மாறிவிட்ட சுபா

"வாங்க சுரேஸ் அண்ணா... எப்பிடி இருக்கிறீங்க...?" அவனை வரவேற்றபடியே ஹோலில் தாறுமாறாய் கிடந்த பொருட்களை கையிலெடுக்கிறாள்.

அவள் பின்னால் பயத்தோடு ஒட்டியபடி அவள் குழந்தை. சுரேஸ் சிரித்தபடியே உள்ளே வந்தவன் கையிலிருந்த பிஸ்கட் பெட்டியை குழந்தையிடம் கொடுத்துவிட்டு சோபாவில் அமர்கிறான்.

எதிரே சுவரில் சேரனும், சுபாவும் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

"பிறகு நீங்கள் எல்லாம் எப்பிடியிருக்கிறீங்க...? என்ன சேரன் ஒழுங்கா சாப்பாடு தாறதில்லைப்போல கிடக்கு...?" சுபாவின் தோற்றத்தைப் பார்த்து பகிடியாய் கேட்டவன் சுபாவின் முகபாவத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் கவனித்துவிட்டு, "என்ன சுபா சேரன் இன்னும் வரயில்லையே...? ஆளையே பிடிபடுகுதில்லை...." என்று தன் பேச்சை மாற்றினான்.

"கொஞ்சம் இருங்க அண்ணா ரீ போடுறன்...." என்றவாறே சுபா உள்ளே போகமுயல, "என்ன சுபா ஒரு மாதிரி இருக்கிறீர்... சேரனுக்கு ஏதாவது...?" சுரேஸ் கலவரமடைந்தவனாக அவளை நோக்கினான்.

கண்களில் கண்ணீர் எட்டிப்பார்க்க, "அவருக்கு ஒண்டுமில்லை.... ஆனால் அவர் இப்ப பொலிசில..." குரல் தழுதழுத்தாள் சுபா.

"என்ன சுபா சொல்லுறீர்...? அப்பிடி என்ன பிரச்சனை....? ஏதும் அடிதடியோ...?" சுரேஸ் பதற்றமடைந்தான்.

"அப்பிடி எல்லாம் ஒண்டுமில்லை... எங்களுக்குள்ள ஒரு சின்னப்பிரச்சனை... நான்தான் அவசரப்பட்டு பொலிசுக்கு அடிச்சுச்சொல்லிப்போட்டன்." கண்களில் கண்ணீரோடு சொன்னாள் சுபா.

சுரேஸ் அதிர்ச்சியில் பதறிப்போனான். தன் நண்பனை சந்திக்க ஆசையோடு வந்தவன் இப்பிடி ஒரு செய்தியை எதிர்பார்க்கவேயில்லை. சுபாமீது கோபமாக வந்தாலும் அவளைப்பார்க்க பரிதாபமாக இருந்தது.

"என்ன சுபா நீருமா இப்பிடி மாறிட்டீர்...? குடும்பத்துக்குள்ள பிரச்சனை வாறது வழமைதானே? அதெல்லாம் சமாளிச்சு விட்டுக்குடுத்து வாழுறதுதான் வாழ்க்கை. அதவிட்டுட்டு அவசரப்பட்டு பொலிசுக்கு சொல்லுறதும். பிறகு கவலைப்படுறது... ஏன் சுபா ஊரில சேரன ஆமி பிடிச்சுக்கொண்டு போனதுக்கே மூண்டு நாள் சாப்பிடாமக் கிடந்தனீர். இப்ப மட்டும் எப்பிடி...?" சுரேஸ் தன் மனதிலுள்ள வேதனையை வார்த்தைகளால் கொட்டினான்.

"சுரேஸ் அண்ணா... ஏற்கனவே செத்துக்கொண்டிருக்கிற என்னை நீங்க வேறு சாகடிக்காதையுங்கோ.... அண்டைக்கு அவசரப்பட்டு அப்பிடிச்செய்திட்டன்... ஆனால் அத நினைச்சு ஒவ்வொரு நாளும் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறன்... நானும், பிள்ளையும் சாப்பிட்டு ரெண்டு நாளாகுது... இப்ப எனக்கு முதல்ல அவரப் பார்க்க வேணும்.



நெடுந்தீவு குகன்-கனடா

ஆனா எப்பிடி அவற்ர முகத்தில முழிக்கிறது எண்டுதான்...." வேதனையில் அழுதாள் சுபா. அவள் கண்களில் தொடராகக் கண்ணீர்த்துளிகள்.

சுரேசுக்கு அவளை எப்படி சமாதானப் படுத்துவது என்றே புரியவில்லை. சுபாவின் குழந்தையைப் பார்க்க வேறு பாவமாக இருந்தது. கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தவன் ஏதோ யோசித்தவனாக "சுபா... நான் வெளிய போய் ஏதாவது சாப்பாடு எடுத்துக் கொண்டுவாறன். நீரும், பிள்ளையும் வெளிக்கிட்டு நில்லும். சேரன சந்திக்கப்போவம்...." என்றபடியே சோபாவை விட்டு எழுந்தவன்,

"இல்லை சுரேஸ் அண்ணா...." என்ற சுபாவின் குரலை காதில் வாங்காமல் இந்த புலம் பெயர்ந்த மண் ஏன் எம்மவர்களை இப்படியெல்லாம் மாற்றிவிட்டது...? என்ற கேள்வி மனதில் எதிரொலிக்க வேதனையோடு வெளியே வருகிறான். பனி தொடர்ந்து கொட்டிக்கொண்டேயிருந்தது.

# பிறந்த நாள்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அண்மித்து விட்டது...

தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு அலாரம் அடிப்பதைத் தொடர்ந்து அம்மா குரல் கொடுப்பாள். "வதனா ரியூசனுக்கு நேரமாச்சு... இன்னும் தூக்கமா... எழும்பு..."

இன்று அப்படியல்ல நான்கு மணிக்கே அலாரம் அடித்தது. நான் விழித்துக் கொண்டாலும் அம்மா என்னை உசாரப்படுத்தவில்லை.

இன்று எனது பத்தாவது பிறந்த நாள்.

வழமையாக எனது பிறந்த நாட்களின் போது அம்மா என்னை தூக்கத்திலேயே அணைத்து முத்தமிடுவாள்.

'என்னுடைய ஆசை கிச்சிட்டான்... என்னுடைய தங்கம்.. என்னுடைய குஞ்சு...' இப்படியெல்லாம் அன்பு வார்த்தைகளைக் கொட்டுவாள்.

மூத்தக்கா, இளையக்கா, அப்பா எவருமே என்னை இன்று கொஞ்சி அணைக்கவில்லை... எனக்காக 'பர்த்டே கேக்' செய்யவில்லை.

எனது பிறந்த நாள் அவளுக்கு நினைவில்லை.

மங்கள விளக்குகளை ஏந்தி தோழிகள் சூழ வர அக்கா அலங்கார தேவதையாக வருகிறாள்...

எனது தோழிகள் என்னை விளையாட அழைக்க நான் அவர்களுடன் சேர்ந்து என்னை மறந்து ஓடுகிறேன். நீளப் பாவாடை இடற கால் தடுக்கி விழுந்த எனக்கு அப்பா முதுகில் ஒன்று வைத்து எச்சரித்து விட்டுப் போகிறார்.

அப்பாவுக்கு எனது பிறந்த நாள் நினைவில்லை.

ஆரத்தி... மதியபோசனம்... அன்பளிப்பு... வீடியோ....

மகிழ்வுடன் எல்லோருடனும் நின்று போஸ் கொடுக்கும் அம்மாவுக்கும் எனது பிறந்த நாள் நினைவில்லை.

நெரிசலிலிருந்து விடுபட்டு எனது கட்டிலில் சென்று விழுகின்றேன்.

சாம்பிராணி, 'எயார் பிரஷ்னர்', பழவகை வாசனைகளுக்கு மத்தியில் அந்த கேக் வாசனை!

ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் 'கேக்' தட்டுக்கள் பல.



யாருக்கும் எனது பிறந்தநாள் நினைவில்லை!

எல்லோருடைய கவனமும் மூத்தக்காவின் பூப்புனித நீராட்டு விழாவிலேயே ஒருமுகப்பட்டு இருந்தது.

அவளுக்காக, சேலைகள்... சட்டைகள்... அலங்காரப் பொருட்கள்... நகைகள்... இன்னும் பலப் பல.

எனக்கும் இளையக்காவுக்கும் ஒவ்வொரு சட்டை மட்டும். நிலைக் கண்ணாடியில் முன்பாக நின்று எனது சட்டையை எனக்கு முன்பாக தூக்கிப்பிடித்துப் பார்த்தேன்.

சின்னதான பூக்களிடப்பட்ட.... வண்ண வண்ண சட்டை.... ஆனால் இது எனது பிறந்த நாள் பரிசு அல்ல.

ஒவ்வொரு அளவில் கேக்துண்டுகளை வெட்டி.. ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி... பத்து மெழுகுதிரிகளை நாட்டுகிறேன்.

இளையக்கா ஓடிவந்த காலடி ஒலி கேட்டு கட்டிலுக்கு கீழ் ஒளிந்து கொள்கின்றேன்.

அவள் நெருங்கி வந்து எனது ஏற்பாடுகளைப் பார்க்கிறாள். யாருக்கு பிறந்த நாள் என்று கணக்குப் போடுகிறாள்.

இன்று வதனாவின் 'பர்த்டே' உரத்து கூறியபடி ஓடுகிறாள்.

பொழுது சாய்ந்து விட்டநேரம்... வைபவம் முடிந்து எல்லோரும் போய் விடுகிறார்கள். பக்கத்து வீட்டு அன்ரி, அங்கிள்,

## திருமலை வீ.என். சந்திரகாந்தி

எனது றோஸ் நிறக் கன்னத்தில் கண்ணீர் வடிந்து உருளுவது நிலைக் கண்ணாடியில் தெரிகிறது.

எனது கவலை மேலும் அதிகரிக்க கண்ணீரை அடக்க முடியாமல் போகிறது.

பக்கத்து வீட்டு அன்ரி, மாமி, பெரியம்மா இன்னும் பலர் அக்காவுக்கு பால் அறுகு வைத்து நீராட்டுகிறார்கள்.

தண்ணீர் தொட்டியில் வண்ண, வண்ண மலர்களுக்கு மத்தியில் அக்காவின் முகம் அழகாக ஜொலிக்கிறது. 'வீடியோ' வெளிச்சம் பளிச்சிடுகிறது. புகைப்படக்காரர் ஓடி ஓடி படம் பிடிக்க அக்கா அன்புடன் என்னைப் பார்த்து சிரிக்கிறாள்.

அண்ணா, அக்கா மாத்திரம் நிற்கிறார்கள். களையுடன் அப்பா 'ஈசி சேரில்' சாய்ந்திருக்க.. அம்மா குட்டி ஆரவாரம் ஒன்று செய்து எனது பிறந்த நாளை அறிவிக்க.... நானே தயார் செய்த 'பர்த்டே கேக்' முக்கிய இடம் பெற... வீடியோ வெளிச்சத்தில் நான் மெழுகுவர்த்தி கொழுத்தி... கேக் வெட்ட... அக்கா 'ஹப்பி பர்த்டே' பாட... அம்மா என்னை வாரி அணைத்து..." 'என்னுடைய ஆசை கிச்சிட்டான்.... என்னுடைய தங்கம்... என்னுடைய குஞ்சு..." என்று கூறி ஆர அணைத்து கொஞ்சுகிறாள். தூக்கம் என் கண்களை உறுத்துகிறது.

இளையக்காவின் சாமத்திய வீடு என் பிறந்தநாளன்று வரக்கூடாது!




சுண்டெலி பூனையைப் பார்த்துச் சிரித்தால், அதற்குப் பக்கத்திலேயே ஒரு வளை இருக்கிறது என்று பொருள்.

-நைஜீரியா.

முட்டை வேண்டுபவன், கோழிகளின் சலசலப்பைப் பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும்.

-பாரசீகப் பொன்மொழி

எஜமானனின் தயவு வேண்டுமானால், அவனுடைய நாய்களுக்கு உணவு வையுங்கள்.

-பின்லாந்து

திமிங்கிலங்கள் சண்டையிட்டுக் கொள்ளும்பொழுது சிறிய மீன்கள் தின்னப்படுகின்றன.

-கோரியா

நீர் அமைதியாக இருப்பதனால் முதலைகளே இல்லையென்று எண்ணி விடாதீர்கள்.

-பல்கேரியா

நடக்காதவன் காலில் சிலந்தி கூடு கட்டும்.

-எகிப்து.

# ஒரு மனிதரின் இரவுகள்

வன்னி மழையில் நனைந்தபடி அந்த வண்டில் வாகனம் வந்துகொண்டிருந்தது. துன்பங்களின் கோரச்சொண்டுகள் கொத்திக் கொத்தியே கிழிபட்டிருந்தது மனசு. காலங்களின் கைகளால் கட்டுப்படுத்த முடியாத பயணமது.

பாதை எங்கும் பறந்து திரிந்தன மனிதப் பறவைகள். கானகம் கடந்து கால் அடிகள் மறந்து மண்காந்த ஈர்ப்புவிசை தூசாய்ப் போக பழக்கமில்லாத ஒரு தரையில் கரை கிடைத்தது.

ஊர் தெரியாத பெயரோடும் உதவியற்ற மௌனத்தோடும் ஒரு வாழ்க்கை இங்கே ஆரம்பமானது.

அந்த மனிதரின் இதயத்துள் வாழ்வு புதுப்போராட்டம் நடத்திக் கொண்டிருக்க வழக்கமில்லாமலே வந்துபோனது வறுமைத் தோழன்.

சலனங்களைப்போலவே வாழ்வு துயரத்தில் மிதக்கும்போது வயது ஒரு கோணத்தில் இருந்து நோயாடை போட்டு உடல்கோண வைக்க அவர் எண்ணக் கனவுகளுக்குள்ளும் வன்னி நிலமே வந்துவந்து போனது.

அந்த மனசை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அது சப்தமிட்டு பேசத்தொடங்கியது.

ஓ! அவசரப்பட்ட அமுக்கரணமே! ஏன் சமுத்திர ஆழிக்குள் எனைக் கொண்டு தள்ளினாய்? புலம் பெயர்ந்த புண்ணான நெஞ்சத்தை வசைச் சுத்தியலால் ஏன் வந்து தாக்குகிறாய் நியாயமாய் நடந்த இனிமையின் தோட்டத்தையும், கனி தரும் மரங்களையும் ஏன் தொட்டழித்து சாய்க்க முனைகிறாய்? நோயின் மாத்திரையா நான் பெற்ற செல்வம். ஏ! கனத்துப்போன நெஞ்சே யுத்தப்பிரதேசத்தில் ஊரடங்குக்குள்ளே கிடைத்துவந்த சந்தோஷமெல்லாம் குஷியான இடங்களில் ஏன் தொலைந்து போயின?

ஓ! நாகரிக வானமே, நாடற்ற கடலே, அற்பச் சிறகுவிரித்துப் பறக்கின்ற வண்ணத்துப் பூச்சியை தலைமீது வைத்து குழந்தைத்தனமாய் விளையாட்டுக் காட்டிய தலையை ஏன் ஞாபகப்பூகோளத்திலிருந்து தூரத்திலாக்கி துயரத்தில் ஆழ்த்தினாய்?

வெப்பக்காலத்து இரவுகளை ராகம் பிழைத்து குயிலொன்று கூவுவதாய் சொல்ல வைத்து சாமத்து நேரத்தில் வேடிக்கை கோலத்தை ஏன் காண்பிக்கவைத்தாய்?

மனசின் சப்தம் எனக்குள் கேட்டுவிட்ட பிறகு அநாதையானது எங்கள் இரவுகள்.



அந்த மனிதக் குழந்தை அறுபது வயதைத் தாண்டிவிட்டாலும் காலம் இங்கே கைக்குழந்தை வேடம் கொடுத்து ஆடச் சொன்னால் எம் குழந்தைக்கு எப்படித் தூக்கம் வரும்?

ஒருநாள் அல்ல பல இரவுகள் சோகம் எம்மைச் சுற்றிவர நகம்வெட்டி பௌடர் அப்பி தேய்ந்த பல்களிடை கவனித்து முகம் துலக்கி கண்ணாய்க் காத்த எங்கள் குழந்தைக்கு மூக்குச் சுவாசத்தை ஒரு ஓரத்தால் அனுப்பிக்கொண்டு ஓரடிக் குழாயே உணவுக் குடலாய் உயிர் வாழச் செய்தது.

என்ன செய்ய துயரத்தைத் தாங்கி, கண்கள் கசக்கி வாழ வேண்டிய பக்குவம் ஒன்றை பெற்றுக்கொண்டபோது குழந்தையின் கோமா நிலை மாறி சிந்திக்கத் தெரியாமல் திண்டாடும் வார்த்தைகளோடு எழிலின் புன்சிரிப்பு அடிக்கடி உதயமாகும்போது மௌனம் கலைந்து மனசுக்குள்ளே பெருநாளாகும் எங்களுக்கு.

ஊரிலே இருக்கும் போதும் இடம்பெயர்ந்து வாழும்போதும் நல்ல மனிதனாய் எல்லார் மனத்துள்ளும் 'கனி' யாய் வாழ்ந்து நல்ல குணங்களை விவேகமாய்ப் புகுத்தி குழந்தையின் உள்ளம் அன்று குதூகலம் பெறுமே அதுதான் என்றும் வசந்தகாலம்- வாழ்வே என்றும் மலர்ந்த காலம்.

ஏ! தூரத்து நிலவே! உன்னை நான் துன்புறுத்த நினைக்கவில்லை. நீ எங்களின் சின்னக் கிராமத்தில் அன்று கம்பீரமாய் சுற்றிச் சுற்றி திரிந்தபோது எங்கள் குழந்தையின் அழகையும், அதன் மனசையும் அறிந்து வைத்திருந்த உன்னிடம் இன்று எங்களிடம் எம் மனசுக்குள் ஏற்பட்டிருக்கும் இருட்டை மட்டுமேன் வெளிச்சமாக்க முடியவில்லை?

ஆம் வெளிச்சம் என்பதோ வெளியே இல்லை என்பது எனக்குப் புரிகிறது. இருட்டின் நேரத்தில் எல்லோருமே குருடர்கள் தானே! ஒவ்வோர் மனசுக்குள்ளும் ஒவ்வொரு இருட்டு.

என்னதான் சொன்னாலும் எனக்குள் இருக்கும் பல இரவுகளை மறக்க முடியவில்லை. அழுகையின் ஜாலக் கண்ணீர் எங்களுக்குள் ஒரு விதம்தான். ஒரு கண்ணீர் துளிக்குள் சிறுமையாகிப்போகும் இந்தப் பிரபஞ்சப் பூமியை போற்றிப்பாடி புகழேணி வைப்பது போலி என்பதே என் கருத்து.

இன்றைக்கு கிடைக்காமல் போகும் வாழ்வு நாளை கிடைக்கலாம்.

## உவைஸ்கனி

...ம் நீண்ட பெருமூச்சு எம் குழந்தைக்குக் கேட்க நியாயமில்லைத்தான். அதன் நித்தியத் தூக்கத்தை நாங்கள் "தாருல் பனாஹிலிருந்து தாருல் பகா" அளவிற்கு மாற்றிக் கொண்டதை இத்தால் நினைக்கும்போது இதை கவலையுள்ள கதையாகவே எழுத வேண்டியுள்ளது.

ஆம் எங்கள் குழந்தை வேறு யாருமல்ல என் தந்தைதான். தூங்கும் மண்மேட்டில் இன்று சில செடிகள் முளைத்துள்ளன. ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு இருட்டாய் வந்து போகிறது வாழ்க்கை. நிலாக்கால நேரத்தையே இன்று தேடிக்கொண்டிருக்கின்றேன்.


படிப்பகம்

# அஞ்சத்தான் வேண்டும்

இலக்கிய நயம்

தருவது ரசிகன்



தளபதி விதுஷனுக்கு
தண்டனை!

உப தளபதியாக
பதவி இறக்கம்!

காதலித்த பெண்ணை
ஏமாற்ற நினைத்தான்!

கரும்பு என்று
சுவைத்துவிட்டு
துரும்பாக தூக்கியெறிய
விரும்பி நிற்கலாமா?

தங்கம் என்று
தழுவியவன்-அவளுக்கே
பங்கம் நினைக்கலாமா?

முத்தென்று கூறி
முத்தத்தில் அமுது குடித்தவன்
சொத்தையென்று அவளை
தூரவிலக்க எண்ணலாமா?

நூலிடை என்று அதனை
விரலிடை பிடித்தவன்,
படித்து முடிந்ததென்று அந்த
நூலினை தூக்கியெறியலாமா?

கனிகளில் தாவி
அணிலென கிடந்தவன்
சனியென அவளைத்தூற்ற
துணிவது முறையாமோ?

மடவாழை என்று
கால்களை வருடி வியந்தவன்
முடமாக்க நினைக்கலாமோ
அவள் வாழ்வை?

புல்தரைமீது அந்த
பூவினை நுகர்ந்தவன்
புல் என அவளை
புடுங்கி வீசிட நினைக்கலாமோ?

காந்தர்வ மணம் என்று
களவாக அவளை அளந்தவன்
பந்தமே இல்லையென்று
வெட்டிவிட விரும்பலாமோ?

முறை தவறிய பின்னர்
தளபதி பதவி முறையோ?

தளபதி
உப தளபதியானான்!

"மன்னா!
ஒரு விண்ணப்பம்"
என்றார் இரகசியமாக அமைச்சர்.

"கூறுங்கள்
அமைச்சரே!" என்று
செவியைக் கொடுத்தார்!

"உயர்ந்த பதவியை
துஷ்பிரயோகம் செய்துள்ளார்!"

"ஆம்!"

"நம்பிக்கைக்கு
துரோகம் இழைத்துள்ளார்!"

"ஆம்! ஆம்!"

"நம்பிய பெண்ணை
நாடாற்றில் தள்ள நினைத்தார்!"

"ஆம்! ஆம்! ஆம்!"

"மொத்தத்தில்
குணம் கெட்டுப்போயிருக்கிறார்!"

"புரிகிறது!"

"பிணத்தைக் கூட
நடுவீட்டில் வைத்திருக்கலாம்,
குணம் கெட்டாரை
எடுத்தெறிந்து விடவேண்டும்!"

"என்ன சொல்கிறீர்?"

"முள் என்று தெரிந்த பின்னும்
உள்ளே வைத்திருக்காதீர்!"

மன்னன் புருவம்
உயர்ந்து தாழ்ந்தது!

"பரிவான யோசனையை
பரிசீலிக்கிறேன்!"
என்றான்.

பரிசீலிக்காது
இருந்துவிட்டான்!

"காதலிக்கு
துரோகம் செய்தவன்,
காவலனுக்கு
துரோகம் செய்வதற்கு
நேரமாகுமா?!"

அமைச்சர்
தனக்குள் வருந்தினார்.

மன்னனுக்கு
உப தளபதி உறவு!

உறவினன் என்பதால்
உதறாமல் இருந்தான்!

'கொடிதிலும் கொடிது
உறவுக்குள் பகை!'

அமைச்சருக்கு புரிந்தது
அரசனுக்கு புரியவில்லை!

அயல் நாட்டோடு
புயல் போன்ற போர்!

"அஞ்சிப் பதுங்கியிருந்து
கெஞ்சிப் பழகியவர்கள்
மிஞ்சத் துணிந்தது எப்படி?"
மன்னனுக்கு வியப்பு!

தோள் உயர்த்தி
களம் புகுந்தான் மன்னன்!

எதிரிப் படைகளுக்கு
அவன் வகுத்த வியூகங்கள்
அத்துப்படியாக இருந்தன!

"எவர் கொடுத்தார் தகவல்?"
மன்னனுக்குள் சந்தேகப் பொறி.

முதல் நாள் போரில்
மூக்குடைப்பட்டாயிற்று!

இரண்டாம் நாள் போரில்
திரண்டெழ வேண்டாமா?

படைகளை அழைத்து
தடை தாண்டும் வழிகூறி
உடை வாள் உயர்த்தினான்!

உயர்த்திய வாளை
இறக்காது பேசினான்:

"நமக்குள் பகை என்பதால்
நம் தாயை பிடித்து
தாரை வார்ப்பவர்
நாயிலும் கேடான
ஈனர் அல்லவோ!

என்னுடன் இங்கு
எவருக்காயின்
பகை என்றால்
என்னைக் கொல்லுங்கள்!

கண்ணிலும் மேலான
பொன்னான பூமியை
காட்டிக் கொடுக்காதீர்!"

வீரர்கள் யாவரும்
திகைத்து நின்றனர்!

"எதிரிக்கு தகவல்
எறிந்தது யார்?

எங்கள் வீரத்தை சாய்க்க
விலை போனது யார்?

முன்வந்து சொன்னால்
உயிரோடு விடுகிறேன்!"

ஓங்கிய வாளோடு
உரத்துக் கேட்டான்.

எவரும் வரவில்லை.
எவரும் வரவில்லை.

ஓங்கிய வாள்
சுழன்று வீசியது!

கண்ணிமைக்கும் நேரத்தில்
உபதளபதியின்
தலை உருண்டது!

அனைவரும் உறைந்தனர்
அதிர்ச்சியில்!

மன்னன் அழைத்தான்
அமைச்சரை!

வாரும் அமைச்சரே
பாரும் காட்சியை!

"உம் அறிவுரை
மறுத்ததால்
கொடுத்த விலை அதிகம்!"
என்றான் மன்னன்

அமைச்சர் தன்
வெண்தாடியை கோதியபடி,
அன்றொரு தாடிக்காரர்
திருவள்ளுவர் சொன்னதையே
திரும்பக் கூறினார்:

கண்ணுக்கு தெரியும் பகை
வாளைப் போன்றது;
அஞ்சாது நிற்கலாம்!

உறவைப்போலிருந்து
உள்ளிருந்தே
அழிக்கும் பகை
அரவம் போன்றது!
அஞ்சத்தான் வேண்டும்!

கண்ணுக்கு முன்னுள்ள
எதிரியைவிட
காலுக்கு கீழ் உள்ள
பகை கொடிது!
அதுதான் உட்பகை!
அடுக்கக்கூடாத பகை!

**"வாள் போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு!"**

அதிகாரம்: 89, குறள்: 882.

ஸ்போர்ட்ஸ்

## பாதி விலைக்கு விற்பனை

இங்கிலாந்தில் நடைபெறும் உலகக் கோப்பைப் போட்டியில் இந்திய வீரர்களின் அபார ஆட்டத்தைக் கண்டு களிக்க டிக்கெட்டுக்களை இந்திய இரசிகர்கள் வாங்கியிருந்தனர். முதலிரு போட்டிகளில் இந்தியா தோல்வியைத் தழுவியதால் தாம் வாங்கிய டிக்கெட்டுக்களைப் பாதி விலைக்கு விற்று வருகின்றனர்.

'இந்தியா விளையாடும் போட்டிகளுக்கான டிக்கெட்டுக்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விட்டன' என்று போட்டிகள் தொடங்குவதற்கு முன்பே அறிவிக்கப்பட்டது. இப்போது வாங்கிய டிக்கெட்டுக்களைத் திரும்பக் கொடுத்து வருவதால் இந்தியா விளையாடும் போட்டிகளுக்கான டிக்கெட்டுக்கள் உள்ளன. ஆனால் வாங்குவதற்குத்தான் ஆள் இல்லை.

## அப்பா வோர்ண்

அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண் இரண்டாவது ஆண் குழந்தைக்குத் தகப்பனாகியுள்ளார்.

கடந்த 20ம் திகதி காலையில் அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ண் நகரில் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு ஜாக்ஸன் என்று பெயர் வைத்துள்ளனர்.

அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற லீக் போட்டியின் போது, தனது இரண்டாவது வாரிசு குறித்து வோர்ண் அறிவித்தார்.

ஷேன் வோர்ண்-சைமன் தம்பதியினருக்கு 1997ல் ப்ரூக் என்ற பெண் குழந்தை பிறந்தது.

## இரசிகர்கள் கல்லெறி

உலகக் கோப்பை லீக் போட்டியில் இந்தியாவை, ஸிம்பாப்வே அணி 3 ஓட்டங்களால் வெற்றி கொண்டது. இதனால்



ஆத்திரமடைந்த இந்திய இரசிகர்கள் சிலர் ஸிம்பாப்வே வீரர்கள் சென்ற பஸ்மீது கல் வீசித் தாக்கினார்கள்.

இதேபோல் மைதானத்தை விட்டு வெளியே வரும்போதும், உடை மாற்றும் அறையில் இருந்த போதும் ஸிம்பாப்வே வீரர்களை நோக்கி இந்திய-இரசிகர்கள் சிறிய கேன்களை வீசினார்கள். இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே வேளை இந்தியாவில் உள்ள இரசிகர்களின் கோபம் கேப்டன் அஸாருதீன் மீது திரும்பியுள்ளது. கல்கத்தாவில் அஸாருதீனின் கொடும்பாவி, செருப்புமாலை அணிவித்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டது.

இதேபோல் பந்துவீச்சாளர் அஜித் அகார்கள் உருவப்படமும் எரிக்கப்பட்டது. 'அஸாருதீனை நீக்குங்கள், இந்தியாவைக் காப்பாற்றுங்கள்' என்று ஊர்வலத்தினர் கோஷமிட்டனர்.

## உதிரிச் சாதனை

உலகக் கோப்பை வரலாற்றில் 1992ல் பாகிஸ்தான், நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியில் 42 ஓட்டங்களை உதிரிகளாக (எக்ஸ்ட்ரா) விட்டுக் கொடுத்ததுதான் சாதனையாக இருந்தது.

இந்தச் சாதனை ஸிம்பாப்வே அணிக்கெதிரான போட்டியில் இந்தியா முறியடித்தது. இந்தியா 51 உதிரி ஓட்டங்களை வழங்கியது. இந்தச் சாதனை 24 மணி நேரத்திற்குள் அதாவது மறுநாள் ஸ்கொட்லாந்து அணியால் முறியடிக்கப்பட்டது. பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து 59 உதிரி ஓட்டங்களை வழங்கியது.

## "கற்றுக் கொள்கிறோம்"

உலகக் கோப்பைப் போட்டியில் சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசித்திருக்கும் தென்னாபிரிக்க அணி வகுத்த வியூகம் வித்தியாசமானது. தமக்கு எதிராக விளையாடும் ஒவ்வொரு அணியின் ஆட்டத்தைக் கணிப்பதற்காக ஆட்களை நியமித்துள்ளனர்.

தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மரும் இதனை ஒப்புக் கொண்டுள்ளார்.

"மற்ற அணிகளின் ஆட்டத்தைக் கவனிப்பதால் கூடுதலாகக் கற்றுக் கொள்ளவும் முடியும்; அவர்களின் பலவீனங்களைத் தெரிந்து கொண்டு பதிலடி கொடுக்கவும் முடியும்!" என்று கூறியுள்ளார் வூல்மர்.

## சிந்தியா பதில்கள்

❑ **சிந்தியா! ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சாதகமான முடிவு வர பா.ஜ.கட்சி ஆட்சியும் ஒரு காரணம் எனலாமா?**

வி.தயாளதேவ், கண்டி.

ஆம்! தீர்ப்புக்கு பின்னர் தற்போது வெளியாகும் செய்திகளும் புலிகளுக்கு சாதகமாகவே உள்ளன! ஊன்றிக் கவனித்தால் புரியும்!

❑ **சோனியா கட்சித் தலைமையை ராஜினாமா செய்தது ஏன்?**

ஆர்.பிரசாந்தி, கொழும்பு-07.

அமர்க்களமான நாடகம்! பதவிமீது மோகம் கொண்டவர்தான் சோனியா என்பது அவர் மாற்று அரசு அமைக்கப்பட்டபாட்டில் தெரிந்தது! சோனியாவும் சுயநலவாதி என்பது அவர் ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்தபோது தெரிந்தது! இந்த அபிப்பிராயங்களை மறைக்க அம்மையார் ஆடியிருக்கிறார் நாடகம்! அனுதாபம் திரளும் வரை ஆடிமுடித்தார்!

❑ **தொல்லை தவிர்ப்புக் குழுவின் நோக்கம் என்ன?**

சி.தர்மலிங்கம் வவுனியா.

மனித உரிமை மீறல்களை கவனிக்க இங்கு கலக்கலான அமைப்புக்கள் இருப்பதாக உலகின் காதில் பூ வைப்பதும் அதன் மூலம் அரசுக்கு உலக அரங்கில் ஏற்படும் தொல்லைகளைத் தவிர்ப்பதும்!

❑ **வெற்றி பெறுவதற்கு எது தேவை? அறிவா? அன்பா?**

திருமதி நளினா சோமசுந்தரம், மட்டக்களப்பு.

"உங்களைக் காப்பாற்றிக் கொள்ள அறிவை உபயோகியுங்கள்; அடுத்தவர் இதயங்களைக் கவர உங்கள் இதயத்தை உபயோகியுங்கள்!" இது எங்கோ படித்ததும் பதிந்தது.

❑ **சிந்தியா! உமது விமர்சனத்தை அடுத்து 'சக்தி' ரி.வியில் ஒளிபரப்பான விளம்பர வாசகம் மாற்றப்பட்டுள்ளது, பார்த்தீரா?**

எம்.புஸ்பலதா, கொழும்பு-11.

விமர்சனத்துக்கு மதிப்பளிப்பதும், தவறுகளைச் சுட்டிக் காட்டினால் திருத்துவதும் பெரும் தன்மை! அந்தப் பெரும் தன்மையை காட்டியிருக்கிறது சக்தி! இதனால் பெருமை நமக்கல்ல, 'சக்தி'க்கே!

❑ **'பாட்டுப்பாடவா' நிகழ்ச்சியில் சம்பந்தா சம்பந்தம் இல்லாது ஒரு பையன் அறிவிக்கிறாரே?**

கு.ரமா, மருதானை.

தமிழக சப்தஸ்வரங்களை விட 'பாட்டுப் பாட வா' ஆரம்ப இசை அமோகம்! சிறு பிள்ளைகள்கூட முணுமுணுக்கிறார்கள், தாளம் போடுகிறார்கள்! மோகன்ராஜ் திறமையான கலைஞர். ஆனால் இசை தெரிந்த ஒருவர் இனிய தமிழில் தொகுத்து வழங்கினால் நிகழ்ச்சி மெருகேறும் என்பதே எமது அபிப்பிராயம்! மோகன்ராஜ் கூட செய்யலாமே!



ரவீனா

❑ **கென்யாவுடன் டெண்டுல்கரின் விளாசல்?**

பி.பூபதி, கொழும்பு-06.

ஒரே சொல்:
'ஜீனியஸ்!'

❑ **நெத்தியடியான குட்டிக் கதை ஒன்று கூறுங்களேன்?**

செல்வி எஸ்.சுசிலாதேவி, சிலாபம்.

இங்கிலாந்து மன்னர் மூன்றாம் ஜோர்ஜ் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவர் அருகே அமர்ந்து ஹார்ன்டுக் என்னும் விகடகவி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

மன்னர் அந்த விகட கவியைப் பார்த்து: "எத்தனை முறை சீட்டு விளையாடக் கற்றுத் தந்திருக்கிறேன்? உங்களுக்கு ஏன் புரியவேயில்லை?" என்று சலிப்போடு கேட்டார்.



சச்சின் டெண்டுல்கர்

அதற்கு விகடகவி சட்டென்று சொன்னார்: "நான் என்ன செய்வது? எனக்கு ராஜாவுக்கும், ஜோக்கருக்கும் வித்தியாசம் தெரியவில்லையே!"

❑ **நடிகைகளின் கவர்ச்சி உண்மையா? போலியா?**

எம்.கே.வாஹிட், மன்னார்.

இரண்டும் கலந்தது!

❑ **பணம் குணத்தை மாற்றுமா?**

கே.ரவிகரன், அம்பாறை.

சிலரை மாற்றும்!

ஒரு குருவுக்கு சீடர் ஒருவர் இருந்தார். மிகுந்த பணிவுள்ளவர். யாரிடம் பேசும் போதும் வணக்கத்தோடு தான் பேசுவார். அடிக்கடி வந்து குருவைப் பார்த்து செல்வார்.

சில மாதங்களாக குருவைப் பார்க்க வருவது கிடையாது.

குரு ஒரு நாள் தன் சீடர்களுடன் யாத்திரை போய்க் கொண்டிருந்தார். அப்போது வழியில் ஓர் இடத்தில் அந்த சீடரைப் பார்த்தார்.

ஆனால் முன்பு போல அல்லாமல் கால்மேல் கால் போட்டு அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்த சீடர், குருவைக் கண்டதும், "என்ன சுவாமி நலமா?" என்று கேட்டார்.

குருவின் அருகிலிருந்த மற்றொரு சீடன்: "என்ன குருவே, இவர் இப்படி மாறிவிட்டார்?" என்று கேட்டார்.

குரு சிரித்துக் கொண்டே கூறினார்: "இவனுக்கு கொஞ்சம் பணம் கிடைத்திருக்கும் போலிருக்கிறது!"

❑ **புலிகள் கட்டாய இராணுவப் பயிற்சி கொடுப்பது தவறுதானே?**

வி.யோகேந்திரன், கம்பஹா.

கட்டாயமாக ஆள் சேர்ப்பதுதான் தவறு! இஸ்ரேல் போன்ற பல நாடுகளில் கட்டாய இராணுவப் பயிற்சி உண்டு!

❑ **இம்முறை உலகக் கிண்ணம் யாருக்கு என்று கூறும் பார்க்கலாம்?**

சி.ராஜசேகர், திருக்கோணமலை.

1. பாகிஸ்தான் 2. தென்னாபிரிக்கா 3. அவுஸ்திரேலியா. இந்த மூன்று அணிகளுக்கிடையேதான் கடும் போட்டி. பாகிஸ்தானுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது!

❑ **என் காதலர் உண்மையானவர்தானா என்று எப்படி நம்புவது?**

அ.சைலஜா, கொழும்பு.

உங்களுக்காக சமீபத்தில் படித்த கதை ஒன்று இருக்கிறது. படியுங்கள்:

சாலையில் சென்று கொண்டிருந்த பெண் ஒருத்தியை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஒரு வாலிபன்: "நான் உன் மீது எல்லையற்ற காதல் கொண்டுவிட்டேன்" என்றான்.

"என் சகோதரி எனக்கு முன்னால் போய்க் கொண்டிருக்கிறாள். அவள் என்னை விட அழகானவள்" என்றாள் அவள்.

அவன் வேகமாக முன்னால் ஓடி அவள் சகோதரியின் முகத்தைப் பார்த்தான். அவலட்சணமாக இருந்தாள்.

திரும்பி ஓடி வந்தான். தன் காதலியிடம் "ஏன் பொய் சொன்னாய்?" என்று கேட்டான்.

அதற்கு அவள்: "நீ மட்டும் உண்மையா சொன்னாய்? என்மீது எல்லையற்ற காதல் கொண்டது உண்மையானால், இன்னொருத்திக்காக ஏன் ஓடினாய்?" என்று கேட்டாள்.

❑ **வரும் தேர்தலில் சோனியா பிரதமராவாரா?**

கி.ஜெகன், நுவரெலியா.

ஆட்சியைக் கவிழ்த்தது மூலம் அந்த வாய்ப்பை இழந்துவிட்டார்! அவசரக்காரருக்கு புத்தி மட்டு என்பது சோனியா விஷயத்திலும் உறுதியாகிவிட்டது!

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 02

# இறைமகன் பிறந்தார்

ஆண்டவரின்தூதர், எலிசபெத் முதாட்டியாகிவிட்ட நிலையிலும் கருவுற்றிருக்கிறார் என்று கூறியதைக் கேட்ட மரியாள், உடனடியாக யூதேயாவுக்குச் சென்று அம் முதாட்டியைக் காணவேண்டும் என்று துடித்தார். முதாட்டி எலிசபெத் ஆண்டவரின் கருணையினால் கருவுற்றிருந்தால், அதே தூதரின் கூற்றுப்படி கன்னியாக இருக்கும் தானும் நிச்சயமாக ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும். அதுவும் தேவதூதனின் வாய் மொழிப்படி, தேவகுமாரனே தனக்குக் குழந்தையாகி வந்துதிக்கப்போகிறார் என்பதனால், அளவற்ற ஆனந்தம் கொண்டாள்.

அடுத்த நாட் காலையிலேயே கலிலியாவிலிருந்து யூதாவை நோக்கி மரியாள் புறப்பட்டார். எலிசபெத்தின் இல்லத்தை அடைந்ததும் "மாமி" என்று கத்திக் கொண்டு இல்லத்தினுள்ளே துள்ளி ஓடிச் சென்றார் மரியாள். எலிசபெத், தான் அன்னையாகப் போகும் பெருமிதத்துடன் பூரித்துப்போயிருந்தார். துள்ளி வரும் புள்ளிமான் குட்டியைப் போல் ஓடி வந்த மரியாளை திறந்த கையுடன் வரவேற்று வாரியணைத்தார் அந்த அம்மையார். இருவரும் சற்று நேரம் எதுவுமே பேசமுடியாதவர்களாக அன்புப் பிடியில் அரவணைத்த வண்ணம் இருந்தனர்.

எலிசபெத்தின் கருவுற்ற வயிற்றைத் தனது கைகளால் தடவிப் பார்த்து விட்டு தேவ தூதர் காபிரியேல் கூறிய வாக்குப் பொய்யில்லை என்பதற்கு உதாரணத்தைக் கண்டு விட்ட நிலையில், தனது நிலையை எண்ணியவராக அக மகிழ்வுடன் மரியாள் காணப்பட்டார். தேவதூதர் தன்னிடம் கூறியவற்றையும் எலிசபெத்திடம் மரியாள் கூறினார்.

### யோவான் பிறந்தார்

தனது மாமி எலிசபெத்துடன் மரியாள் மூன்று மாதங்கள் தங்கியிருந்தார். ஆண்டவர் தனது தூதர் மூலம் எலிசபெத்துக்கும் அவர் கணவர் சகரியாவுக்கும் கூறியதுபோல், உரிய காலத்தில் எலிசபெத்து அழகான குழந்தையைப் பெற்றெடுத்தார். தேவ தூதர் கூறியது போல் குழந்தைக்கு யோவான் என்று பெயரிட்டனர். குழந்தை பிறந்ததும், சகரியா ஆண்டவரைப் பிரார்த்தித்து தனது நன்றியைக் கூறினார். அப்போதே அவர் பேசும்சக்தியை மீண்டும் பெற்றார். ஆண்டவருடைய கருணையை வியந்து இஸ்ரயேல் மக்கள் அனைவரும் புகழ்ந்தார்கள்.

இதற்கிடையில் நஸ்ரேத் நகரில் மரியாள் கருவுற்றார். மரியாளுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த யோசேப்புக்குத் தகவல் தெரிந்ததும் அவர் சற்றுக் கலக்கமடைந்தார். திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்ததே தவிர இருவரும் எப்போதும் கூடிவாழவில்லை. [illegible]டியிருக்கும் போது, கன்னி வயிற்றில் கருவுருவாவது எங்ஙனம், என்று சிந்தித்துக் கொண்டிருந்த போதே யோசேப்பு தூங்கி விட்டார். அப்போது அவருடைய கனவில் தோன்றிய தேவதூதன், "தாவீது மன்னரின் வழித் தோன்றலாகிய யோசேப்பே! நீர் எதற்கும் கவலைப்படவேண்டாம். உமது மனைவியாக வாய்க்கப்பெறும் மரியாள் களங்கமற்ற கன்னியே! ஆண்டவரின் அருளினால் தெய்வீக ஆவி மரியாளின் கருவாய் உருவெடுத்துள்ளது. உங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தை மனுக்குலம் முழுவதற்கும் வழிகாட்டியாக விளங்கப்போகிறது. மன்னனுக்கு மன்னனாக அவதரிக்கும் அத் தெய்வீகக் குழந்தையால் இஸ்ரயேல் மக்கள் சமுதாயம் மட்டுமல்ல, மனித குலமே இரட்சிக்கப்படப் போகிறது. ஆகவே, மரியாளை உன் மனையாளாக ஏற்று மகிழ்ச்சியுடன் வாழ்வாயாக!" இவ்வாறு கூறிய தேவதூதர் மறைந்து விட்டார்.

"பிறக்கும் குழந்தைக்கு இம்மானுவேல் என்று பெயரிடுக" என்றும் தேவதூதன் கூறியிருந்தார். இக்கனவின் பின் யோசேப்பு தன்மன உளைச்சல்களெல்லாவற்றையும் மறந்தவராக, புதுத் தெம்புடன் காணப்பட்டார். மரியாளைத் தன் மனைவியாகவும் ஏற்றுக் கொண்டார்.



### குடிசனக் கணக்கெடுப்பு

உரோம சாம்ராச்சியத்தை ஆண்ட மன்னர்கள் நிர்வாக முறைகளை வகுத்தனர். பேரறிஞர்கள் பலர் கூடி அவ்வப்போது புதுப்புதுச் சட்டங்களை வகுத்தனர். அக்காலத்தில் சக்கர வர்த்தி அகஸ்டஸ் ஆட்சி புரிந்துவந்தார். சாம்ராச்சியத்துக்குட்பட்ட நாடுகள் அனைத்திலும் குடிசன மதிப்பினை எடுக்கக் கட்டளை பிறப்பித்தார். எந்தெந்த நாட்டில் எவர் பிறந்தாரோ அந்தந்த நாட்டிலேயே அவரவர் பதியப்பட வேண்டியிருந்தது. யோசேப்பு பெத்லகேமில் பிறந்தவர் என்பதனால், அவர் தன் மனைவியுடன் பெத்லகேமிலேயே பெயர் பதிவு செய்ய வேண்டியதாயிற்று. இதற்காக கருவுற்றிருந்த தன் மனைவி மரியாளையும் அழைத்துக் கொண்டு பெத்லகேம் புறப்பட்டார். நீண்ட தூரம் பயணம் செய்து இருவரும் பெத்லகேமைச் சென்றடைந்தனர்.

பெத்லகேம் வந்ததும் மரியாளுக்குப் பிரசவ வேதனை உண்டாயிற்று. அவசரமாக ஒரு தங்குமிடம் தேடினார் யோசேப்பு. எங்குமே அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. ஒரு வீட்டின் அருகே இருந்த மாட்டுக் கொட்டகை ஒன்றுதான் அவர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் அம்மாட்டுக் கொட்டிலை அடைந்ததும் மரியாள் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

ஒளி பொருந்திய முகத்துடன் அழகான அக்குழந்தையைக் கிடத்துவதற்கு, மாடுகளுக்கு உணவு கொடுக்கப் பயன் படுத்தப்படும் ஒரு பெட்டியை யோசேப்பு தயார் செய்தார்.

மரியாள் பெற்றெடுத்தது தேவகுமாரன் என்ற உண்மை மரியாளுக்கும் யோசேப்புக்கு மட்டுமே அப்போது தெரிந்திருந்தது. வேறு எவரும் இந்தத் தெய்வீக இரகசியத்தை அறிந்திருக்கவில்லை.

கிழக்கிலிருந்த ஞானிகள் பலருக்கு ஏற்கனவே, உலகை இரட்சிக்க இறைகுமரன் அவதாரம் எடுக்கப் போகிறார் என்ற தெய்வீக இரகசியம் தெரிந்திருந்தது. பெத்லகேம் இருந்த திசையில் ஒரு வால் நட்சத்திரம் தோன்றி மிகவும் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருந்தது. இதனை அவதானித்த ஞானிகள் சிலர் வால் நட்சத்திரம் தோன்றியுள்ள திசையிலேயே இறைமகன் பிறந்திருக்க வேண்டும் என்று நம்பினர். இறைமகனைக் கண்டுவிடவேண்டும் என்று உந்துதலினால் அவர்கள் புறப்பட்டு நெடுந்தூரம் பயணம் செய்து யூதேயாவை அடைந்தனர். எருசலேமில் ஆட்சி புரிந்த மன்னர் ஏரோதிடம் சென்றனர்.

### வழிகாட்டிய வால்வெள்ளி

இதற்கு முன்னர் வழி தடுமாறிய போது, தேவதூதன் அவர்கள் முன்தோன்றி "அஞ்ச வேண்டாம் பெரியோர்களே! ஆண்டவரின் திருக்குமரன் உலக மக்களை மீட்பதற்காக மண்ணில் பிறந்துள்ளார். தாவீதின் ஊரிலே ஒரு மாட்டுக் கொட்டகையில் துணிகளால் சுற்றப்பட்டு அப்புனிதர் படுத்திருக்கிறார். தூமகேது தோன்றியுள்ள திசையிலே சென்று ஆண்டவர் இயேசுவை அடையாளம் காணுங்கள்!" என்று கூறி மறைந்தார்.

ஞானிகள் எருசலேம் சென்று அரண்மனையிலிருந்த ஏரோது மன்னரைக் கண்டனர். மன்னரிடம்,

"யூத மக்களை மீட்கும் மீட்பராக-அவர்களின் ராஜாவாக அவதாரம் எடுத்த குழந்தை எங்கே இருக்கிறது என்பதை எங்களுக்குக் காட்ட முடியுமா?" என்று எதுவித கபடமுமின்றிக் கேட்டனர்.

இதனைக் கேட்ட ஏரோது மன்னர் வெகுண்டெழுந்தார். மக்களை வழி நடத்த தான் இருக்கும்போது மற்றுமொரு மீட்பர் தோன்ற முடியுமா? என்று மமதை கொண்டார். ஆனாலும் ஞானிகளிடம் தனது மனோநிலையினை வெளிக்காட்டவில்லை. சமாளித்துக் கொண்டு, "அவ்வாறான ஒரு குழந்தை எங்கே பிறந்திருக்கிறது என்று நாம் அறியவில்லை. நீங்கள் தேடிச் சென்று அறிந்து தகவலை என்னிடமும் கூறுங்கள்!" என்று கூறி அனுப்பிவைத்தார்.

ஞானிகள் அகன்ற பின்னர், நாட்டிலுள்ள ஆசாரியர் மற்றும் பிரமுகர்களை அரண்மனைக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டார். அவர்கள் வந்து கூடியதும், "யூதாமக்களை வழி நடத்தப்போகும் ராஜா பிறந்திருப்பதாக எங்கும் வதந்தி பரவியிருக்கிறதே, அத்தகைய பிள்ளை எங்கே பிறந்திருக்க முடியும்?" என்று ஆராய்ந்தறியுமாறு உத்தரவிட்டார்.

### இறைமகனைக் கண்ட ஞானிகள்

ஞானிகள் பெத்லகேம் நோக்கிப் புறப்பட்ட போதே நட்சத்திரம் அவர்களை வழி நடத்திச் சென்றது. தேவகுமாரன் இருந்த அதே மாட்டுத் தொழுவத்தின் மேலே நட்சத்திரம் வானில் நின்று, ஒளிக்கீற்றுகளை அக்கொட்டிலின் மீது பரப்பிக்கொண்டிருந்தது.

குறிப்பிட்ட மாட்டுக்கொட்டிலை அடைந்த ஞானிகள் அங்கே ஒளியே ஒளியுருவாகக் கொண்டதோ என்று கருதும்படி தெய்வீக அழகுடன் குழந்தை இயேசு விளையாடிக்

### இராஜகுமாரன்

கொண்டிருந்ததைக் கண்டனர். இது யூதாவை மட்டும் மீட்க வந்த பிறவியல்ல; முழு உலகையுமே ஆளப் பிறந்த அற்புதக் குழந்தை என்பதை எவ்வித ஐயமுமின்றி அறிந்து கொண்டனர். தேவபாலனின் தாயையும் தந்தை யோசேப்பையும் கண்டனர். சாஷ்டாங்கமாகத் தரையில் வீழ்ந்து வணங்கினர். தங்களுடன் கொண்டு வந்திருந்த காணிக்கைப் பொருட்களை குழந்தையின் கால் மாட்டில் வைத்து மீண்டும் மீண்டும் வணங்கினர்.

அவர்கள் மீண்டும் ஏரோது மன்னரிடம் போக வேண்டியதில்லை என்று தேவதூதன் கனவில் தோன்றி வேறு திசையால் அவர்களுடைய நாட்டுக்குப் போகும்படி வழிகாட்டினார். அதன்படி ஞானிகள் கிழக்கே தங்கள் நாட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

யூதாவை மீட்கவந்த ராஜாவின் பிறப்பைப் பற்றித் தன்னிடம் வந்து கூறுவதாகக் கூறிச் சென்ற ஞானிகள் இத்தனை நாளாகியும் தன்னிடம் திரும்பவில்லை என்பதனைக் கண்டு மன்னர் ஏரோது தான் ஏமாற்றப்பட்டுவிட்டதை உணர்ந்தார். தன் அரண்மனையில் உள்ள ஆசாரியர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார். அவர்கள் ஏற்கனவே பல தீர்க்க தரிசிகள் கூறியபடி பெத்லகேமில்தான் யூதாவின் வருங்கால ராஜா தோன்றியிருக்கலாம் என்று சொன்னார்கள்.

தனக்குப் போட்டியாக எவர் முளைத்தாலும் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்று குரூரமான திட்டத்தை மன்னர் வகுத்தார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 60 விடை** — தாவீது மன்னர்.

**பரிசு பெறுவோர்:**

1. இரா.விஜிதா, கந்தலேயா, நாவலப்பிட்டி.
2. மு.அ.உ.ஹபீபா, டிவிஷன்-01, பிரதான வீதி, புல்மோட்டை.
3. ஞா.சூரியகலா, 57, இறம்பைக்குளம், வவுனியா.
4. என்.ரதீஸ்வரன், பைப்வீதி, பாண்டிருப்பு-2, கல்முனை.
5. சி.தீபமலர், வர்ணமேடு, தம்பலகமம்.

**திருமறை 02** வினா (பு.ஆ):- தேவ குமாரனைத் தேடி வந்த ஞானிகள் எத்திசையிலிருந்து வந்தார்கள்?

ஜூன்.05 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை பு.ஆ.02—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# கூட்டுக் கடிதம்

**இது யாரால் யாருக்கு எழுதப்பட்டது என்பதை உங்கள் ஊகத்திற்கு விட்டு விடுகிறோம்.**

மாண்புமிகு.........
..................

*சிரம் தாழ்ந்த வணக்கம். இது நாம் எழுதும் மடல்! அல்ல அல்ல கடிதம்! அதுவும் இல்லையானால் விண்ணப்பம் என்றும் உங்கள் எண்ணப்படி வைத்துக் கொள்ளலாம்.*

*இந்த ஆண்டுக்குள் இனப்பிரச்சனை தீர்க்கப்படும் என்று தாங்கள் கூறியதும் எங்கள் மார்புகள் துடித்துவிட்டன.*

*இனப்பிரச்சனையை ஒரேயடியாக நீங்கள் தீர்த்துவிட்டால், பின்னர் நாங்கள் எப்படி அரசியல் நடத்த முடியும் என்று சிந்தித்தபோது தலை சுற்றியது.*

*இனப்பிரச்சனையை தீர்ப்பது என்றால் புலிகளை ஒழிப்பது என்பதுதான் அர்த்தம் என்பதை மக்களுக்கு நாம் கூறாதுவிட்டாலும், நாம் அதனை நன்கு அறிவோம்.*

*புலிகளை ஒழித்துவிட்டால் எங்களையும் கழித்துவிடுவீர்கள் என்பதும் நாமறியாதது அல்ல.*



*நீங்கள் அதனை செய்ய மறந்தாலும் கூட, நாமே நமக்குள் மோதி அந்த புண்ணிய காரியத்தை நிறைவேற்றி, தாங்கள் எண்ணிய கருமம் முடித்துவிடுவோம்!*

*புலிகளும் அழியக் கூடாது. அதேசமயம் புலிகள் பலமாகவும் இருக்கக்கூடாது. நீங்களும் வெல்லக்கூடாது. அதே சமயம் நீங்களும் தோற்கக்கூடாது.*

*குறைந்த பட்சம் எங்கள் கட்சிகளின் தலைமைகளுக்கு தலா இரண்டு வீதம் பாராளுமன்ற ஆசனங்கள் தேர்தலில் கிடைக்கக் வேண்டும். அந்தப் பெரும் பேற்றினை அடைய தேர்தல் நடத்த வசதியாகவும் குறிப்பிட்ட பிரதேசங்கள் தங்கள் ஆள், அம்பு, சேனையின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.*

*அதேசமயம் அங்கு சமூக நிலையும் மலர்ந்துவிடக்கூடாது. அப்படியொரு நிலை ஏற்பட்டால் நம்மைவிட நல்லவர்கள், வல்லவர்கள் தேர்தலில் குதித்து எங்கள் ஈஸ்ட்மென்ட் கலர் கனவுகளை நாசமாக்கி விடுவார்கள்.*

*புலிகள் இருந்தால்தான் எம்மைவிட வேறு எவரும் தேர்தலில் போட்டியிட நடுங்குவார்கள். அதையும்மீறி யாராவது போட்டியிட்டால் நாமே புலிச்சாயம் பூசி, தீவிர புலி எதிர்ப்பு உணர்ச்சியுடன் காட்டித் தந்துவிடுவோம்.*

*என்றாலும் நாம் போட்டியிட உத்தேசித்துள்ள பகுதிகளில் புலிகள் அதிகமாக நடமாடவும் அனுமதித்துவிடக்கூடாது. எங்களுக்கு சவாலான சக்திகள் தேர்தலில் குதிக்க பயப்படும் அளவுக்கு புலிகளது நடமாட்டம் இருந்தால் போதுமானது.*

*அதனை உத்தேசித்தே கைவிரல் சூப்பும் சிறாரை கைது செய்தால்கூட நாங்கள் காணாததுபோல இருக்கத் தீர்மானித்துள்ளோம்.*

*இவ்வாறு பலதரப்பட்ட இனநலன் சார்ந்த பொறுப்புள்ள அரசியல் கட்சிகளான எம்மை தாங்கள் கைவிட எண்ணலாமா?*

*மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் போன்ற வெளியார் தலையீடு இல்லாமல், அழுத்தம் இல்லாமல் பல யுகமானாலும் இங்கு தீர்வு கிட்டாது என்பது எங்களுக்கு தெரிந்ததுதான்.*

*என்றாலும் திடீர் திடீரென்று கடந்த பல ஆண்டுகளாக, 'இந்த ஆண்டுக்குள் பிரச்சனை தீரும்' என்று கூறி எங்களை ஆண்டுக்கு ஒரு தடவையாகிலும் மிரட்டிவருகிறீர்கள்!*

*அப்படி மிரட்டிப் பார்ப்பதுதான் தங்களுக்கு திருப்தி என்றால் எங்களுக்கு சந்தோசமே! தங்கள் திருப்தியே, எங்களுக்கு அபிவிருத்தி!*

*இனப்பிரச்சனை தீர்வுக்கு இப்போது என்ன அவசரம்? நாங்கள் தற்போது கொழும்பில் இருந்து அரசியல் நடத்திவருகிறோம். அமைச்சு பெருமக்களோடு அளவளாவ சிங்கள மொழி கற்று தேர்ச்சி பெற்றுள்ளோம்.*

*வடக்கு-கிழக்கிலும் சேனைகளோடு அளவளாவி செந்தமிழ் மக்களும் சிங்களம் கற்று வருகின்றனர். இதுவே மொழிப் பிரச்சனைக்கு தக்க தீர்வாகும். இப்படியே போனால் ஒரே மக்கள் ஒரே இனம், ஒரே நாடு என்ற கொள்கை நாடெங்கும் குடியேறிவிடும்.*

*அதனால்தான் இனப்பிரச்சனையை உடன் தீர்க்குமாறு நாம் கோருவதில்லை.*

*எம் மனப்பிரச்சனையை உடன் தீருங்கள்.*

*எம் மனப் பிரச்சனைக்கு உடனடித்தீர்வு தங்களின் கையில் உள்ளது.*

*அதுதான் வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல்!*

*தயவு கூர்ந்து சிந்தியுங்கள்!*

பி.கு:- தேர்தல் நடத்தப்படுமானால், கூட்டாக எழுதப்பட்ட இக் கடிதத்தை கிழித்துவிடவும்! ஏனெனில் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் எங்கள் கூட்டும் கிழிந்துதுதுதுவிடும்.

தங்கள் பணிவுள்ள
........................

# தமிழ்க் குடிமகன் எழுதும் கடிதம்

அன்புள்ள ஐயா!

*உங்கள் துப்பாக்கியை தயார்படுத்த முன்னர் இக் கடிதம் உங்கள் கையில் கிடைத்திருந்தால் நான் பாக்கியசாலி.*



*வவுனியா நகருக்குள் வைத்து என்னைப் பார்த்து தாங்கள் சிரித்தீர்கள். தெய்வீகச் சிரிப்பைய்யா அந்தச் சிரிப்பு. அதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனாலும் என்னால் பதிலுக்கு சிரிக்க முடியவில்லை. திரு திருவென்று முழிக்கத்தான் முடிந்தது.*

*என் திருட்டு முழியைப் பார்த்தும், நான் சிரிக்காததை வைத்தும் என்னை உங்கள் எதிர் இயக்க ஆதரவாளராக நினைத்து மண்டையில் போட விரைந்து வரவேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.*

*உங்கள் எதிர் இயக்க உறுப்பினர் ஒருவர் அங்கு தென்பட்டதாலேயே நான் தங்களைப் பார்த்து சிரிக்கவில்லை.*

*தொடர்ந்து உங்கள் மேலான இயக்கத்துடனும், தங்களுடனும் கடிதம் மூலமாகவோ, தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்ளவே ஆவலுற்றுள்ளேன்.*

*எனவே, தயவு கூர்ந்து வழியில் தங்களைக் காணும்போது, முன்பின் அறியாத மூன்றாம் மனிதரைப் பார்ப்பது போல் நான் நோக்குவதை மன்னிக்குமாறு முன்கூட்டியே கேட்டுக்கொள்கிறேன்.*

*என் உதடு சிரிக்காதுவிட்டாலும், என் உள்ளம் சிரிக்கும் என்பதை நினைவில் வைத்திருக்குமாறு, அன்றொரு நாள் வரியாகத் தந்த ஐயாயிரம் ரூபாவின் பேரில் கேட்டுக் கொள்கிறேன்.*

பி.கு:- இதே போல ஒரு கடிதம் உங்கள் எதிர் இயக்க உறுப்பினருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இங்ஙனம்,
தமிழ்க் குடிமகன்.

**காதிலை பூ கந்தசாமி**



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)


அருள் ஜுவலர்ஸ்
AROL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

↓ அவுஸ்திரேலிய அணியின் கப்டன் ஸ்டீவ் வோவ். மார்க் டெய்லரின் பின் அணிக்கு தலைமை தாங்குகிறார்.

இடையே சில போட்டிகளில் ஸ்டீவ் வோவ் உடல் நலம் பாதித்து ஓய்வெடுக்க, ஷேன் வோர்ன் தலைமை ஏற்றார். வெற்றிகளும் பெற்றுக் கொடுத்தார்.

இப்போது அவுஸ்திரேலிய அணிக்குள் சின்னச் சின்ன விரிசல்கள். ஸ்டீவ் வோவ் ராசியில்லாத கப்டன். ஷேன் வோர்ன் கப்டனாக இருக்கலாம் என்று அணிக்குள் அபிப்பிராயம் இருக்கிறது.

ஆனாலும் ஸ்டீவ் வோவ் இலேசுப்பட்டவரல்ல. சகல துறை ஆட்டக்காரர். 255 போட்டிகளில் துடுப்பெடுத்தாடி 5 ஆயிரத்தி 724 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். சதம்1 அரைச் சதம் 34. அதிகப்பட்சம் 102. பந்து வீச்சில் 186 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். (இவை இந்த உ.கி.போட்டிகளுக்கு முற்பட்ட புள்ளிவிபரம்)

1987இல் அவுஸ்திரேலிய உலகக் கிண்ணத்தை பெற்றபோது ஸ்டீவ் வோவ் அந்த அணியில் இருந்தவர். இம்முறை அவரது தலைமையில் அணி வெற்றிக் கிண்ணம் கொய்யுமா? பார்க்கலாம்.

## தடுப்பாளர்



← அந்தரத்தில் பறந்து பந்தை 'லபக்' என்று ஒரே அமுக்காக அமுக்குபவர் ஜோன்டி ரோட்ஸ்.

தென்னாபிரிக்காவின் நம்பிக்கை நட்சத்திரம். உலகில் இன்றுள்ள கிரிக்கெட் வீரர்களில் அதி சிறந்த களத்தடுப்பு வீரர்.

இவர் திற்கும் திசையில் பந்து போனால் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டம் பெறுவதற்கு ஓடுவதற்கே யோசிப்பார்கள். நின்ற இடத்தில் இருந்தே விக்கெட்டுக்கு பந்தெறிந்து சாய்த்துவிடுவார்.

151 போட்டிகளில் துடுப்பெடுத்து ஆடி 3ஆயிரத்தி 572 ஓட்டங்களை குவித்துள்ளார். சதம் 01. அரைச்சதம் 16. அதிகபட்சம் 121. (இவை இம்முறை உ.கி. போட்டிகளுக்கு முற்பட்ட தரவுகள்)

எதிர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதில் தென் ஆபிரிக்க அணி சிறப்புற்று விளங்குகிறது. அநேகமாக அந்த அணியின் அனைத்து வீரர்களுமே களத்தடுப்பில் கச்சிதம். அவர்களுக்குள் ஜோன்டி ரோட்ஸ் அற்புதம்.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சாளர்களுக்கு அஞ்சுவதைவிட ஜோன்டி ரோட்ஸின் களத்தடுப்புக்குத்தான் எதிர் அணி துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்ம சொப்பனம்.

## ராசி





## சகலகலா வல்லவன்

↑ தென்னாபிரிக்க அணியின் மற்றுமொரு நம்பிக்கை நட்சத்திரம் ஜக்ஸ் கல்லிஸ்.

மிக்க குறுகிய காலத்தில் சகலதுறை ஆட்டக்காரராக முக்கிய இடம் பெற்றுவிட்டார். பந்து வீச்சில் சக்தி அனைத்தையும் பிரயோகித்து எதிர் அணியை தகர்த்தெறிய வல்லவர். துடுப்பாட்டத்திலும் சூரர்.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்பு மொத்தம் 65 போட்டிகளில் ஆடி 2 ஆயிரத்தி 127 ஓட்டங்களை குவித்திருக்கிறார். சதம் 05. அரைச்சதம் 12.

பந்து வீச்சில் 44 விக்கெட்டுக்களை பதம் பார்த்திருக்கிறார். ஜக்ஸ் கல்லிஸ், குளுஸ்னர், பொலக் மூவரும் தென்னாபிரிக்க அணிக்கு பந்துவீச்சில் பலம் சேர்ப்பவர்கள். இந்த மூவரையும் சமாளிக்க எதிரணிகள் திணறத்தான் வேண்டும்.

இம்முறை உலகக் கிண்ண லீக் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக மூன்று விக்கெட்டுக்களை துவம்சம் செய்த கல்லிஸ், 96 ஓட்டங்களையும் குவித்துதான் கிளப்பினார். லீக் போட்டியில் இலங்கை அணியை கிடு கிடுக்க வைத்ததும் இவரது பந்து வீச்சுத்தான்.

## முன்னேற்றம்




← சென்ற உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணியிடம் காணப்பட்ட வெற்றி பெறும் அலாதியான ஆர்வம், இம்முறை சிம்பாப்வே அணியிடம் இடம் பெயர்ந்துள்ளது.

'சிம்பாப்வேயுடன்கூட பெரிய அணிகள் தோற்கின்றனவே' என்று சிலர் ஆதங்கப்படுகின்றனர். அது தப்பு! சிம்பாப்வேயும் சிறப்பான அணிதான். சிம்பாப்வேயின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர் எடோ பிராண்ட்டஸ். உலகக் கிண்ணப் போட்டியில் இம்முறை களமிளங்கியுள்ள அணி வீரர்களில், அதிக அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளர் இவர்தான்.

பந்து வீச்சுக்கு தோதான இங்கிலாந்தின் ஆடுகளம் இவருக்கு கைகொடுக்கும்.

தற்போதைய உலகக் கிண்ணப் போட்டிதான் இவரது இறுதிப் போட்டியாக இருக்கும். பின்னர் இவர் அணியில் இருந்து ஓய்வு பெறக்கூடும்.

உலகக் கிண்ண போட்டிகளுக்கு முன்னதாக 56 போட்டிகளில் ஆடி, 64 விக்கெட்டுக்களை கொத்தியிருக்கிறார். சிம்பாப்வே அணி சிறப்பான அணியாக மாறுவதற்கு இவரது பங்கும் பாரியது.

## 28வது பிறந்தநாள் வாழ்த்து

ஜெயராஜ் குமாரின் (சார்ல்ஸ்)
அன்பு மனைவியான
**மேசி வின்சலா** 28.05.1999
அன்று தனது 28வது
பிறந்தநாளை கனடாவில்
தனது இல்லத்தில் வெகு
விமரிசையாகக்
கொண்டாடினார். இவரை
வாழ்த்துவோர்: அன்பு
கணவர், மச்சாள், மச்சான்,
பெரியப்பா, பெரியம்மா,
உறவினர்கள்-திருமதி
அமுதாஞ்சலி ஜீவன்,
கனடா-ரவி,லண்டன்-சதீஸ்,
கனடா-பத்மா,
மட்டக்களப்பு-உதயன், உஷா,
டுபாய்-கஜன் அண்ணன்,
நெதர்லாந்து-மகேசன்,
ராணி, நீர்கொழும்பு
சுபோகிலன்,
கொட்டாஞ்சேனை-டிசானி,
போல், சாந்தன் (சித்தப்பா)
மற்றும் நண்பர்கள்.
இறைவன் ஆசியுடன்
நலமுடன் வாழ
வாழ்த்துகின்றனர்.

தகவல்:
கணவர்,ஜெயராஜ் குமார் (சார்ல்ஸ்)
P.O.BOX - 30258, T.P. 427723,
தோஹா, கட்டார்.



திருமதி ஜெ.மேசி
வின்சலா (சுமதி)



படிப்பகம்

இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாத, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் மே 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.